www.tamilarangam.net



பல்முனைப் பேட்டி
சுரேஷ் பிரேமச்சந்திரன்

Registered in Sri Lanka.


விலை ரூபா 12.50

இலங்கையிலிருந்து வெளியாகும் ஜனரஞ்சக மாத இதழ்.

# அருவி

இதழ் 7

புரட்டாசி - ஐப்பசி




ஒலிம்பிக் - ஒரு பார்வை

இலங்கையைக் குலுக்கிய
## கண்ணிவெடி

இந்தியாவின் இலங்கைக் கொள்கை
## மாறும் பார்வைகள்

ARUVI - A POPULAR TAMIL MAGAZINE FROM SRI LANKA.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# உதயம்

உலகத்தின் வளப்பெங்கு
சூறை போனது?
வறுமை எப்படி
விதியென்றானது?

இருளினைத் துலவி
வாழ்வினைத் தேடும்
ஏக்கம் பொதிந்த
விழிகளே அறிக!

அழுதும் தொழுதும்
வழி பார்த்திருந்தும்
இரவில் சூரியன்
எமக்கென்று வாராது

எரிதலை கொண்ட
மனிதராய் எழுக! - இவ்
இரவினைப் பகலாக்கிப்
பொழிக!

இரவல் நிலவு
அழகென் றுலவும்
கனவு வானம்
இனிமேல் வெளுக்கும்!

உலகம் திகைக்க
தொடுவான் பிளந்து
இன்னோர் சூரியன்
இருளில் உதிக்கும்!

எழுக!

— மதுரகவி

www.tamilarangam.net

## மாறும் பார்வைகள்



எனவே இலங்கை தொடர்பான இந்தியாவின் கொள்கை என்ன என்ற ஒரு கேள்வி அங்கு இப்போது தலைதூக்குவதை இந்த ஈடாக்கங்கள் வழிசமைத்துள்ளன

## பார்சிலோனா ஒலிம்பிக்ஸ்




பார்சிலோனா ஒலிம்பிக்ஸ் ஆரம்பிக்கு முன்னரே பல திருப்பு முனைகளை அரசியல் மாற்றங்களின் பலன்களை எதிர்கொள்வதாய் அமைந்துவிட்டது.


தொடர்புகளுக்கு:
**Aruvi**
**P. O. Box: 1354**
**Colombo**
**Sri Lanka.**

## வாழ்வாங்கு வாழ்வமென...




சோலைகள் இருந்தன அழகும் இருந்தது. ஆனால் ரசனை மட்டும் எம்மிடமில்லை. உலகம் திரிந்து அழகை ரசிக்க உல்லாசப் பயணிகளாய் நாம் வரவில்லையே!

## அவசரத்தில் ஒரு கதை கேளு!



சபாஷ் கதாசிரியரே! கதையை ஒரு திறில்லாவே கொண்டு போறீர். கமோன், கதாநாயகன், கமோன்! ஒரு இளம் பெண்ணை இப்படிப் பரிதவிக்க விடுவியா? எழும்பு.

## உள்ளடக்கம்


| | |
|---|---|
| இதைக்கொஞ்சம் கேளுங்கள் | 2 |
| **சிந்தனை** | |
| வாழ்வாங்கு வாழ்வமென..... | 3 |
| **நாட்டுநடப்புகள்** | |
| இலங்கையை குலுக்கிய கண்ணிவெடி | 6 |
| **விளையாட்டு** | |
| பர்சிலோனியா ஒலிம்பிக் போட்டிகள் | 9 |
| **அயல்நாடு** | |
| இந்தியாவின் இலங்கைக் கொள்கை- மாறும் பார்வைகள் | 14 |
| **பேட்டி** | |
| இராணுவத் தீர்வு நிரந்தரத் தீர்வல்ல சுரேஷ் பிரேமச்சந்திரன் | 16 |
| **சிறுகதை** | |
| வாடகை நட்பு | 20 |
| **நாட்டு நடப்புகள்** | |
| பத்திரிகையாளர் ஆர்ப்பாட்டம் | 21 |
| **சிறுகதை** | |
| அவசரத்தில் ஒரு கதை கேளு! | 22 |
| **அறிமுகம் : நான்காவது பரிமாணம்** | |
| ஒரு மனிதன் | 24 |
| **நாட்டு நடப்புகள்** | |
| தமிழ் முஸ்லிம் பேச்சுவார்த்தை இணக்கம் காணுமா? | 26 |
| வாசகர் கடிதம் | 28 |
| **சினிமா** | |
| தளபதி | 29 |
| இலக்கிய ரசனை | 30 |
| சுவையான செய்திகள் | 32 |




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## இதைக் கொஞ்சம் கேளுங்கள்

பெற்றோலின் விலை திடீரென 3 ரூபாய் ஏறியது, பூமி அதிர்ச்சி இராணுவ நடவடிக்கைகளுக்கு மத்தியில். இன்னும் விலைகள் எவற்றில் என் நேரத்தில் கூடும் என்பது தெரியாது . ஆனுல் விலையேற்றம் நிட்சயம் ஏற்படத்தான் போகின்றன என்பது எமது நாணய மதிப்பு நாளுக்கு நாள் சரிகின்றதிலிருந்து தெரிகிறது. எமது நாணய மதிப்பு குறைந்தால் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யும் பொருட்களின் விலை தானாகவே அதிகரிக்குமென்பது வெளிப்படையானதே . மேலும் நம்நாட்டு உற்பத்திக்காக தருவிக்கும் மூலப் பொருட்களது விலைகள் உயரும் போது எம் உற்பத்திப் பொருட்களது விலையும் உள்ளூர்ச்சந்தையில் அதிகரிக்கவே செய்யும். மொத்தத்தில் மக்களின் வாழ்க்கைச் செலவு அதிகரிக்கிறது. இந்தச் சுமையை எவ்வளவு தூரம் மக்களால் தாங்கிக்கொள்ள முடியும் என்பதே இங்கு அச்சத்துக்குரிய கேள்வி.

மத்திய வங்கி நட்டத்தில் போவதாக அரசாங்கமே அறிவிக்கிறது. மற்றயநாடுகளிலொன்றால் இந்த அறிவிப்பைக் கேட்டதும் வங்கியில் வைப்புச் செய்திருந்த மக்களெல்லாம் நான்முந்தி நீ முந்தியென விழுந்தடித்து தங்கள் பணங்களை மற்றவர்களுக்கு முன் மீளப்பெற வேண்டுமென்று வங்கியின் முன் குவிவார்கள். ஆனால் இங்கு அதிசயமாக அப்படி நடக்கவில்லை . ஏனென்றால் மக்கள் இந்த அறிவிப்பை நம்பவில்லை. இது வங்கியை தனியார் மயமாக்குவதற்கு கூறப்படும் வெறும் சாட்டாகவே அவர்கள் கருதியிருப்பதுதான் காரணம்.

அரசாங்கம் தற்போது மேற்கொண்டுவரும் பொருளாதார மாற்றங்கள் நாட்டின் அபிவிருத்திக்கான திட்டங்களின் பிரகாரம் உருவானதா அல்லது வெளிநாடுகளின் கடன்களுக்கும் உதவிகளுக்கும் மீள முடியாத அளவு கடமைப்பட்டுப் போனதன் நிமித்தம் அந்நாடுகள் மற்றும் ஐ.எம்.எவ், உலகவங்கி போன்றவற்றின் நிர்பந்தங்களுக்கு விட்டுக் கொடுக்க வேண்டி ஏற்பட்டவையா? அண்மையில் பெருந்தோட்டங்கள் தனியார் கம்பனிகளின் நிர்வாகத்திற்கு மாற்றப்பட்டது. இ.போ.ச போக்குவரத்து சேவை மாற்றப்பட்டுவிட்டது. பல அரச கூட்டுஸ்தாபன நிறுவனங்களும் இன்னும் வெளிநாட்டுத் தனியார் கம்பனிகளிற்கு மாற்றப்படும் நிலையில் உள்ளன. தனியார் மயமாக்கல் நன்மையா தீமையா என்று இங்கு ஆராய முற்படவில்லை. உலகின் பல நாடுகளிலும் ஆரம்பத்தில் தனியார் துறைகள்தான் இருந்தன. பின்னர் அத்துறைகளில் தொழிலாளர்களின் நலன்கள் குறித்து பலத்த போராட்டங்கள் எழும்பியதால் அரசமயமாக்கப்பட்டன. அரசமயமாக்கப்பட்டவற்றில் ஊழல், மந்தநிலைமை, அதனால் நட்டங்கள் ஏற்பட்டமையால் மீண்டும் தனியார் மயமாக்கப் பட்டன. இவ்வாறு தனியார் மயமாக்கலுக்கும் அரச மயமாக்கலுக்குமிடையில் ஒரு சமரசமாக சமூக நல அரசுகள் (Welfare states) தோன்றின. அதாவது மக்களின் பொது நலன்களை கவனிக்கும் பொறுப்பை அரசின் பொறுப்பில் விட்டு தனியார் துறைகள் செயற்படுகின்ற நிலைமை. இலங்கையைப் பொறுத்தவரை மக்களின் நலன்கள் பலவற்றை அரசு கவனித்து வந்தது. அத்துடன் உற்பத்தித் துறைகள் பலதும் சேவைகள் பலதும் அரசின் கைகளில் இருந்தன . ஆனால் இவை படிப்படியாக மாற்றப்பட்டு வருகின்ற போக்கை இன்று காண முடிகிறது. இத்தகைய மாற்றங்கள் எதுவரை செல்லும் என்பது இதிலுள்ள முதலாவது அச்சம் . அதாவது கல்வி, சுகாதாரம் போன்ற அத்தியாவசியமான சேவைகளும் தனியார் மயமாகின்ற அளவு செல்லுமா என்பது. ஆனால் அது அந்த அளவுக்குப் போகுமென தற்போதைக்கு அஞ்சக் கூடியதாக இல்லை. எனினும் விலைகள் அரசின் கட்டுப்பாட்டில். இல்லாது போகின்ற அபாயம் உண்டு. தொழிலாளர்களின் அடிப்படை உரிமைகள் தொழில் உத்தரவாதங்கள் பாதுகாக்கப்படுவது குறித்த அச்சம் உண்டு. வருமானத்தில் எவ்வளவு பங்கு நாட்டுக்கு வரும் எவ்வளவு வெளிநாட்டுக்குச் செல்லும் என்பதும் கேள்வி. இவ்விடயங்களை கவனத்தில் எடுத்து அதற்கான சரியான பரிகாரத்துடன் தான் அரசு இம் மாற்றங்களைச் செய்து வருகிறதா என்பதே இங்கு எமக்குள்ள பிரதானமான விடயம். மக்கள் இங்கு ஏற்பட்டுவரும் பொருளாதார மாற்றங்கள் பற்றி எவ்வளவு தூரம் விளக்கத்துடன் இருக்கிறார்கள், அக்கறையுடன் இருக்கிறார்கள் என்பன கேள்விகள். மக்களோ உள்நாட்டின் யுத்த ஆர்பாட்டக் கெடுபிடிகளில் தம்மைச் சூழ்ந்து வரும் பொருளாதாரப் பிரச்சனைகளை மறந்திருக்கிறார்கள். விலைகள் கூடும் போது மட்டும் கைகளை உதறிப் பயனில்லை. விலைகளை உயர்த்துகின்ற காரணிகளுக்கெல்லாம் மௌனமாக இருப்பதாலோ, கைதட்டுவதாலோ ஒருவகையில் ஒத்து நின்று கொண்டு கடைவாசல்களில் மட்டும் முணுமுணுப்பதில் அர்த்தமில்லை. □



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# வாழ்வாங்கு வாழ்வமென....

போகிறோம். கையசைத்து, விழி நீர் வழிய, குளறும் நாவில் சொற்கள் குலைய, பிரிய மறுத்துப் பார்த்துப் பார்த்துப் பின்புறமாக நடந்தபடி.....

விதி ஒரு விமானமாக வந்திறங்கி எமக்காகக் காத்திருக்கிறது. இந்தப் பயணம் எங்கே போகிறது? நேரத்துக்கு நேரம் நேரம்மாறுகின்ற காலத்துக்கெதிரான பயணம். கடல் கடந்து வான் வெளிகளை ஊடறுத்து சூரியனைத் தேடிப் போகிறோமா? ஆம். எம் வாழ்வுக்கு இன்னொரு சூரியன் எங்கேனும் இருக்குமென்று தேடுகிறோம். உலகத்தின் மூலை முடுக்கெல்லாம் சிதறிப் போய்த் தேடுகி றோம். எல்லோருமாக.

நாம் வந்திறங்கிய மண்மீது வரவேற்புக்கு விரிக்கப்பட்ட கம்பளம் போல பனி படர்ந்திருக்கிறது. உடல் சிலிர்த்துக்கொள்கிறது. ஆங்கிலச் சினிமாக்களின் உல்லாச புரிகளை திரைகளில் மட்டும் கண்டு ஏங்கிய விழிகளுக்கு நிஜதரிசனம் கிடைக்கிறது. பிரிவால் அழுது வாடிக் கிடந்த இதயத்தின் பள்ளத்துக்குள் ஆச்சரியம் வந்து நிரப்பிக் கொள்கிறது. கால்கள் புதைந்தபனியின் விறைப்பு ஊசியாய்க் குத்தி உணர்த்திய பின்னர் தான் இம்மை திரும்பி நடக்க முனைகிறோம்.


எங்கும் செல்வத்தின் செழிப்பு. மின் விளக்குகளின் ஜொலிப்பு. வானுயர்ந்த கட்டடங்கள். அகன்ட பெரும் நெடுந்தெருக்கள். இந்த உலகம் விரிந்து கிடப்பதைக் கண்டோம்.

ஒருவரை ஒருவர் மிதித்துக் கொண்டு, வாழ்வை நிதமும் சபித்துக் கொண்டு, இப்போ எண்ணி விசனித்துக்கொள்கிறோம். கறையான் அரித்த ஏடுகள் போல கடந்த நாட்களைத் தூக்கி வீசுவோம்.

இப்போது எமது வாழ்க்கை புதியது. எம் தந்தையர், பாட்டனார் கண்டிராதது. எங்கள் பெயர்கூட மாறிப் போச்சு. ஒன்றே குலமென்று உரைத்தது போல எல்லார்க்கும் ஒரு பெயர் பொதுவாய் ஆச்சு. அகதிகள் ஆயினோம்.

சாதியென்ற பேதமில்லை. மதங்களென்ற பிரிவுமில்லை: குலமென்றும் கோத்திரமென்றும், யாரெந்த ஊரென்றும் கேள்விகட்கு இடமேயில்லை. ஆணுமில்லை, பெண்ணுமில்லை. அனைவர்க்கும் ஒரே பெயர். அகதி! அழகானதல்லவா?

அகதிகள் என்பதால் நாங்கள் கேவலமானவர்கள் என்று மட்டும் எண்ணி விடாதீர்கள். கேவலமான அகதிகளும் இருக்கிறார்கள். அவர்கள் இந்தியாவிலும் இலங்கையிலும் வாழ்க்கையின் சிலுவையில் அறையப்பட்ட பாவிகள். அவர்களுக்காகப் பிரார்த்திப்போம். அவர்கள் ஏழை அகதிகள். நாமோ பணக்கார அகதிகள். அவர்களுக்கும் ஏன்தான் அகதியென்ற பெயரைச் சூட்டினார்களோ? அகதி என்பது எவ்வளவு பெருமையான பெயர்! இரவிரவாய்க் கண்விழித்துப் படித்துப் பல்கலைக்கழகம் புகுந்து, எம்ஏ, பீஏ, எம்பீபீஎஸ் என்று பட்டதாரிகள் எடுக்கும் பட்டங்களைவிட அகதிப் பட்டம் பெறுமதி வாய்ந்தது. அவர்களே தங்கள் பட்டப் படிப்புகளை




**வாழ்வாங்கு வாழ்வமென வந்தோம்.**
**வந்தும்,**
**வாழாது வாழ்கின்ற வாழ்வினை வாழ்வதில்**
**வேதனை தவிர வேறென்ன கண்டோம்?**
**வாராது வந்த வாழ்வென்று வெறும்**
**வார்த்தைகளால் மட்டும் விளம்பிக் கொண்டோம்.**
**வாழ்ந்தாக வேண்டுமென்று வாழ்கிறோம்.**
**எம்,**
**வாழ்வினை நம்பி வாழ்பவர்க்காக.**

உடலும் சுருங்கி உள்ளமும் சுருங்கி, இதுவரை வாழ்ந்த இன்பமான உலகை உதறிவிட்டு இங்கு ஓடி வந்து சேருவ





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

திலிருந்தே இது புரிகிறதல்லவா? எமது மதிப்புக்கள் பல்கலைக் கழகங்களாலோ, எமது தொழில்களாலோ தீர்மானிக்கப் படுவதில்லை. ஏஜென்சிகளின் கட்டணத் தொகையால் தீர்மானிக்கப் படுகிறது. ஒரு கனேடிய அகதியின் இன்றய மதிப்பு குறைந்தது நான்கு லட்சம் ரூபாய்!

இப்போதெல்லாம் செத்தவீட்டு விளம்பரங்களிலோ, மற்றும் கல்யாண வீடு, பிறந்தநாள் வாழ்த்து விளம் பரங் களிலோ, முன்னர்போல அடைப்புக் குறியுள் எமது படிப்பின் பட்டங்கள் இடப்படுவதில்லை. மாறாக "தங்கள் பிரிவால் துயருறும் மகன் லோகேஸ்வரன் (கனடா), மருமக்கள் கலா, ரூபி (இங் கிலாந்து) ...." இப்படி எம் அகதிப் புகலிடங்களே பெருமைச் சின்னங்க ளாகக் குறிக்கப் படுகின்றன. சரணாக தியென்று நாம் பற்றின பாதங்களுக் கேற்ப எம் மதிப்புக்கள் உயர்கின்றன. இருந்த போதிலும்.....

இனி நாம் உண்மைகளுக்குப் போவோம். நாமும் அழுகிறோம். நம்புவீர்களா? தண் ணீரிலே மீன் அழுதால் கண்ணீரைத்தான் யாரறிவார் என்ற பாடல் வரிகளைப் போல எமது அழுகை. விசும்பிக் குமுறி, இதயம் குலுங்க "கோ" வென்று கதறி அழவேண்டிய அழுகை. அதுகூட முடங் கிச் சுருண்டு எங்கோ இதயத்தின் மூலையில் தனித்து நின்று மௌனமாய் அழுகின்றது. ஆம், அழுகிறோம். எமக் குள்ளேயே.

வரும்போது வனப்புமிகு சோலைக ளென்ற கனவோடு கால்வைத்த வெளி நாடு, இன்றும் எமக்கு அப்படியே இல் லை. சோலைகள் இருந்தன. அழகும் இருந்தது. ஆனால் ரசனை மட்டுந்தான் எம்மிடம் இல்லை. உலகம் திரிந்து அழகை ரசிக்க உல்லாசப் பயணிகளாய் நாம் வரவில்லையே! எம் அவலங் களைத்தான் காவித்திரிந்து ஒவ்வொருவர் முன்னும் மண்டியிட்டு கருணையை யாசித்துக் கையேந்தச் சென்றோம். வேடிக்கை பார்க்க இது வொன்றும்

**கொல்லையும் குறிச்சியும் கொப்பாட்டன் பெயரும் உரசிப் பார்த்துச் சாதி பிரிக் கும் புடம் போட்ட சாதியின் தங்கத் தோல் கூட வெள்ளையர் முன்னால் மங்கித்தான் போனது. அதுதான் பரிதாபம்!**

நாடகமல்ல. ஆயினும் வேடிக்கை இருந் தது. நாடகம் நடந்தது. விடுதலைக்காகத் தம் விரல்கூட உயர்த்தாதவர்கள் போராட் டத்தில் தங்கள் விழுப்புண்களைக் காட்டி னார்கள். சைக்கிள் பெடல் கீறிய காயம் கூட பயனெட்டால் குத்திக் கிழித்ததாய் மாறியது. அம்மைப்பால் குத்திய தழு ம்பை மட்டும் எல்லோர்க்கும் இருந்ததால் சொல்லாமல் விட்டார்கள். உண்மையாகப் பாதிக்கப்பட்டவர்கள் ஊமையாக மன தினுள் அழுதார்கள். நாடகம் முடிந்தது. வேடிக்கை முடிந்தது. அகதிகளாக வாழ்க் கை தொடங்கியது.

**விடிந்தாற் பறப்போம், இரவில் அடைவோம். வேலை வீடு, வேலை வீடு இதுதான் எமது வாழ்க்கை வட்டம்.**

சுதந்திரம் என்ற சொற்களுக்கான அர்த்தம் தேடி அலைந்தவர்கட்கு அகதி வாழ்க்கையில் சுதந்திரம் தெரிந்தது. தட்டிக் கேட்க யாருமில்லை. யாரையும் யாரும் மதிப்பதுமில்லை. நாடு என்றும் மக்கள் என்றும், இனமென்றும் மொழி யென்றும் எமக்கு எந்தப் பொறுப்பும் இல்லை. பண்பாட்டுக்கு இலக்கணமில்லை. நாளை பற்றிய கவலையுமில்லை. நேற்றைய நாட்க ளின் நினைப்பும் இல்லை. வீதிகள் செல் லும் பாதையை அறியா நாடோடிக் கூட்ட

**ஏக்கத்துடன் நாம் அண்ணார்ந் து பார்த்தோம். எமக்கு மேலே வானமிருந்தது. வானத்தின் மேலே விண்மீன்கள் இருந்தன. விண்மீன் வரைக்கும் விழிகள் சென்றன. அதையும் தாண்டிக் கற்பனை சென்றது. கால்கள் மட்டும் தரையோடு நின்றன.**

மாய் நாமும் அலைந்தோம்!

யாரும் எம்மைப் பார்ப்பதாய் தெரி யவில்லை. அருகே சென்றாலும் வெள் ளைக்காரர் எம்மைத் தம்மோடு சேர்ப்பதாய் இல்லை. இத்தனைக்கும் நாம் ஆங்கிலம் பேசினோம். பிள்ளைகள் பெயரிலும் ஆங்கி லம் பூசினோம். பிறெஞ்சும் ஜேர்மனும் ஆங்காங்கே உரைத்தோம். தமிழைத் தொலை த்து மறந்திட முயன்றோம். இருந்தும் எம்மீது கடைக்கண் விழவில்லை. இன்னும் எம்மை மனிதராய்க் காட்ட என்ன தேவை யென்று எமக்குப் புரியவில்லை. எமது கைகளைப் பின்புறம் புரட்டினால் கறுத் தத்தோலாய் இருப்பதைக் கண்டோம். கொல்லையும் குறிச்சியும் கொப்பாட்டன் பெயரும் உரசிப் பார்த்துச் சாதி பிரிக்கும் புடம் போட்ட சாதியின் தங்கத் தோல் கூட வெள்ளையர் முன்னால் மங்கித்தான் போனது. அதுதான் பரிதாபம்!

ஏக்கத்துடன் நாம் அண்ணார்ந்து பார்த்தோம். எமக்கு மேலே வானமிருந்தது. வானத்தின் மேலே விண்மீன்கள் இருந்தன. விண்மீன் வரைக்கும் விழிகள் சென்றன. அதையும் தாண்டிக் கற்பனை சென்றது. கால்கள் மட்டும் தரையோடு நின்றன.

எட்டாத பழங்கள் புளிக்கத் தொடங் கின. எமக்குள் ஏதோ உறுத்தத் தொடங் கியது. சுற்று முற்றும் திரும்பிப் பார்த்தால் புற்றீசல் போல் நாம் பல்கிக் கிடந்தோம். யாழ்ப்பாணத்துக் கிடுகு வேலியை இங்கே தருவிக்க வழியில்லை யெனினும் எப்படி. யோ பிரிவுகள் போட்டு எமது அந்தஸ்தை இங்கே நிறுவலாம். அந்தஸ்துக்கான புதிய வரையறை யாப்பதில் நாங்கள் மூளையைப் பிசைந்தோம். உழைத்த பணத் தை அந்தஸ்தாய் வைப்பதா, ஆங்கில அறிவை அந்தஸ்தாய் வைப்பதா, எடுக்கும் விழாக்களை அந்தஸ்தாய் வைப்பதா, எல்லாவற்றிற்கும் பொதுப்படையாக ஏதேனுமொரு அளவுகோல் உண்டா? எமக்கு இன்னும் முடிவாகவில்லை. ஒவ்வொருவரும் எதையெதை நினைத் தோமோ அந்தந்த அந்தஸ்தை அவரவர் நிறுவினர். நிறுவியபின்னர் மறுபுறம் திரும்பி மற்றவரைப் பார்த்துத் எள்ளி நகைத்தனர்.

இப்போது எமக்கு இன்னொரு கேள்வி. எங்கள் கலாச்சாரம் எப்படி அமையும்?



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கலாச்சார மென்பது தனித்து வத்தைக் காட்டுவது. எமக்கோ இரண்டும் கெட்டான் நிலை. வெள்ளையர் கலாச் சாரத்திற்கு மாறவும் முடியவில்லை. பண்டைய கலாச்சாரத்தைப் பேணவும் விருப்ப மில்லை. எப்போதும் சற்று வித்தியாச மாகக் காட்டவேண்டுமென்பது மட்டும் மனதின் ஆதங்கம். பெரிய சோதனை மொழிக்குத்தான் வந்தது. மொழியென்ற ஒரு தொடர்புச் சாதனம் அழகுபடுத்தப் பட்டு இலக்கியமாகிறது. தமிழின் அழ குக்கு குறையேதுமில்லை. இலக்கிய வளத் திற்கோ அளவேயில்லை. இருந்தும் எமக்குத் தமிழைப்பற்றி ஏதோ ஒரு தாழ்வுச்சிக்கல். படிக்காதவர்க்காய் ஒதுக் கப்பட்ட அஃறிணை மொழியாய் தமிழை நினைத்தோம். உயர்திணை யென்று ஆங் கில மொழியை அந்தஸ்துச் சின்னமாய் உதட்டினிற் பூசினோம். தமிழனைத் தமி ழன் சந்திக்கும் போதும் தமிழில் பேசுவது தரக்குறைவாகியது. தனது பிள்ளைக்குத் தமிழே தெரியாதென்று பெருமையாய் சொல்வதில் தாயுளம் பூரித்தது. தமிழே தெரியாத தமிழர் தலைமுறை வெளி நாடெங்கும் விரைவில் தோன்றும். வெட் கப்படவல்ல, பெருமைப்பட.

நேரம் பொன்னானது என்பது இங்குதான் உண்மையிலும் உண்மை. ஒவ்வொரு மணிநேரமும் இங்கு பொன் னாகிறது. வீணாக்குகின்ற ஒவ்வொரு மணியும் மண்ணாகின்றது. சந்திக்கின்ற ஒவ்வொரு தெரிந்தவனும் பொன்னான நேரத்தில் மண்ணள்ளிப் போட்டு விடுவானென்பதால் தெரிந்தும் கூடத் தெரியாதவன்போல் போய்விடுகிறோம். இரவின் உள்ளும் நேரம் ஓடுவதை இங்கு வந்தபின்தான் கண்டறிந்து கொண் டோம். அதனால் துயிலையும் விற்றோம். முதுகை நிமிர்த்தும் முள்ளந்தண்டுபோல் ஆன்மாவுக்கு ஓர்மம் தருவதாய் தன்மான மென்றும் கௌரவமென்றும் ஈகோ வென் றும் இருப்பதாய் சொல்வரே அதையும் கூட அடகுவைத்தோம். தொழிலில் இழி வில்லை! ஊரில் இருக்கும்போது புரியாத தத்துவம் இங்குவந்தபின்தான் எமக்கும் உதிக்குது. வாழ்நிலைதானே சிந்தனை யைத் தருகிறது.

இரவும் பகலும் உழைத்தாற்கூட நின்மதி மட்டும் எம்மிடம் இல்லை. கண் களை இறுக்க மூடிக்கொண்டு எந்தி ரம்போல உழைத்திடச் சொல்லி ஏதோ ஒருகரம் எம்மைத் தள்ளுது. திறந்த நாட் டில் இருந்தும் கூட பரந்த மக்களுடன் கலந்திட முடியாமல் ஒதுங்கிப் போய் நாம் ஒடுங்கி வாழ்கிறோம். பலரது வாழ்க்கை புறாக்கூண்டு அறைகட்குள். விடிந்தாற் பறப்போம், இரவில் அடை வோம். வேலை வீடு, வேலை வீடு இது தான் எமது வாழ்க்கை வட்டம். இடையில் யாரையும் சந்திக்க நினைத்தால் விண்ணப் பித்து அனுமதி பெறுவோம். தனிமைச் சிறையில் அடைபட்டு வதங்கும் வேலைக் குச் செல்லாத சீதைகட் கெல்லாம் இந்த அறைகள் இன்னோர் அசோகவனம்.


இதயத்தின் பள்ளத்துள் நிரம்பியிருந்த ஆச்சரியங்கள் உருகி வழிந்ததும் வேதனை மட்டும் மண்டிக் கிடக்குது. பெருமூச்சு இப்போது அடிக் கடி பிறக்குது. வீட்டுக் கூரைமேல் பனி தான் கொட்டினும் மனது மட்டும் புழுங்கி வெதும்பது. கிணற்றுத் தண்ணீரை அள்ளி முழுகி திண்ணைப் பாயில் மல்லாந்து படுத்த நாட்களை எண்ணி மனமோ ஏங்குது.

நாட்டிற்கு நாங்கள் அனுப்பும் பணமோ பல்கிப் பெருகி வெள்ளமாய் வருவதால் எம்மவர் கண்டு மலைத்து நிற்பர். மரக்கறி விலையிலும் பேரம் பேசி நான்கைந்து கடைகள் ஏறி இறங்கி மலிவைத் தேடும் எம்மவர் இப்போ சொன்ன விலைக்குக் கூடவும் கொடுப்பர். கண்மண் தெரியாமல் காசை வீசி எங்கள் பெருமையில் தம்பட்ட மடிப்பர். போலியாய்ப் பெருமையைப் போர்த்துக் கொண்டு மனதினுள்ளே அழுகிறோ மென்பதை யாரிடம் போய் நாம் வருத்தப்ப டுவது?

வறுமையிற் கூட வாழ்க்கை இருந் தது – இங்கோ, வெறுமையில் எமக்கு என்னதான் உள்ளது?

வாழ்வாங்கு வாழ்வமென வந்தோம்.
வந்தும்,
வாழாது வாழ்கின்ற வாழ்வினை வாழ்வதில்
வேதனை தவிர வேறென்ன கண்டோம்?
வாராது வந்த வாழ்வென்று வெறும்
வார்த்தைகளால் மட்டும் விளம்பிக் கொண்டோம்.
வாழ்ந்தாக வேண்டுமென்று வாழ்கிறோம்.
எம்,
வாழ்வினை நம்பி வாழ்பவர்க்காக.

□



இன்று வள்ளுவர் இலங்கையில் இருந்திருந்தால் தனது குறளில் ஒருசில மாற்றங்களைச் செய்ய நினைக்கக் கூடும். அவை இப்படி இருக்குமோ.......?

அகர முதல் எழுத்தையெல்லாம்
ஆங்கிலமாய் மாற்றுவதே அழகு.

★

ஈன்ற பொழுதின் பெரிதுவக்கும்
தன்பிள்ளை – பத்திரமாய்க்
கனடா போய்ச் சேர்ந்தானெனக்
கேட்ட தாய்.

★

கற்றதாலான பயனென் கொல்
யாமறியோம்
வெளிநாட்டில் வேலைகிடையா
விடில்

★

கற்கக் கசடறக் கற்றவை
கற்றபின்
விற்க அதை நல்ல விலைக்கு.

★

களவினால் ஆகிய ஆக்கம்
கடல்கடந்தால்
அளவிலாச் செல்வமாய் வரும்.

★

தோன்றில் விசாவொடு
தோன்றுக! அஃதிலார்
வெளிநாட்டைக் களவினிற்
சேர்தல் நன்று.

□



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# இலங்கையைக் குலுக்கிய
# கண்ணிவெடி



லெஃப்டினட் ஜெனரல்
டென்சில் கொப்பேகடுவ

ஆகஸ்ட் 8ம் திகதி கொழும்பு நகரின் சுறுசுறுப்பான காலை வேளையைக் கடந்து சற்று வெய்யில் உறைக்கின்ற நேரம். ஏதோ சற்று வித்தியாசமான பரபரப்பு சுற்றுமுற்றும் நிலவுமாற்போல் மெதுவான ஒரு தோற்றம். தொலைபேசி அழைப்புகள் குறுக்கும் நெடுக்குமாகப் பாய்ந்தன. அதிகரித்தன. பேசியவர்களின் முகங்கள் கலவரத்துடன் வடிவம் மாறின. குசுகுசுப்புகள் ஒவ்வொரு சந்திப்புகளிலும் தோன்றி வீடுகள் அலுவலகங்கள் யாவற்றிற்குள்ளும் நுழைந்து கொண்டன. மெதுவான பீதி படர்ந்தது. எல்லோரது சிந்தனைகளும் தங்கள் சொந்த அலுவல்களை விடுத்து பரவி வந்த செய்தியுடன் முட்டுப்பட்டு நின்றது. மாலை வானொலிச் செய்தி அனைவரது கலக்கத்திற்கும் விடையோடு வந்தது. ஆம் மேஜர் ஜெனரல் கொப்பேகடுவ, பிரிகேடியர் விஜய விமலரத்தின உட்பட மேலும் முக்கியமான கேணல்களுட்ன் பத்து இராணுவ உயர் அதிகாரிகள் கண்ணி வெடியொன்றில் ஒரேயடியாக மாண்டுவிட்டார்கள். என்பதுதான் அது.

இதுவரை நடந்த யுத்தத்தில் இலங்கை அரசுக்கு ஏற்பட்ட மிகப் பெரிய இழப்பு இது. அதனால் இந்தச் செய்தி அனைவரது முகங்களையும் வெளிறவைத்து விட்டது.

கொழும்பில் வசிக்கும் தமிழ் மக்களிடையே இன்னொரு பயப்பிராந்தி உள்மனதில் எழுந்தது. "கலவரம் வருமா?" அப்படி வராது என்று மற்றவர்களை தைரியப் படுத்திக் கொண்டாலும் ஒவ்வொருவரதும் அடிமனதில் "வந்தால்....?" என்ற பயம் இழையோடிக் கொண்டிருந்தது. இறந்த ராணுவத் தலைவர்களுடைய மரணச் சடங்கு நெருங்க நெருக்க இந்தப் பயம் அதிகரித்தது. மரணச்சடங்கன்று ஒவ்வொருவரும் அதிகம் வெளியே தலைகாட்டாமல் தங்கள் வீடுகளிலும் பாதுகாப்பான இடங்களிலும் நேரகாலத்திற்கே போய் இருந்துகொண்டு என்ன நடக்கப் போகிறதோ என்ற பீதியுடன் ஒவ்வொரு கணத்தையும் எண்ணிக் கொண்டு இருந்தார்கள். பொதுவாகவே ஒரு சிறிய விடயத்தையும் பெரிதுபடுத்தி யோசிக்கும் தன்மை கொண்ட இவர்களுக்கு அடிக்கடி 'அங்கே பதட்டமாம், இங்கே பதட்டமாம்' என்று வந்து போய்க் கொண்டு இருந்த வதந்திகள்வேறு வயிற்றைக் கலக்குவதாய் இருந்தது.

ஆனால்........

மரணச்சடங்குகளில் குளப்பங்கள் ஏற்படத்தான் செய்தன. எனினும் அது தமிழ் மக்களுக்கு எதிராக அல்ல. மாறாக அரசாங்கத்தரப்பிற்கு எதிராக. சிறிதாக.

ஏன்? இந்த மாற்றம்...? இது தான் எல்லோருக்கும் உடனடியாகப் பிறந்த கேள்வி. இது இரண்டு கேள்விகளை உள்ளடக்கிய ஒரு கேள்வி. அரசாங்கத்திற்கு எதிராக ஏன் இது திரும்பியது? தமிழர்களுக்கு எதிராக ஏன் இது திரும்பவில்லை.?

தமிழர்களின் வீரத்தைக் கண்டு சிங்களவர்கள் பயந்துபோய்விட்டார்களென்ற மதி கெட்ட வெறும் வீராப்புக் காரணங்களை ஒதுக்கி விடுவோம். அரசாங்கம் இப்படியான கலவரங்கள் ஏற்படக் கூடாது என்பதில் மிகுந்த அக்கறை காட்டுகிறது என்பது உண்மை. சகல பொலீஸ் நிலையங்களுக்கும் இப்படியான கலகம் விளைவிக்கும் சம்பவங்கள் நிகழ்ந்தால் கண்டதும் சுடும் படியான உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது. அரசாங்கத்திற்கு ஒருபுறம் இதனால் பொருளாதார நடவடிக்கைகள் பெருந்த பாதிப்புக்குள்ளாகி விடும்.

மறுபுறம் வெளிநாடுகளுக்குப் பதில் சொல்ல முடியாத நிலையில் அவற்றின் கடனுதவிகள் நிறுத்தப்படுமானால் பாரதூரமான நிலமை தோன்றும். அதே வேளை இந்தியா திரும்பவும் 1987ல் அழையாமல் தலையிட்டது போல் தலையிடக் கூடிய ஒரு வாய்ப்பையும் ஏற்படுத்திக் கொடுப்பதாகி விடும். ஆனால் அரசாங்கத்தையும் மீறி இந்தக் கலவரங்கள் ஏற்படாதா? முன்னரெல்லாம் அப்படியானால் எப்படி நடந்தன? அரசாங்கமும் சேர்ந்து நடத்தியதாகவல்லவா அவை ஆகும்? முன்னர் ஒன்றாக இருந்தவர்கள் இப்போது பிரிந்து நின்று ஒருத்தரை ஒருத்தர் குற்றம் சாட்டுகின்ற போது முன்னர் ஒத்து மறைத்திருந்த யாழ் நூலகம் எரிக்கப்பட்டது போன்ற சில சம்பவங்களின் காரணகர்த்தாக்கள் பற்றி இப்போது கூறுகின்றதைக் கேட்கின்ற





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

போது, அப்படியே அரசாங்கம் சேர்ந்து தான் செய்திருக்கின்றது என்று பலரும் எண்ணக் கூடும். அதனால் கலவரம் வருவதானால் கூட அதை அரசாங்கம் கொண்டுவருவதானால் கொண்டுவர முடியுமேயன்றி அரசாங்கத்தின் விருப்பத்திற்கு மாறாக மற்றவர்களால் கொண்டுவர முடியாது என்பது தான் இதற்குக் காரணமா? முன்னைய தலைமுறையினரிலிருந்து இன்றைய தலைமுறையினருக்கு ஓரளவு சிந்தனை மாற்றம் ஏற்பட்டிருப்பதுவும் இதற்கு காரணமாக இருக்கலாம். இந்த இடைக்காலத்தில் சிங்கள மக்களிடையே சரிபிழைகள் எப்படியிருப்பினும் ஒரு போராட்டம் எழுந்து மறைந்து போயுள்ளது. அதன் தாக்கங்களும் சமூகத்தில் சில உணர்தல்களை ஏற்படுத்தியுள்ளன. இதன்படி படிமுறைகள் ஒரு மட்டத்திலாவது குறிப்பாக இளம் சந்ததியினரிடையே விரிவாக சிந்திக்கக்

**இதுவரை நடந்த யுத்தத்தில் இலங்கை அரசுக்கு ஏற்பட்ட மிகப் பெரிய இழப்பு இது. அதனால் இந்தச் செய்தி அனைவரது முகங்களையும் வெளிறவைத்து விட்டது.**

கூடிய ஆற்றலை ஏற்படுத்தியுள்ளது. இதனால் அப்பாவி மக்களைப் பழிவாங்குவது ஒரு அர்த்தமற்ற செயல் என்ற புரிதல் இவர்களிடையே ஏற்பட்டிருப்பதுவும் இதற்கு காரணமாக இருக்கலாம். இருப்பினும் இது அரசியற்தீர்வொன்றை வலியுறுத்துமளவு பலமானதாக இல்லை. யுத்தத்தையும் அழிவுகளையும் வெறுத்தாலும் யுத்தம் புரியும் படையினர்பால் உயர்ந்த மதிப்பு இங்கு ஏற்பட்டு உள்ளது. இது வரை யுத்தத்திற்கு ஆதரவாக மேற்கொள்ளப்பட்ட பெருத்த அளவிலான பிரச்சாரத்தின் காரணமாக இருக்கலாம். இப்படியான பிரச்சாரங்களில் படையினர் நாட்டின் சகல இன மக்களையும் பாதுகாப்பவர்கள் என்ற கருத்துக்குப் பதிலாக ஒரு இனத்தின் பாதுகாவலர் என்ற எண்ணமே உருவாக்கப் பட்டுள்ளது. இதனால் அவர்களை சிங்கள இனத்தின் விடுதலை

வீரர்கள் என்று எண்ணும் நிலையும் கூடவே உள்ளது. "இனத்துக்காக போராடி மரித்த வீரர்கள்" என்ற சொற்களைத் தாங்கிய சுவரொட்டிகள் துண்டுப்பிரசுரங்கள் வெளிவருவது இப்படிச் சிந்திக்க வைக்கிறது. இது இப்படியே வளர்ந்து செல்வது பின்னர் ஆபத்தான நிலையைத்தான் தோற்றுவிக்கும். தற்போது வேண்டுமானால் அரசாங்கத்திற்கு படையினரை உற்சாகப்படுத்த மக்களாதரவை திரட்டவும், இழப்புகளை தியாகங்களென்ற பெயரில் ஏற்றுக் கொள்ளக் கூடிய மனோநிலையை வளர்க்கவும் நாட்டின் அபிவிருத்தியிலிருந்து ராணுவச் செலவுகளின் பால் திசை திருப்பப்பட்ட பெருமளவு நிதியை இட்டு கண்டு கொள்ளாமல் இருக்கவும் இத்தகைய பிரச்சாரம் உதவி புரியலாம். எனினும் இதன் மூலம் ஏற்பட்டு வருகின்ற நிலைமை யாதெனில் அரசாங்கத்தின் கட்டுப்பாடு இராணுவத்தின் மீது இல்லாமற் போகக் கூடிய அபாயம் உள்ளது. இராணுவம் ஒரு விடுதலை இயக்கம் போல சொந்த முடிவுகளுடன் இயங்கக் கூடிய நிலைக்கு இது இட்டுச் செல்கிறது. அரசாங்கத்தின் முடிவுகட்கு ஏற்ப இராணுவம் செயற்படுவதற்குப் பதில் இராணுவத்தின் எண்ணத்திற் கேற்ப அரசாங்கம் முடிவுகளை மேற்கொள்ள நிர்ப்பந்திக்கின்ற அளவு இராணுவம் செல்வாக்குப் பெறலாம். இப்போதே அதற்கான அறிகுறிகள் காணக்கூடியதாய் இருக்கிறது.

அரசாங்கத்தின் மீது இன் விராணுவத் தலைவர்களது மரணச்சடங்கின் போது கோபம் பிரதிபலித்தமை இவ்வகையில் இராணுவம் பற்றி மேற்கொள்ளப்பட்டு வந்த பிரச்சாரத்தால் மக்களுக்கு அதன் மேல் ஏற்பட்டுள்ள செல்வாக்குக்கு அடையாளமாக கொள்ளலாம். அரசாங்கம் இதை சில எதிர்க்கட்சிகளது திட்டமிட்ட வேலை என்று கூறுகிறது. இருக்கலாம். ஆனால் அது எடுபடக்கூடிய மனோநிலை மக்கள் மத்தியில் எப்படித் தோன்றியது? கொப்பேகடுவ, விஜயவிமலரத்தின முதற்கொண்டு பல முக்கிய இராணுவத் தலைவர்களை ஒரேயடியாக பலி கொடுத்தமையை சுலபமாக ஏற்றுக் கொண்டு போக இவர்களுக்கு முடியவில்லை. இம் மரணங்கள் சம்பவித்த விதம் குறித்து பல கேள்விகள் எழும்பின. எப்படி இது சம்பவித்தது? சம்பவம் நிகழ்ந்த இடமோ இராணுவத்தின் பூரண கட்டுப்பாட்டில் ஒன்றரை வருடத்திற்கு மேலாக உள்ள பகுதி. இது முன்னர் புதைக்கப்பட்ட



மேஜர் ஜெனரல் விஜயவிமலரத்ன



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கண்ணி வெடியென்று கூறப்படுகிறது. அப்படியானால் அது ஒன்றரை வருடமாக பழுதுபடாமல் புதைந்திருந்ததா? அத்தோடு அப்பிரதேசம் துப்பரவு செய்யப்பட்டு கண்ணி வெடிகள் அகற்றப்படவில்லையா? அப்படி துப்பரவு செய்யப்படாத இடத்திற்கு எப்படி எச்சரிக்கை இல்லாமல் இவர்கள் அழைத்துச் செல்லப் பட்டனர்? போகும்போது கண்ணி வெடியில் சிக்காத வாகனம் வரும்போது எப்படி சிக்கியது? ஏன் மூன்று வாகனங்கள் சென்று எல்லோரும் ஒரே வாகனத்தில் திரும்பி வந்தார்கள்? இப்படியாக கேள்விகள் கோர்வையாக எழுந்தன. முன்னர் புதைக்கப்பட்ட அமுக்க வெடியென்றும், அங்குலம் அங்குலமாக துப்பரவு செய்ய முடியாததையால் துப்பரவு செய்த போது அகப்படத் தவறிவிட்டது என்றும், வாகனங்கள் போகும்போது கண்ணிவெடியில் சிக்காமல், திரும்பி வரும்போது பாதையிலிருந்து சற்று விலகியதன் காரணமாக கண்ணிவெடியில் சிக்கிக் கொண்டதெனவும் புலிகள் தம் நடமாட்டத்தை அவதானிக்கலாமென்பதால் ஒரே வாகனத்தில் திரும்புவோமென விஜயவிமலரத்தினா கூறிய ஆலோசனையின் பெயரில் தான் ஒரே வாகனத்தில் வந்ததாயும், இதனால் வாகனத்தின் பாரம் கூடுதலாயிருந்தது அமுக்கவெடி வெடிக்க ஒரு காரணமாய் இருந்திருக்கலாமென்றும் விளக்கமளிக்கப்பட்டது.

இப்படியான விளக்கங்கள் அளிக்கப்பட்ட போதும் இவ் விளக்கங்கள் "இது போன்ற பாரிய இழப்புகள் நிகழலாம்தான் அப்படி நிகழ்வது ஒரு சகஜமான விடயமாக ஆகிவிடும் நிலைக்கு இன்று யுத்தம் போய்விட்டது" என்ற செய்தியை கூடவே சொல்லியும் வைக்கிறது. இதை ஜீரணித்துக் கொள்வது சிரமமாக இருக்கிறது.

மரணத்திற்கு முன்னால் கேள்விகள் இவையென்றால் மரணத்திற்குப் பின்பும் கேள்விகள் தொடர்ந்தன. ஏன் இந்த இராணுவத் தலைவர்களுக்கு அரச மரணச்சடங்கு செய்யப்படவில்லை? ஏன் தேசிய துக்கதினம் பிரகடனப்படுத்தப்படவில்லை? புத்தபிக்குமார் மரணிக்கும்போது, கலைஞர்கள் மரணிக்கும் போது செய்யப்பட்ட இவற்றை ஏன் இவர்களுக்குச் செய்யவில்லை? இதற்கான விளக்கமும் கொடுக்கப்பட்டது. இராணுவ மரணச் சடங்குகளில் வளமையான ஒரு ஒழுங்கு கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. அதன் பிரகாரம் இராணுவ மரியாதைகளுடன் இம் மரணச் சடங்குகள் மேற்கொள்ளப்பட்டன என்பது. ஆனாலும் திருப்தியளிக்காத கேள்விகளும் பதில்களும் இன்னும் சற்றுத் தூரம் தொடர்ந்தன. அப்படியானால் மேஜர் ஜெனரல் ரஞ்சன்விஜயரத்தினாவுக்கு இவை வளங்கப்பட்டது எப்படி? 'அவர் இராணுவ அதிகாரி என்ற வகையில் இராணுவ மரியாதைகளும் பாராளுமன்ற அமைச்சரும் அரசியல் வாதியு மென்ற வகையில் இத்தகைய மரியாதைகளும் வளங்கப்பட்டன!' ஆனால் இராணுவத்தினருக்கு இத்தகைய மரியாதைகள் வளங்கப் படக்கூடாதென்பதற்கு சட்டமேதும் இருக்கிறதா? 'அப்படி சட்ட மேதும் இல்லாவிட்டாலும் அது வளமையல்ல!'

இந்தவகையான கேள்விகளோடு அதிருப்திக்கான ஒரு களம் தோன்றுகிறது. அதற்கு இன்னும் சில விடயங்களும் சந்தர்ப்ப வசமாக வந்து இதனுடன் சிக்கிக் கொள்கின்றன. கொப்பேக்கடுவ எதிர்க் கட்சித் தலைவி சிறீமாவோ பண்டாரா நாயக்காவிற்கு உறவினராவார். அவர் கண்டி ரதவத்த குடும்பத்தைச் சேர்ந்தவர். அத்துடன் சிலகாலத்திற்கு முன்னர் அவர் மாற்றப்படலாம் என்ற வதந்தி ஒன்று உலவியது. இப்போது இவர் இறந்தபின் இன்னொரு வதந்தி ஏற்பட்டுள்ளது. அதாவது இவரை எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளராக நிறுத்தலாமா என சிந்திக்கப்பட்டு வந்ததாம்.

இப்படியான கதைகள் திட்டமிட்டு பரப்பப்படுகின்ற அப்பிரச்சாரமாக இருக்கலாம். ஆனால் அவை எடுபடக்கூடிய சூழ்நிலை எப்படி ஏற்பட்டது என்பது சிந்திக்க வேண்டியது. முன்னர் அரசாங்கம் சொல்பவற்றை அப்படியே ஏற்கின்ற நிலையிலிருந்து இப்போது எவற்றிலும் சற்றுச் சந்தேகம் தலைதூக்கின்ற நிலை ஏற்பட்டுள்ளது. இதற்குமுன்னர் நிகழ்ந்த ஒருசில சம்பவங்களில் ஏற்பட்ட சந்தேகங்களின் தொடர்ச்சியாக இந்த சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. உடுகம்பொல விவகாரத்தில் அவர் வெளியிட்ட திடுக்கிடவைக்கும் தகவல்கள் உண்மையா பொய்யா என உறுதிப்படுத்தப் படாவிட்டாலும் மக்கள் மத்தியில் சந்தேகங்களைத் தூவி விடுவதாய் இருந்தது. அண்மைக் காலமாக அரசாங்கம் அடிக்கடி பல்வேறு சவால்களை எதிர்கொள்ள வேண்டியதாக

இருந்து வருகிறது. இந்நிலையில் இப்போது அது நாட்டின் பொருளாதாரத்தில் மேற்கொண்டு வரும் பாரிய மாற்றங்கள் எவ்வகையான விளைவை ஏற்படுத்தப் போகின்றன என்பதுவும் கேள்வியே. விலைகள் அதிகரிக்கின்ற சூழ்நிலையில் வெறும் யுத்தத்தைக் காரணங்காட்டி மட்டும் எல்லாவற்றையும் சமாளித்து விடலாமா என்பது அரசாங்கம் எதிர்நோக்கப் போகும் பிரச்சனையாகும்.

இப்போது சிங்கள மக்களை திருப்திப் படுத்த இரண்டுவிதமான வழிகள் பற்றி அரசாங்கம் ஊசலாட்டமான சிந்தனையைக் கொண்டிருக்கிறது. ஒன்று யுத்தத்தை முடுக்கிவிட்டு அதில் ஏற்படும் வெற்றிகளைக் காட்டி மக்களைத் திருப்திப்படுத்துவது. ஆனால் இதை சாதிப்பதானால் உண்மையில் யுத்தத்தில் வெல்லவேண்டும். அப்படி வெல்லுவதானால் படைவீரர்களின் பெருத்த உயிரிழப்பு ஏற்படும். பெருமளவு பொதுமக்களும் அவர்களது சொத்துக்களும் அழிய நேரிட்டு அதனால் வெளிநாடுகளின் கண்டனங்களும் நெருக்குதல்களும் ஏற்படும். யுத்த தளபாடங்களில் இழப்புக்கள் ஏற்படும்.

அல்லது ஒரு அரசியல் இணக்கம் கண்டு சமாதானமாக இப் பிரச்சனையை தீர்க்க வேண்டும். அப்படியானால் சிங்களமக்களுக்கு இப்பிரச்சனையை நாட்டில் இனி இல்லாது ஒழித்துவிட்டதாகக் கூறலாம். ஆனால் அதற்கும் உண்மையில் ஒரு இணக்கம் வரக்கூடிய தீர்வை முன்வைக்கவோ ஏற்றுக்கொள்ளவோ தயாராக இருக்க வேண்டும். இன்று தமிழ்க் கட்சிகளோடு அரசியற் தீர்வு சம்பந்தமாக பாராளுமன்றத் தெரிவுக்குழுவில் பேசப்படும் பேச்சுவார்த்தைகள் வடக்கு கிழக்கு இணைப்பு விடயத்தில் தடைப்பட்டு முன்னேற முடியாமல் நிற்கிறது. இதையே விடுதலைப்புலிகளுடன் இணக்கம் காணுமுகமாக பேசப்போனால் அவர்களின் கோரிக்கை தமிழ் கட்சிகளின் கோரிக்கைக்கு குறைந்ததாக நிட்சயம் இருக்க மாட்டாது. தொண்டமான் உட்பட தமிழ்கட்சிகளின் கோரிக்கைகளையே இன்னும் ஏற்றுக் கொள்ள முன்வராத அரசாங்கம் விடுதலைப்புலிகள் கேட்கப் போகின்றவற்றை வளங்கத் தயாராக உள்ளதா என்பது ஒரு கேள்வி. எனவே இரண்டு விதப்பட்ட வழிகளிலும் பிரச்சனைகள் உள்ளதால் அரசாங்கம் இன்னும் தீர்க்கமான முடிவுக்கு வராமல் ஊசலாடும் நிலையில் உள்ளது. இவை எல்லாவற்றிற்கும் மேலாக அதிகரித்து வரும் இழப்புகள் விரைவில் இப்பிரச்சனைக்குத் தீர்வு காணப்பட வேண்டும் என்ற அவசியத்தைச் சுட்டிக்காட்டிக் கொண்டே இருக்கின்றன.

★ ★★





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# பார்சிலோனா ஒலிம்பிக் போட்டிகள்.

'வில்லில் இருந்து புறப்பட்ட அம்பு போல வீரர்கள் ஓடத் தொடங்கினார்கள்' என்பது விளையாட்டு வர்ணனையாளர்கள் வழக்கமாகக் கையாளும் ஒரு சொற்றொடர்.

இதை நினைவுபடுத்துமுகமாகவோ, என்னவோ பார்சிலோனாவில் நடைபெற்ற 25 வது நவீன ஒலிம்பிக் போட்டிகளின் ஆரம்பம் அமைந்தது. வழக்கமாக ஒரு வீரர் படிகளின் மீதேறி, ஒலிம்பிக் தீபத்தை, தன்கையில் உள்ள தீபத்தினால் ஏற்றிவைப்பார். ஆனால் பார்சிலோனாவில், முதல் நாளன்று, அன்ரோனியோ றெபெல்லோ (Antonio Rebello) என்ற ஸ்பானிய வீரர் - போலியோவினால் பாதிக்கப்பட்டவர் - அங்கவீனர்களுக்கான ஒலிம்பிக்கில் பதக்கங்கள் வென்றவர் - தீப்பந்தம் இணைக்கப் பட்ட அம்பொன்றினை வில்லில் பொருத்தி, எய்து விட, அது நேராகச் சென்று, உயரவிருந்த ஒலிம்பிக் தீபத்தினை எரியச் செய்தது.



ஸ்பானிய மன்னர் ஜுவான் கார்லோஸ் (Juan Carlos) அவர்களினால் சம்பிரதாய பூர்வமாக ஆரம்பிக்கப்பட்ட இந்த பார்சிலோனா ஒலிம்பிக்ஸ் - மாபெரும் கண்காட்சியாக, அதிக ஒத்திகைகளுடன், பல்லாயிரக் கணக்கானவர் பங்குபற்றிய ஆரம்பநாள் - அதேபோல சிறப்புடன் அமைந்த இறுதிநாள் - ஆகியவற்றினால் அதன் அமைப்பாளர்களுக்கு பெருமை சேர்த்தது.

ஜுலை 25 முதல் ஆகஸ்ட் 9 வரையிலான, ஏறக்குறைய இரண்டு வார காலத்தில், பாரம்பரியமான ஒலிம்பிக் உணர்வு, சிறிது மாறுபட்ட நிலையில் என்றாலும், சுடர்விட்டுப் பிரகாசிக்கத்தான் செய்தது. நான்குவருட காத்திருத்தலின் உச்சக் கட்டமாக, இடைவிடாத பயிற்சியின் அறுவடையாக, உலகின் ஒரு கோடியிலிருந்து மறு கோடி வரை வாழும் பல்லின, பலநாட்டு, பலமொழிபேசும் வீரர்களும் ஒருவரோடு ஒருவர் தடகள போட்டிகளில், நேரில் பொருதினார்கள், போட்டியிட்டார்கள். பார்சிலோனா ஒலிம்பிக்ஸ் ஆரம்பிக்க முன்னரே பல திருப்பு முனைகளை, அரசியல் மாற்றங்களில் பலன்களை எதிர்கொள்ளுவதாக அமைந்து விட்டது. நீண்டகால இடைவெளியின் பின்னர், முழுமையான சர்வதேச பங்களிப்புடன் தடைகள், பகிஷ்கரிப்புகள் இன்றி, இந்த 25வது ஒலிம்பிக் போட்டிகள் நிறைவேறியது.

ஏறக்குறைய 10, 632 வீரர்கள், வீராங்கனைகள் கலந்து கொண்ட பார்சிலோனா ஒலிம்பிக் போட்டிகளில், அவர்கள் பிரதிநிதித்துவப்படுத்திய 172 நாடுகளில் சிலவற்றை இனங்கண்டு கொள்ள, தேசப்படங்களை நாடவேண்டிய நிலை கூட ஏற்பட்டது.

குக் தீவுகள், பிரிட்டிஷ் வேர்ஜின் தீவுகள், மொனாகோ போன்றவை மட்டுமல்ல, சிதைந்து விட்ட சோவியத் யூனியனிலிருந்து பிரிந்து சுதந்திரப் பிரகடனம் செய்து கொண்ட எஸ்டோனியா, லிதுவேனியா, ஸ்லோவேனியா, யூகோஸ்லாவியாவிலிருந்து துண்டித்துக் கொண்ட குரோசியா, போராடிக் கொண்டிருக்கும் பொஸ்னியா போன்றவையும், ஒலிம்பிக் பட்டியலில் இடம் பெறும் புதிய பெயர்கள் தானே?

1988 சியோலின் பின்னர் ஏற்பட்ட அரசியல் மாற்றங்களின் விளைவுகளைப் பார்ப்போம்.

மாபெரும் வல்லரசாக விளங்கி, துண்டு, துண்டாக உடைந்து விட்ட சோவியத் யூனியன் - தற்காலிகமாக ஒட்டுப் போட்ட நிலையில் - 12 குடியரசுகள் இணைந்த குழுவாக (CIS) தனக்கென ஒரு தேசியக் கொடியோ தேசிய கீதமோ இல்லாமல் போட்டிகளில் பங்குபற்றியது.

இன்ச ரேஜை பீத்தோவன் இசையமைத்த ஒரு இசைவடிவம் தான் சிஐஎஸ் வீரர்கள் வென்றபோது அரங்கில் ஒலித்தது.

"நாங்கள் யாருக்காகப் போட்டிகளில் பங்குபற்றுகிறோம் - பீத் தோவ

**84, லொஸ் ஏஞ்சல்ஸ் ஒலிம்பிக்ஸ் நாயகன் கார்ல் லூயிஸ் பார்சிலோனாவிலும் இவரே' ஹீரோ! இம்முறை பெற்ற நீளப்பாய்தல், 4x100 மீட்டர் தொடர் ஓட்டத்துக்கான தங்கப்பதக்கங்களுடன் இவர் ஒலிம்பிக்கில் மொத்தமாக வென்றது 8 தங்கப்பதக்கங்கள், 1 வெள்ளிப்பதக்கம்.**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



"நாங்கள் யாருக்காக பங்குபற்றுகிறோம்? பீத்தோவனுக்காகவா? என்று மனம் வெதும்பிய சி.ஐ. எஸ் அணி வீரர், விட்டாலி சேர்போ.

13 வயதேயான வு மிங்சியா மிக உயரமான இடத்திலிருந்து குத்துக்கரணமடித்துப் பாய்ந்து சீனாவுக்கு தங்கப்பதக்கம் பெற்றுக் கொடுத்ததற்கு இடைவிடாத கடும் பயிற்சிதான் காரணம்.



நாட்டுக்காகவா?" என்று ஒரு புகழ் பெற்ற ரஷ்ய ஜிம்னாஸ்டிக்ஸ் வீரரான விட்டாலி சேர்போ (Vitaly Scherbo) கவலைப்பட்டுக் கொண்டார். இவர் இம்முறை 4 தங்கப்பதக்கங்கள் உட்பட 6 பதக்கங்களை வென்றெடுத்தவர்.

இந்த இடத்தில் ஒலிம்பிக் வீரர்கள் வழக்கமாகச் செய்து கொள்ளும் சத்தியப்பிரமாணத்தின் ஒருவரி ஞாபகத்திற்கு வருவதைத் தவிர்த்துக் கொள்ள முடியவில்லை. இது தான் அந்த வரி-

"எங்கள் நாடுகளின் கௌரவத்திற்காகவும், விளையாட்டின் மேன்மைக்காகவும்.........."

நாங்கள் யாருக்காகப் போட்டியிடுகிறோம் என்று புரியாத நிலையில் கூட பல காலமாக கைக்கொள்ளப்பட்ட தீவிர பயிற்சி சார்ந்த அணுகுமுறையின் பலனாக, சி.ஐ.எஸ் என்ற இந்த ஒட்டுப் போட்ட அணி, 45 தங்கப்பதக்கங்கள் உட்பட்ட 112 பதக்கங்களை வென்றெடுத்து, பட்டியலில் முதலாம் இடத்தைப் பெற்றுக் கொண்டது என்னவோ உண்மைதான்! ஆனால் 1996ல் அட்லாண்டா ஒலிம்பிக்கில் இந்நிலை தொடருமா என்பது சந்தேகம் தான் - சி.ஐ.எஸ் அணி 12 தனி அணிகளாக போட்டியிட நேரிடலாம்.

பார்சிலோனாவின் மற்றுமொரு திருப்பமாக, 1960ம் ஆண்டிற்கு பின்னர் முதல் தடவையாக தென்னாபிரிக்காவின் ஒலிம்பிக் பிரவேசம் அமைந்தது. வெள்ளையர் கறுப்பர் இணைந்த (ஏறக்குறைய 100 பேரில் 9 அல்லது 10 பேரே கறுப்பர்கள்) இக்குழுவினரின் தேசிய கீதமாக ஒலித்ததும் அந்த பீத்தோவனின் இசைவடிவந்தான். சர்வதேச அரங்கில் நீண்டகாலமாக ஒதுக்கப்பட்டிருந்த தென்னாபிரிக்காவின் பிரவேசத்தோடு தொடர்புடையதான ஒரு சுவையான நிகழ்வு

### சுவையான நிகழ்வுகள்

ரஷ்ய பாரம் தூக்கும் வீரர் இப்ராகிம் சமடோவ் (Ibragim Samadov) தனக்குக் கிடைத்த வெண்கலப் பதக்கத்தை, வெற்றி மேடையிலேயே வீசி விட்டுச் சென்றார் என்ற குற்றச்சாட்டில் ஒலிம்பிக்கிலிருந்து வெளியேற்றப்பட்டார். பதக்கமும் பறிமுதல் செய்யப்பட்டது. தனக்கு மயக்கம் வந்தது என்றும், நடந்தது தெரியாது என்றும் அவர் சொன்னது நீதிவான்களின் காதில் ஏறவில்லை.

***

ஐந்து வருடகாதலர்களான, விரைவில் திருமணம் முடிக்கப்போகும் இந்தோனேசிய பாட்மின்டன் வீரர் அலன் படிகுசுமா (Allan Budi Kusuma) ஆண்கள் ஒற்றையர் ஆட்டத்திலும், வீராங்கனை சுசிசாந்தி (Susi Susanti) பெண்கள் ஒற்றையர் ஆட்டத்திலும், தங்கப்பதக்கங்களைப்பெற்று தங்கக் காதலர்களானார்கள்.

கறுப்பின மக்களின் விடுதலைக்காக தென்னாபிரிக்க அரசாங்கத்துடன் போராடி, சிறை சென்று மீண்ட, நெல்சன் மண்டேலா, பார்சிலோனா ஒலிம்பிக்கில் பார்வையாளராகக் கலந்து கொண்டு, தென்னாபிரிக்க குத்துச் சண்டை வீரர் பானைத்வானா (Fana Thwana) ஸ்பானிய வீரர் ஒருவரிடம் தோல்வி யுற்றதைப் பார்த்து விட்டு, "அவர் தனது வலது கையை சரியாகப் பாவிக்கவில்லை" என்று அபிப்பிராயம் சொன்னதுதான்!

"நான் [illegible] போது, புரட்சியின் சக்தி என்னை உந்தித் தள்ளுகிறது" என்று கூறும் வீரர்களைக் கொண்ட கியூபாவும், 1960க்கு பின்னர் முதல் தடவையாக, ஒலிம்பிக் பிரவேசம் நிகழ்த்தி, சோவியத் யூனியனின் சிதைவுக்குப்பின், ஏறக்குறைய அரசியல் அனாதையாக விடப்பட்ட நிலையிலும், மூர்க்கமாக மோதும் குத்துச் சண்டை வீரர்களின் உதவியுடன் 14 தங்கப்பதக்கங்களோடு, 5ம் இடத்தைப் பெற்றது.

இன்னொரு முன்னாள் பொதுவுடமை நாடான செக்கோ, சிலோவாக்கியாவின் செக் மக்களும் சிலோவாக் மக்களும் அரசில் ரீதியாக





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

பிரிவுபட்டு இருநாடுகளாக பிரியும் நிலையிலும், பார்சிலோனா அரங்கில், அரசியலை மறந்து ஒன்றாகவே போட்டிகளில் கலந்து கொண்டது ஒருபக்கமென்றால்.

மறுபக்கத்தில், இரண்டு நாடுகளாக 40 ஆண்டுகாலம் பிரிந்திருந்து, ஒன்றாக இணைந்து, முதல் முறையாக ஒலிம்பிக்கிலும், ஒருங்கிணைந்த ஜேர்மன் குழுவாகப் பங்கு பற்றிய போதிலும், பழைய பேதம் (மேற்கு, கிழக்கு) மறக்கப்பட்டு விடவில்லை என்பதை அவதானிக்கக் கூடியதாகவிருந்தது.

1988ல் அமெரிக்காவை விட அதிகப் பதக்கங்களைப் பெற்ற முன்னாள் கிழக்கு ஜேர்மனி வீரர்களின் ஆதிக்கம், இந்த இணைந்த குழுவில் இருப்பதாக முன்னாள் மேற்கு ஜேர்மனி வீரர்களின் மனக்குறைதான், இந்தப் பேதத்திற்குக் காரணம்.

சிவில் யுத்தத்தின் உச்சக்கட்டத்தில், மக்கள் மடிந்து கொண்டிருக்கும் போரின் இடிபாடுகளுக்கிடையேயிருந்து, ஐ.நா வின் உதவியுடன் கடைசி நேரத்தில் வந்து கலந்து கொண்டார்கள் யூகோஸ்லாவியாவிலிருந்து பிரியத்துடிக்கும் பொஸ்னிய நாட்டு வீரர்கள். முன்னரே பிரிந்துவிட்ட குறோசிய வீரர்கள், கூடைப்பந்தாட்டத்தில் இறுதியாட்டம்வரை சென்று அமெரிக்க 'கனவுக் குழு' வுடன் சளைக்காது போட்டியிட்டு, தோல்வியிலும் பெருமைகண்டார்கள். கூடைப் பந்தாட்டத்தால் கோடீஸ்வரர்களாகி விட்ட இந்த அமெரிக்க குழுவினருடன் குறோசியா மட்டுமல்ல ஏழை நாடான அங்கோலாவைச் சேர்ந்த வீரர்களும் தோள் உரசிப் போட்டியிட முடிந்தது, ஒலிம்பிக்கின் சாதனைதான்!

பீஜிங் (Beijing) நகரிலே 2000ம் ஆண்டில் ஒலிம்பிக் போட்டிகளை நடாத்தக் கோரி நிற்கும் சீனா, தன்னை அதற்கு தகுதியானதென நிரூபிக்கும் வகையில், விளையாட்டுத்துறையில், ஆசியாவின் மட்டுமல்ல, சர்வதேச அரங்கிலும் முக்கியமான ஒரு இடம் இருப்பதை இனம் காட்டியது. தென்னாபிரிக்கா போலவே அரசியல் காரணங்களினால், அஞ்ஞாதவாசம் செய்து விட்டு, 84 லொஸ் ஏஞ்சல்ஸ் ஒலிம்பிக்கில் பங்குபற்றத் தொடங்கிய சீனா, இம்முறை சிஐஎஸ், ஐக்கிய அமெரிக்கா ஜேர்மனி ஆகிய நாடுகளைத் தொடர்ந்து 4வது இடத்தைப் பெற்ற போது, நிச்சயமாகத் திருப்திப்பட்டுக் கொள்ளாமலிருக்கப் போவதில்லை.

பாலர்வகுப்பிலேயே, பொருத்தமான சிறுவர், சிறுமிகளைத் தேர்ந்தெடுத்து, தொடர்ச்சியான, கடுமையான பயிற்சிகளினால் வீரர்களை உற்பத்தி செய்யும், முன்னாள் சோவியத் யூனியன் உள்ளிட்ட கிழக்கு ஐரோப்பிய நாடுகளின் அணுகுமுறையையே சீனாவும் கைக் கொள்கிறதென்பது புதுமையல்ல! பார்சிலோனா ஒலிம்பிக்கில் 10 மீட்டர் உயரத்திலிருந்து நீரில் குத்துக் கரணம் அடித்துக் குதிக்கும் போட்டியில் தங்கப்பதக்கத்தை வென்ற, 13 வயதேயான ஃபூமிங்க்ஷியா(Fu Mingxia) என்ற சிறுமி 7வது வயதிலேயே தெரிவு செய்யப்பட்டு தினமும் 100 முறை குதித்துப் பயிற்சிகள் செய்ய

### சுவையான நிகழ்வுகள்

**1936ல் சன் கு சங் (Sohn Ku Chang) என்ற கொரியவீரர் ஜப்பானின் ஆட்சிக்கு உட்பட்டகாலத்தில், ஜப்பானுக்காக ஓடி, மரதனில் தங்கப்பதக்கத்தைப் பெற்றுக் கொடுத்தார். 56 வருடங்களின் பின்னர், பார்சிலோனாவில், க்வாங்-யுங்-சோ (Hwang Young-Cho) என்ற கொரியவீரர், அதே மரதனில்; அதேதங்கப் பதக்கத்தை தனது நாட்டுக்கு பெற்றுக் கொடுத்தார். இரண்டாமிடத்தைப் பெற்றவர் ஒரு ஜப்பானிய வீரர்!**

***

**பிரிந்த லிதுவேனியா, தனது முன்னாள் தாய் நாடான சோவியத் யூனியனின் - மறுபிறப்பான சிஐஎஸ் (CIS) குழுவை 82 - 78 வித் தியாசத்தில் தோற்கடித்து கூடைப்பந்தாட்டத்தில் வெண்கலப் பதக்கத்தைச் பெற்றது.**



அமெரிக்க கனவுக்குழுவின் கோமாளியான் மஜிக் ஜோன்சன் கையில் பந்து கிடைப்பதும் அடுத்த கணம் கூடையில் இருப்பதும் மந்திரஜாலம் தான்!

ஊக்கமருந்து பாவித்ததால் விலக்கப்பட்ட கட்ரின் கிராப்.



www.tamilarangam.net



உலகலாவிய ரசிகர்களைக் கொண்ட மைக்கேல் ஜோர்டானுக்கும் அவரது குழுவிற்கும் ஒலிம்பிக் தங்கப்பதக்கம் போட்டிகளின் முன்னரே நிச்சயமாகிவிட்டது.

ஒரு வருடத்திற்கு முன்பு நோயினால் கால்களை இழக்கக் கூடிய நிலையில் இருந்தும் அமெரிக்க கெயில் டெவர்ஸ் 100மீட்டர் ஓட்டத்தில் தங்கப்பதக்கம் பெற்றார். ஆனால் 200மீட்டர் தடைதாண்டி ஓட்டத்தில் முன்னணியில் வந்த இவர் கடைசி தடையில் தடக்கி விழுந்த பொழுது அதிர்ஷ்டம் இவரை கைவிட்டது. வென்றவர் கிரேக்க வீராங்கனை.



வைக்கப்பட்டதும், வருடத்தில் இருமுறையே பெற்றோரைப் பார்க்க அனுமதிக்கப்பட்டதும் 'விளையாட்டு வீரர் உற்பத்தி' என்ற சொற்களை நிதர்சனமாக்குகின்றனவா? தங்கப் பதக்கத்துடன் நாடு திரும்பு வோருக்கு சீன அரசாங்கத்தின் பண உதவி, அமெரிக்க வீரர்கள் சம்பாதிக்கப் போவது போலில்லாவிட்டாலும், சீனாவில் ஆடம்பரவாழ்வுக்கு போதுமானதாக இருக்கும் என்றும், ஹிங்கியா, தனது பெற்றோருக்கு 'பணம் காய்க்கும் மரமாக இருப்பார் எனவும் ஒரு ஆங்கிலச் சஞ்சிகை குறிப்பிடுகிறது.

அரசியல் மாற்றங்கள், அதிரடி பிரவேசங்களோடு, பார்சிலோனா ஒலிம்பிக்கில், தொழில் முறை வீரர்களின் ஆதிக்கம், போதைப்பொருள் சீர்கேடு என்பனவும் சமமான இடங்களைப் பெற்றன.

பார்சிலோனாவின் நட்சத்திரங்களாக (திறமையில் மட்டுமல்ல, செல்வாக்கிலும் தான்) திகழ்ந்தவர்கள் ஐக்கிய - அமெரிக்காவின் கூடைப்பந்தாட்டக் குழுவினரான 'கனவுக் குழுவினர்' என அழைக்கப்பட்டவர்கள் தான். மஜிக் ஜோன்சன் (Magic Johnson) மைக்கேல் ஜோர்டான் (Michael Jordan) போன்றவர்கள், தங்கள் விளையாட்டினால் கோடிக் கணக்காக சம்பாதிப்பவர்கள்.

'எல்லா நாட்டு விரர்களும் ஒரு குடும்பத்தவரைப் போல ஒன்றாகத்தங்கி உறவாட வழி வகுப்பதற்காக ( 1932 லொஸ் ஏஞ்சல்ஸ் ஒலிம்பிக்கில் இருந்து) அமைக்கப்பட்டுவரும் ஒலிம்பிக் கிராமத்தில் இவர்கள் தங்காததிற்கு, வசதிகுறைவு, பாதுகாப்பின்மை என்ற காரணங்கள் மட்டுமல்ல, மற்ற வீரர்களின் அன்புத் தொல்லைகளுக்கு உள்ளாவார்கள் என்ற காரணமும் முன்வைக்கப்பட்டது.

நாளுக்கு 900 டொலர் கட்டண அறைகளில், உல்லாச ஹோட்டலில் இவர்கள் தங்கினார்கள். விளையாடவரும் போதும் போகும் போதும் நான்கு வாகனங்கள், மேலே ஹெலிஹெப்டர் புடைசூழ, பாதுகாப்புடன் இவர்கள் வலம் வந்தார்கள்.

எதிர்பார்த்தபடியே இந்த கூடைப் பந்தாட்ட கோமேஸ் வரர்கள், இறுதிப் போட்டியில் 117 - 85 புள்ளி . வித்தியாசத்தில், புதிதாக உருவான குறோசியாவைத் தோற்கடித்து தங்கப்பதக்கத்தை வென்றார்கள்.

குறோசியாவின் பயிற்சியாளரான பெடார்ஸ் கான்சி (Pelar Skansi) அமெரிக்க குழுவினரைப் பற்றிக்குறிப்பிடுகையில் 'இன்னும் 15, 20 வருடங்களுக்குள் இவர்களை யாராவது தோற்கடிக்க முடியலாம். ஆனால் அதற்கு முதல் அல்ல' என்று கூறினார்.

இந்தக் கூடைப்பந்தாட்டக் குழுவினர் அமெரிக்காவில் முழுக்க, முழுக்க பணத்துக்காக விளையாடுபவர்கள் என்று அறியும் போது, ஒலிம்பிக் போட்டிகளில் 1974ம் ஆண்டுக்கு பின்னர் பெற்ற மாற்றத்தை நினைக்கலாம். அந்த ஆண்டில் தான், ஒலிம்பிக் சாசனத்திலிருந்து "பொழுதுபோக்காகக்

**சுவையான நிகழ்வுகள்**

குவைத் நாட்டின் மீது ஈராக் படையெடுத்து சரியாக இரண்டாவது ஆண்டு நிறைவு பெற்ற நாளன்று பாவோ மசெலினோ (Fao Mascelino) என்ற அமெரிக்க சாமோவா வீரர் நாடியிலே கொடுத்த குத்திலே முதலாவது சுற்றில், 54 செக்கன்கள் முடிந்த நிலையில் (போட்டி தொடங்கி ஒரு நிமிடமும் ஆகவில்லை) கீழே விழுந்த ஈராக்கிய வீரர் புராஸ் ஹாஷிம் (Furas Hashim) அத்தோடு தோற்றுவிட்டார்.

***

100மீட்டர் ஆண்கள் ஓட்டத்தில், தங்கப் பதக்கத்தைப் பெற்றமிகுந்த வயதானவர் என்ற பெருமையை பிரித்தானிய கறுப்பின வீரரான லின்போர்ட் கிறிஸ்ரி (Linford Christie) பெற்றார். வயது 32.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கொண்டவர்கள்" (Amateur) என்ற பதங்கள் நீக்கப்பட்டன. தொழில் முறையாக, அதாவது பணத்துக்காக விளையாடும் வீரர்களும் ஒலிம்பிக்கில் பங்கு பற்றலாம் என்ற நிலையும் உருவாகியது. ஸ்டெபி கிறாப் (Steffi Graf) போன்ற பல லட்சம் டாலர்கள் விளையாட்டினால் சம்பாதிக்கும் டென்னிஸ் வீராங்கனைகளும் (இவர் ஒலிம்பிக்கில் அமெரிக்க வீராங்கனை ஜெனிபர் கப்ரியாட்டி (Jennifer Capriati) இடம் தங்கப்பதக்கத்தை இழந்தார்), புலமைப்பரிசில் என்றும் உதவித் தொகை என்றும் பெருந்தொகைப் பணத்தைப் பெறும் அமெரிக்க, ஐரோப்பிய ஓட்ட, பாய்தல் வீரர்களும், மேற்குறித்த கழகக் குழுவினரும், ஒலிம்பிக் களத்தில் குதிக்க முடிந்தது - இந்த பதத்தின் (Amateur) நீக்கத்தினால் நிகழ்ந்தவைதான்.

பல புகழ் பெற்ற தடகள வீரர்கள், வீராங்கனைகள் வர்த்தக ஸ்தாபனங்களின் நேரடியான, மறைமுகமான பண உதவிகளைப் பெற்று, அந்த நிறுவனங்களின் விளம்பரப் பலகைகளாக, நிறுவன உற்பத்திப் பொருள்களின் பெயர்கள் பொறித்த ஆடைகள், காலணிகள் அணிந்து ஓடுகிறார்கள் - பாய்கிறார்கள் - வீசுகிறார்கள் நீந்துகிறார்கள்.

இவைகளோடு ஒப்பிடும் போது 1912ல் ஸ்டொக்ஹோமில் நடைபெற்ற ஒலிம்பிக் போட்டிகளில் தங்கப்பதக்கத்தைப் பெற்ற அமெரிக்க சிவப்பிந்திய இன வீரரான ஜிம் தோர்ப் (Jim Thorpe) பரிதாபத்துக்குரியவராகிறார். பல வருடங்களுக்கு முன்னர் வறுமையின் நிமித்தம் பணத்துக்காக பேஸ் போல் விளையாடி, 'பொழுது போக்குக்காக விளையாடுபவர்' (Amateur) என்ற அந்தஸ்தை இழந்து விட்டார் என்று, தங்கப் பதக்கத்தை பறித்துக் கொண்டு விட்டார்கள், அக்கால ஒலிம்பிக் நிர்வாகிகள்.

இந்த நிலையில் ஒலிம்பிக் போட்டிகள், வசதி படைத்த நாடுகளின் ஆதிக்கத்தில் தொடர்ந்து இருப்பது தவிர்க்க முடியாததே. இந்தியா, இலங்கை போன்ற நாடுகள், வசதிகள் குறைந்த நிலையில், சக்திக்கு மேல் செலவழித்து, வீரர்களை அனுப்பி, கடைசியாக வந்தவர்களுக்கு முந்தியவர்களாக வந்தோம் என்றும், பதக்கம் இல்லாவிட்டாலும் பங்குபற்றிய பெருமை போதாதா என்றும் கூறிச் சமாளிப்பது அவசியம் தானா?

ஒலிம்பிக் கோட்பாடான "பங்குபற்றுவது தான் முக்கியம், வெற்றி பெறாவிடினும் போட்டியிட்டோம் என்பதே முக்கியமான விடயம்" என்பது அமெச்சூர் (Amateur) என்ற பதத்தோடு, ஒலிம்பிக்கிலிருந்து மறைந்து விட்டது என்பதே பொதுவான அபிப்பிராயம்.

எனவே இந்தியா, இலங்கை போன்ற நாடுகள் பிராந்தியப் போட்டிகளுக்கு, தற்போதைக்காவது, முக்கியத்துவம் கொடுத்தால் போதுமானது.

— கே. எஸ். பாலச்சந்திரன்

**சுவையான நிகழ்வுகள்**

ஒலிம்பிக் போட்டிகளின் தாயகம் கிரேக்கம். ஆனால் நவீன ஒலிம்பிக் போட்டிகள் அங்கு 1896ல் ஆரம்பிக்கப்பட்டபோது மரதனில் ஸ்பிரிடோன் லூயிஸ் (Spridon Louis) என்ற இடையன் பெற்றுக் கொடுத்ததின் பின்னர் - கிரேக்கத்திற்கு ஓட்டப்பந்தயத்தில் கிடைத்த முதலாவது தங்கப்பதக்கம், 100 மீட்டர் பெண்கள் தடைதாண்டி ஓட்டத்தில், எதிர்பார்த்த அமெரிக்க வீராங்கனை தடக்கி விழுந்ததினால் கிடைத்தது. பெற்றுக் கொடுத்தவர் பராஸ்கெவி (Paraskevi Patoulidou) என்ற கிரேக்க வீராங்கனை.

***



தென்னாபிரிக்க இன ஒதுக்கல் கொள்கைக்கு எதிராக போராடி சிறைசென்ற நெல்சன் மண்டேலா இம்முறை ஒலிம்பிக்கில் பார்வையாளராக கலந்து கொண்டதும் எதிர்பாராத நிகழ்வுதானே?

1984 ஒலிம்பிக்கில் 100 மீற்றர் ஓட்டத்தில் பென்ஜோன்சன், கார்ல்லூயிஸ் ஆகியோருக்குப்பின் 3ம் இடத்தையே பெற்ற பிருட்டிஷ் வீரர் லின்ஃபோட் கிறிஸ்ரி இம்முறை தங்கப்பதக்கத்தோடு கூடவே அதிக வயதான வேக ஓட்டக்காரரென்ற (32) பெயரையும் பெற்றார்.






தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# இந்தியாவின் இலங்கைக் கொள்கை
# மாறும் பார்வைகள்



### பத்மநாபா வழக்கு

ஆகஸ்ட் 11ம் திகதி தமிழ்நாட்டு சிறப்புப் புலனாய்வுக் குழு பத்மநாபா கொலை வழக்குத் தொடர்பாக மாவட்ட நீதிபதி திரு எஸ். எம். சித்திக் முன்னிலையில் 26 பேருக்கு எதிரான குற்றப்பத்திரம் தாக்கல் செய்தது. அதில் முன்னாள் உட்துறைச் செயலாளர் திரு. ஆர். நாகராஜன், முன்னாள் தி. மு. க. அமைச்சர் திருமதி சுப்புலக்சுமி ஜெகதீசன் ஆகியோரும் உள்ளடக்கப் பட்டுள்ளார்கள்.

இப் புலனாய்வுக்குழு இன்ஸ்பெக்டர் ஜெனரல் திரு. பி. சி. பந்த் தினால் தலைமை தாங்கப்படுகிறது. 12 பக்கங்களைக் கொண்ட இக் குற்றப் பத்திரம் அதற்கு 250 பக்கங்கள் கொண்ட ஆதர ஆவணங்களுடன், ஏறத்தாள 300 நபர்களை சாட்சிகளாக குறிப்பிட்டு தாக்கல் செய்யப்பட்டு வழக்கு தொடர்கிறது

### விடுதலைப் புலிகளின் மனு

விடுதலைப் புலிகளின் பெயரில் அமெரிக்காவை சேர்ந்த முன்னாள் யாழ் மேயரின் மகன் உருத்திரகுமாரால் கௌதம் எனும் வழக்கறிஞருடாக தமது நியாயங்களை சமர்ப்பிக்க ஆறு வார கால அவகாசம் கேட்டு சமர்ப்பிக்கப்பட்ட மனுவை புலிகளைத் தடைசெய்த அறிவிப்பு மீது தீர்ப்பு வழங்க விசாரணை நடத்திவரும் சிறப்பு விசாரணைக்குழு நிராகரித்துள்ளது. எனினும் அத் தரப்புப் பத்திரங்களைக் கையேற்று அதன்மீதான தீர்ப்பை ஒத்திவைத்துள்ளது

இந்த விசாரணை விடுதலைப் புலிகள் மீதான தடை அறிவிப்பை உறுதிசெய்து ஏன் கட்டளை பிறப்பிக்க கூடாது என்பதற்கான நியாயமான காரணங்களுண்டா என விசாரிக்கிறது. அவ்வாறான காரணங்கள் ஏதுமில்லை எனத் தீர்ப்பளிக்கப் படுமாயின் இந்தத் தடை அறிவுப்பு நீதிமன்றத்தால் உறுதிப்படுத்தப் படும். அதன் பின்னரே இந்தியா இலங்கையிடம் சட்டரீதியாக சந்தேக நபர்களை கையளிக்கும் படியான கோரிக்கையை விடுக்க முடியும்.

இந்தியாவில் இலங்கை தமிழ்பேசும்மக்களின் பிரச்சனைகளோடு தொடர்பாக அண்மைக்காலத்தது விடயங்களாக மூன்று விடயங்களைக் குறிப்பிடலாம். ஒன்று அகதிகளை திருப்பி அனுப்புவது. மற்றது தமிழீழ விடுதலைப் புலிகளை தடைசெய்த தீர்மானத்தை எதிர்த்து தமிழீழ விடுதலைப் புலிகள் தாக்கல் செய்துள்ள மனு. அடுத்தது பத்மநாபா கொலை தொடர்பான வழக்கின் ஆரம்பம். இவை தவிர இந்தியப் பத்திரிகைகளில் இலங்கை தொடர்பான தெளிவான நிலைப்பாட்டுக்கு இந்தியா வந்தாக வேண்டும் என்ற கருத்தை வலியுறுத்தும் குரல்கள் எழுப்பப்பட்டு வருகின்றன. இது இந்தியா தனது இலங்கை தொடர்பான கொள்கையை மறுசீரமைக்க முனைகிறதா என்ற ஐயத்தை ஏற்படுத்துவதாயுள்ளது. ஏனெனில் வழமையாக இப்படியான கொள்கைகளை வகுக்கு முன்னர் அதற்குச் சாதகமான சூழ்நிலையைத் தோற்றுவிக்கு முகமாக பத்திரிகைகளுக்கூடாக செய்திகளும் கட்டுரைகளும் வெளிவரச் செய்வதுண்டு. மேலும் இலங்கை ஜனாதிபதி பிரேமதாசா வருகின்ற ஒக்டோபரில் இந்தியா விஜயம் செய்யவுள்ளதும் இதற்காகன ஒரு அவசியத்தை உணர்த்துவதாய் உள்ளது.

ராஜீவ் காந்தியின் காலத்திற்குப்பின் இலங்கை தொடர்பான ஒரு உறுதியான கொள்கை இந்தியாவுக்கு இருக்கவில்லை. கொள்கையளவில் இந்தியா இலங்கையின் ஒருமைப்பாட்டை பேணுவதற்கான ஆதரவு, இலங்கைத் தமிழ் மக்கள் ஏனைய பிரஜைகள் போல் தம் சட்டபூர்வ உரிமைகளையும் அந்தஸ்தையும் பெற்று வாழவேண்டுமென்பதற்கான அக்கறை, ஆகிய பொதுப்படையான கருத்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்ற போதிலும் அது குறிப்பானதும் நடமுறை அணுகுமுறையுடன் கூடியதுமான எந்தத் தெளிவான கொள்கையையும் இதுவரை வகுத்திருக்கவில்லை.

இலங்கை இந்திய ஒப்பந்தத்தில் பிரச்சனையின் ஒரு தரப்பினரான தமிழ் பேசும் மக்களின் பிரதிநிதிகளை பங்காளிகளாக்காமல் வெறுமனே இலங்கை அரசும் இந்திய அரசும் கையெழுத்திட்டதன் மூலம் மறுதரப்பினருக்கான பிரதிநிதத்துவத்தை இந்தியா தானே எடுத்துக் கொண்டது. இருப்பினும் அது ஒப்பந்தத்தின் படி அதற்குரிய கடப்பாட்டினின்றும் மெதுவாக நழுவிக் கொண்டது. இந்நிலையில் இந்தியாவின் உத்தரவாதத்தினை நம்பி ஆயுதப்போராட்டத்திலிருந்து விலகி ஜனநாயக நீரோட்டத்தில் சேர்ந்து கொள்ள முன்வந்த விடுதலை இயக்கங்கள்தான் சங்கடமான நிலைக்குத் தள்ளப்பட்டன அவற்றில் சில அரசாங்கத்தோடு இணைந்த நிலையிலும் சில இணையாத நிலையிலும் செயற்பட்டாலும் தீர்வுக்கான எந்த வழியும் தென்படவில்லை. மறுபுறத்தில் இந்தியாவை நம்பாமல் தன் வழியே செயற்படுகின்ற தமிழீழ விடுதலைப் புலிகளின் யுத்தம் பாரதூரமான நிலமையை எய்தியுள்ளது. இந்த யுத்தத்தை காரணமாகக் காட்டிக்கொண்டு தமிழ் பேசும் மக்களுக்கான அரசியல் தீர்வை இலங்கை அரசாங்கம் பிற்போட்டபடி வருகிறது. இந்த யுத்தத்தில் வெற்றியீட்டிய பின்னர்தான் அரசாங்கம் ஒரு தீர்வை வழங்க முன்வருமென்றால் அந்நிலையில் தமிழ் பேசும் மக்கள் பேரம் பேசும் வலுவற்ற பல ஹீனமானவர்களாகவே இருப்பரென்பதும் அப்போது இலங்கை அரசு மனமுவந்து தர முன்வரும் உரிமைகளை மட்டும் வேறு வழியின்றி பெற்றுக் கொண்டு செல்லும் நிர்பந்தமான நிலையில் இருப்பர் என்பதும் ஊகிக்கக்கூடியது. இவ்வாறு பூரணதிருப்தி என்று இல்லாவிட்டாலும், ஓரளவாவது திருப்தியளிக்கக் கூடிய தீர்வாக இல்லாத ஒரு தீர்வு நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்தக் கூடிய ஒன்றாக அமையப் போவதில்லை. தற்காலிகமாக அடங்கிப் போயினும் பின்னர் காலப்போக்கில் பல்வேறு எதிர்ப்பு சக்திகளைத் தோற்றுவித்து குழப்பகரமான சூழ்நிலை மீண்டும் உருவாகவே அது வழிகோலும்.

இப்படியான ஒரு சூழ்நிலையில்தான் இலங்கை தொடர்பான கொள்கை ஒன்று தேவை என்ற குரல்களை இந்தியப் பத்திரிகைகள் மெல்ல வெளியிடத் தொடங்கியுள்ளன. இலங்கை தொடர்பான கொள்கை வகுப்பில்வெவ்வேறு திக்கில் செயற்படும் பல்வேறு காரணிகள் இந்தியாவில் தாக்கம் செலுத்துகின்றன. இந்தியா



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஒரே நாடாக இருந்தாலும் இப்படியான கொள்கைகள் ஒரு இடத்தில் மட்டும் தீர்மானிக்கப் படுவதாய் இல்லை. சிலவேளை அதில் பாதுகாப்பு அமைச்சின் செல்வாக்கு அதிகமாக இருக்கும், சில வேளை வெளிநாட்டு அமைச்சின் செல்வாக்கு அதிகமாக இருக்கும். சிலவேளை உளவுத் துறையின் செல்வாக்கு அதிகமாக இருக்கும். அந்தந்தக் காலங்களில் எதனது செல்வாக்கு ஓங்கியுள்ளதோ அதனது வழியில் இந்தியாவின் கொள்கையும் இழுபட்டுச் செல்வதாயே உள்ளது. இந்த வகையான சிக்கல் அதன் ராஜதந்திரத் துறைகளுடன் பின்னிப் பிணைந்ததாக உள்ள ஒன்று.

மற்றைய விடயம் தற்போது இந்தியா தமிழீழ விடுதலைப் புலிகளை தனது தேசிய நலனுக்கு எதிரான சக்தியாக கருதி தடை செய்துள்ள நிலையில் இலங்கை தொடர்பான கொள்கையை வகுப்பதில் ஒரு சங்கடமான நிலைமைக்கு உள்ளாகி உள்ளது. அதாவது இலங்கை அரசை முடக்குகின்ற எந்தவொரு செயற்பாடும் விடுதலைப் புலிகளை பலப்படுத்துவதாக அமைந்து விடக் கூடாது என்ற அச்சத்தை அது கொண்டிருக்கிறது. இதனால் தான் விடுதலைப் புலிகளுக்கு எதிராகவே நடவடிக்கை எடுக்கிறேன் என்ற பெயரில் இலங்கை அரசு வடக்கு கிழக்கில் போர்தொடுத்துவரும் தாக்குதல்களுக்கு எதிர்க் குரலும் எழுப்பாமல் மௌனம் சாதிக்கிறது. அதேவேளை 1987 வரையான காலப்பகுதிகளில் இவ்வாறான இலங்கை அரசின் நடவடிக்கைகளின் போது அடிக்கடி தனது ஆட்சேபனையை வெளிக்காட்டி வந்தமையும் ஈற்றில் 87 ஜுலையில் வடமராட்சித் தாக்குதலை நிறுத்த நிர்ப்பந்தித்து தான் நேரடியாக தலையிட்டமையும் தெரிந்ததே. இவற்றை மீள நினைவுபடுத்திப் பார்த்தால், இந்தியாவின் இன்றைய மௌனத்தின் பின்னால் அதன் சிந்தனையில் ஏற்பட்டிருக்கும் குழப்பங்கள்தான் காரணமென அனுமானிக்கலாம்.

இதேபோல் முன்னர் இலங்கை அகதிகளை வரவேற்று உபசரித்து, இந்த அகதிகளின் பிரச்சனையை தான் இலங்கை விவகாரத்தில் அக்கறைகாட்ட ஒரு வலுவான காரணமாக காண்பித்து வந்த இந்தியா. இப்போது அகதிகளை எவ்வளவு விரைவில் திரும்ப அனுப்ப முடியுமோ அவ்வளவு விரைவில் அனுப்பிவிட வேண்டும் என்று முயற்சிக்கிறது. எந்தக் காரணங்களை முன்னிட்டு அகதிகளை முன்னர் வரவேற்றதோ அந்தக் காரணங்கள் – அதாவது கெடுபிடி யுத்தம் – அதனால் பாதுகாப்பில்லாத சூழ்நிலை – இன்னும் இருந்து கொண்டு தான் இருக்கிறது என்பதை விட இன்னும் மோசமானதாக மாறியுள்ளது. அப்படியிருக்க இன்று திருப்பி அனுப்புவதானால் முன்னர் அது கூறிய காரணங்கள் பொய்யானதாக இருக்கவேண்டும். அதாவது அகதிகள் மீதான உண்மையான அனுதாபத்தால் அது அவர்களை ஏற்கவில்லை வேறுநோக்கத்திற்காக, அதாவது இலங்கை விவகாரத்தில் தான் தலையிட



ஒரு நியாயத்தை எட்டிக் கொள்ள மட்டுமே ஏற்றதாக இருக்க வேண்டும். தற்போது சொந்த விருப்பின் அடிப்படையில் திரும்பிப் போக விரும்புபவர்கள் மட்டுமே திருப்பி அனுப்பப் படுவர் என்று இந்தியா கூறியுள்ள போதிலும் அதற்கு மாறாக நிர்ப்பந்தங்கள் பலதரப்பட்ட வகையில் பிரயோகிக்கப்படுவதாகவே அண்மைக்காலத்தில் வெளிவந்த பல தகவல்கள் காண்பிக்கின்றன. அகதிக்கான அட்டைகளைக் கிழிப்பது, தொலைவிலுள்ள முகாம்களுக்கு மாற்றப்போவதாக அச்சுறுத்துவது என்றவாறு இந்த நெருக்குவாரங்கள் இருக்கின்றன. போக விரும்புபவர்கள் கூட அங்கு வாழ வழியில்லாமல் திரும்பிப் போகவிரும்புபவர்களாகவே கருதப்படக் கூடியவர்களேயன்றி இலங்கையில் நல்ல நிலமை திரும்பிவிட்டது என்ற நம்பிக்கையால் போக விரும்புபவர்களல்ல. அது ஒருபுறமிருக்க அவர்கள் விரும்புகிறார்களோ இல்லையோ அவர்களைத் திருப்பி அனுப்ப ஏன் இந்தியா மட்டும் இப்போது விரும்புகிறது என்பதற்கு சரியான விளக்கமில்லை.

ஒருவேளை தமிழ் நாட்டு மாநில அரசின் நிர்ப்பந்தம் காரணமாக இருக்கலாம். அப்படியான நிர்ப்பந்தம் எழவும் அதை மத்திய அரசு செவிமடுக்கவும் அகதிகள் பக்கத்தில் இழைக்கப்பட்ட தவறென்ன என்பதுதான் கேள்வி. ராஜீவ் காந்தி கொலைதான் இதற்கு காரணமென்றால் ராஜீவ்காந்தியை என்ன அகதிகளா கொன்றார்கள்? இருப்பினும் அகதிகளைத் திருப்பி அனுப்புவதில் இந்தியா காட்டும் நாட்டம் மீண்டும் அதன் தடுமாற்றமுள்ள நிலைப்பாடுகளுக்குச் சான்று பகர்வதாகவே அமைகிறது.

எனவே இலங்கை தொடர்பான இந்தியாவின் கொள்கை என்ன என்ற ஒரு கேள்வி அங்கு இப்போது தலைதூக்குவதற்கு இந்த ஈடாட்டங்கள் வழிசமைத்துள்ளன. இதையிட்டுச் சிந்திக்கும் கொள்கைவகுப்பாளர்களுக்குள் வெவ்வேறு விதமான கருத்துப் போக்குகள் காணப்படுகின்றன. சிலர் இலங்கையில் ஏற்படுகின்ற எந்த அரசியற் செயற்பாடும் இந்தியாவின் மீது தாக்கம் செலுத்துவதாய் இருக்குமென்பதால் இலங்கையின் அரசியல் செயற்பாடுகள் மீது இந்தியா தனது செல்வாக்கைச் செலுத்த வேண்டுமெனக் கருதுகிறார்கள். சிலர் இலங்கை விவகாரத்தை கைகழுவி விட்டுவிட்டு எங்கள் சோலியைப் பார்ப்போம் என்று நினைக்கிறார்கள். இலங்கை மீது இந்தியா தன் செல்வாக்கைச் செலுத்த வேண்டுமென்று வலியுறுத்துபவர்கள் மத்தியில் இலங்கை அரசிற்கு நிர்ப்பந்தங்களை ஏற்படுத்தி இதைச் சாதிக்க வேண்டுமென்று ஒரு சாராரும் இலங்கை அரசுடன் நல்லுறவு கொண்டு இதைச் சாதிக்க வேண்டுமென்று இன்னொரு சாராருமாக இருக்கிறார்கள். பிரச்சனைகளை ஒத்திப் போடுவதினூடாக பிரச்சனைகளின் உத்வேகத்தைக் குறைக்கலாமென்ற நம்பிக்கை கொண்ட, மிக நிதானமாகச் செயற் படுகின்ற அரசுத்தலைவரைக் கொண்ட இந்தியா இலங்கை தொடர்பாக கடைப்பிடிக்க வேண்டிய ஒரு கொள்கை வேண்டுமென்று உணர்கிறதென்றால் இப்படியான பல்வேறு பார்வைகளைக் கொண்ட சக்திகளைச் சமநிலைப் படுத்தி எப்படியான கொள்கையாக அது அமையுமென்று முன்னரே அனுமானிப்பது சிரமம்தான். இதில் இன்னொரு விடயம் இன்னும் கூட இந்தியாவில் ஒரு வெளிநாட்டு அமைச்சர் நியமிக்கப்படவில்லை. □



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பல்முனைப் பேட்டி

# இராணுவத்தீர்வு நிரந்தரத் தீர்வல்ல.

## பேட்டியின்மையம் இலங்கையின் இனப்பிரச்சனை

*திரு. கே. சுரேஷ் பிரேமச்சந்திரன்*

*ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் செயலாளர் நாயகமும் யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான இவர் பாராளுமன்ற தமிழர்விடுதலைக் கூட்டணிக்குழுவின் தலைவராகவும் உள்ளார். ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் ஸ்தாபகர்களுள் ஒருவரான இவர் 1981ம் ஆண்டின் அக்கட்சி மகாநாட்டில் மத்திய குழு உறுப்பினராக தெரியப்பட்டு 1990ல் அதன் செயலாளர் நாயகம் பத்பநாபாவின் மறைவுக்குப்பின் அக்கட்சியின் செயலாளநாயகமாக தெரிவுசெய்யப்பட்டார். இனப்பிரச்சனைத் தீர்வுக்காக அமைக்கப்பட்ட பாராளுமன்றத் தெரிவுக் குழுவில் அங்கம் வகிக்கிறார். தெரிவுக்குழு மற்றும் முஸ்லீம், தமிழ் பேச்சுவார்த்தைகளின் இன்றய நிலை, இந்தியாவுடனான உறவு, நிகழ்ந்து கொண்டிருக்கும் போராட்டத்தில் தங்கள் நிலை, கடந்த மாகாணசபை ஆட்சிக் காலம் போன்ற பல்வேறு விடயங்களுக்கு பதிலளிக்கிறார்.*

***கேள்வி:*** தமிழ் பேசும் மக்களின் பிரச்சனைகட்கு ஒரு தீர்வு ஏற்படாமல் இருப்பதற்கான காரணங்கள் எவையெனக் கருதுகிறீர்கள்?.

***சுரேஷ்*** ஏற்கெனவே இதற்கான தீர்வு ஒன்று உள்ளது. இந்திய இலங்கை ஒப்பந்தத்தினால் ஏற்பட்ட மாகாணசபைதான் அது. அதை இலங்கை அரசாங்கம் ஏற்றுக் கொண்டும் உள்ளது. இருந்தும் அதை விடுத்து இன்று வேறொரு தீர்வைப் பற்றிப் பேசுகிறது. இதன் அர்த்தம் அத் தீர்வை மறைமுகமாக எதிர்ப்பதாக இருக்கிறது. அப்படி வேறொரு தீர்வு பற்றி பேசுவதானால் அத்தீர்வு இலங்கை இந்திய ஒப்பந்தத்திலும் கூடுதலான ஒன்றைத் தமிழ் பேசும் மக்களுக்கு வழங்குவதாக இருக்க வேண்டும். ஆனால் இங்கு இதுபற்றிப் பேசும் அரசாங்கமோ அல்லது எஸ். எல். எஃப். பி./எம். ஈ. பி போன்ற சிங்களப் பெரும்பான்மைக் கட்சிகளோ கிடைத்திருந்த தீர்வில் இருக்கக்கூடிய வடக்குக் கிழக்கு இணைப்பை நிரந்தரமாக்குவதற்குப் பதில் உடைக்கவே முற்படுகிறார்கள். எனவே இங்கு தடைக்கல்லாக உள்ள முக்கிய பிரச்சனை இக் கட்சிகளுக்கு ஒரு நியாயமான தீர்வை ஈட்ட வேண்டும் என்ற இதய சுத்தியான மனப் பான்மை இல்லாமையே.

***கேள்வி:*** இதை நீங்கள் சிங்கள மக்களுக்கு உள்ள மனப்பாங்காகக் கருதுகிறீர்களா அல்லது அரசியற் கட்சிகளது மனப்பாங்காக கருதுகிறீர்களா?

***சுரேஷ்*** மக்கள் இந்த யுத்தம் காரணமாக மிகவும் கஷ்டத்துக்குள்ளாகியுள்ளார்கள். இந்த யுத்தத்தில் நாளாந்தம் தம் பிள்ளைகளைப் பலி கொடுப்பது சாதாரண சிங்கள மக்களேயன்றி அரசியல் வாதிகளல்ல. அத்துடன் எல்லையோரக் கிராமங்கள் தாக்கப்படும்போது உயிர், உடமைகள் இழப்பதுவும் இம் மக்களேதான். இதைவிட இந்த யுத்தம் காரணமாக நாட்டின் பொருளாதாரம் சீர்குலைந்து போயுள்ளது. விலைகள் ஏறிக் கொண்டே போகிறது. இதனால் மக்கள் அன்றாட வாழ்வை நடத்தவே மிகுந்த கஷ்டத்துக்குள்ளாகியுள்ளார்கள். அதனால் அவர்கள் இப்பிரச்சனைக்கு எவ்வளவு விரைவில் தீர்வு ஏற்படும் என்றே எதிர்பார்க்கிறார்கள். சிங்கள இனவாதம் என்பது குறுகிய நோக்கம் கொண்ட அரசியல் சக்திகளால் ஊட்டப்பட்டு வளர்க்கப் பட்டு வந்த ஒன்று. ஆனால் அண்மைக்கால நிகழ்வுகளை எடுத்துப்பார்த்தால் சிங்கள மக்களின் புதிய தலைமுறைகளில் சிந்தனை மாற்றங்கள் ஏற்பட்டிருப்பதை அவதானிக்க முடிகிறது. 1983ல் பதின்மூன்று இராணுவத்தினர் கொல்லப்பட்ட சம்பவத்தின் எதிரொலியாக மிகப் பெரிய கலவரமே ஏற்பட்டிருந்தது. ஆனால் இன்று பெரும் பெரும் இராணுவத்தலைவர்கள் பிரிகேடியர்கள் கேர்ணல்கள் போன்றோர் கொல்லப்பட்டும் கூட சிங்கள மக்கள் தமிழ் மக்களுக்கு எந்த வன்முறையும் ஏற்படுத்த நினைக்கவில்லை. மாறாக அவர்களது ஆத்திரம் அரசாங்கத்தின் மீதே திரும்பியிருந்தது. இது எதைக் காட்டுகிறதென்றால் அவர்கள் இந்த யுத்தத்தையும் அழிவுகளையும் விரும்பவில்லை என்பதையே. இருப்பினும் இம் மக்களை இனவாதத்தின் பக்கம் திருப்பி விட வென்று ஒரு கூட்டம் வேலை செய்து கொண்டிருக்கிறது.

***கேள்வி:*** பாராளுமன்றத் தெரிவுக் குழு என்ன நிலையில் உள்ளது?


***சுரேஷ்*** ஏறத்தாள ஒருவருடமாகி விட்டது. இருந்தும் ஒரு தீர்வு ஏற்படுவதற்கான முடிவுகள் ஈட்டப்படவில்லை. இது வரை மாகாணசபைகளுக்கான சட்டம் ஒழுங்கு, காணிப்பங்கீடு பற்றிய விடயங்கள் ஆராயப்பட்டபோதிலும் அவற்றிலும் முடிவென்று எதுவும் இன்றும் ஏற்படவில்லை. இவையெல்லாவற்றையும் விட இப்பிரச்சனைக்கு தீர்வு காணப்படவேண்டுமானால் இப்பிரச்சனையின் மையம் - கரு - எது வெனக் கண்டு அதற்கு தீர்வு காண வேண்டும். அதாவது தமிழ் பேசும் மக்களின் தீர்வுக்கான அலகு என்ன என்பதில் தீர்வு காணப்பட வேண்டும். அது இன்று வடகிழக்கு இணைந்த ஒரு அலகா அல்லது பிரிந்த இரு அலகுகளா என்ற கேள்வி உருவில் உள்ளது. அதற்கு எந்தவொரு தீர்வும் கிட்டவில்லை. தமிழ் பேசும் 'கட்சிகளைப் பொறுத்தவரை இணைந்த அலகாக இருக்கவேண்டுமென்பதையே வலியுறுத்தி வருகின்றனர். தெரிவுக்குழுவை எடுத்துப்பார்த்தால் எந்தெந்தச் சிங்களப் கட்சிகள் இனப்பிரச்சனையை முடிவுக்கு கொண்டுவருவதில் முட்டுக் கட்டைகளாக இருந்தனவோ அவையேதான் மீண்டும் இதில் பெரும்பான்மையான பிரதிநிதித்துவம் வகிக்





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கின்றன. இந்நிலையில் இத் தெரிவுக் குழுவூடாக நியாயமான ஒரு தீர்வை ஈட்டுவது மிகவும் சிரமம்.

**கேள்வி:** அப்படியானால் நீங்கள் ஏன் இன்னும் இத் தெரிவுக்குழுவில் இருந்து கொண்டிருக்கிறீர்கள்?

**சுரேஷ்:** நாங்கள் தான் ஒரு தீர்வு ஏற்படுவதைக் குழப்பியடித்தோம் என்று காரணங்காட்ட ஒரு வாய்ப்புக் கொடுக்கக் கூடாது என்பதற்காக. அத்துடன் பொதுவாகவே தீவிரவாதிகள் என்று வர்ணிப்பதினூடாக எம்மை சமாதான விரோதிகளாக சித்தரித்து வந்த இச் சக்திகள்தான் உண்மையில் சமாதானத்துக்கு விரோதமானவர்களென்பதையும் தமிழ்க் கட்சிகள் எவ்வளவு தூரம் ஒரு சமாதானமானத் தீர்வை ஈட்டுவதற்கு விசுவாசமாக நின்றன என்பதையும் எடுத்துக்காட்ட. அவர்களால் ஒரு தீர்வை வழங்க முடியாது என்ற நிலை உருவான பின் நாம் விலகுவதுதான் சரியானதே அல்லாமல் இடை நடுவில் முறித்துக் கொண்டு வெளியேறுவது விவேகமானதல்ல.

**கேள்வி:** தெரிவுக்குழுவில் தீர்வு ஏற்படாத பட்சத்தில் அரசாங்கம் இராணுவத்தீர்வை நாடுமெனக் கருதுகிறீர்களா?

**சுரேஷ்:** இன்றைய நிலையைப் பொறுத்தவரை அரசாங்கம் புலிகளைப் பலஹீனப் படுத்துவதன் மூலமும் அதனைத் தொடர்ந்து தாம் விரும்பும் ஓர் தீர்வை திணிப்பதன் மூலமும் இப்பிரச்சனையைத் தீர்க்கலாமென நம்புவதாகத் தோன்றுகிறது. வடகிழக்கில் இன்று புலிகள் பலஹீனப்பட்டுள்ளார்கள் என்பது உண்மையே. ராணுவத்தை நேர் எதிர்கொண்டு யுத்தம் புரிந்து வந்தவர்கள் இன்று மீண்டும் மறைந்திருந்து தாக்கும் யுத்த முறைக்கு பின்வாங்கி வருகிறார்கள். இது தவிர சிறீலங்கா ராணுவமும் கிழக்கு மாகாணத்தின் மிகப்பெரும் பகுதியையும் வடக்கு மாகாணத்தின் கணிசமான பகுதியையும் தனது கட்டுப்பாட்டில் கொண்டு வந்துள்ளது. ஆனால் இவ்வாறு புலிகளை பலஹீனப்படுத்துவதால் மாத்திரம் ஒரு சமாதானத் தீர்வை ஈட்ட முடியாது. மக்கள் ஏற்றுக் கொள்ளக் கூடிய வகையில் அவர்களது பிரதேசங்கள் அபகரிக்கப் படாத நிலையும் அவர்களது பாதுகாப்பும் உறுதிசெய்யப்பட்ட, அவர்களது அன்றாட வேலைகளைக் கவனிக்கவும் அவர்களுக்கான கல்வி, தொழில் வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுக்கவும் கூடிய ஒரு அமைப்பு முறை ஏற்படுத்தப் பட்டால் மாத்திரமே மக்கள் மத்தியிலுள்ள எதிர்ப்புணர்வு நீங்கும். இவ் வெதிர்ப்புணர்வு இருக்கும்வரை தீர்வு ஏற்படாது. எனவே இராணுவத்தீர்வு சிலவேளை அரசாங்கத்திற்கு தற்காலிகமாக சில தொல்லைகள் நீங்கிவிட்டன என்ற உணர்வை ஏற்படுத்தலாம். ஆனால் அது நிரந்தரமாக இருக்காது.

**கேள்வி:** இப்படியான நிலையில் தமிழீழ விடுதலைப்புலிகள் வேறுதிக்கிலும் நீங்கள் வேறுதிக்கிலும் செயற்படுவது தமிழ் பேசும் மக்களைப் மேலும் பலஹீனப் படுத்துவதாக அமையாதா?

**சுரேஷ்:** இந்தக் கேள்வியை இன்னொரு விதத்தில் கேட்பதானால் ஏன் நீங்கள் புலிகளுடன் ஒற்றுமையாக இருக்க முடியாது என்று கேட்கிறீர்கள். நான் உங்களிடம் சொல்லக்கூடியது என்னவென்றால் நீங்கள் இந்தக் கேள்வியை முதலில் அவர்களிடம்தான் கேட்க வேண்டும். அவர்களிடம் துளியளவுதன்னும் ஒற்றுமையில் விருப்பம் தென்பட்டால் பின்னர் எங்களிடம் வாருங்கள். ஏனெனில் நாம் ஒருபோதும் ஒற்றுமைக்குத் தடையாக இருந்ததில்லை. மாறாக திரும்பத்திரும்ப ஒற்றுமைக்காக முயற்சித்தவர்கள் நாம்.

**கேள்வி:** ஆனால் நீங்கள் உங்களது மாகாணசபை ஆட்சிக்காலத்தில் அவர்களைத் தாக்கியிருந்தீர்கள் அல்லவா?

**சுரேஷ்:** இல்லை. நாம் தற்காப்பிலேயே ஈடுபட்டோம். எமக்கு எம்மைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் அவர்களால் ஏற்பட்டமையாலேயே அப்படிச் செய்தோம். வெறுமனே பார்வையாளர்களாக இருந்தவர்களுக்கு நாமும் தாக்கியதாகத் தெரியலாம். ஆனால் வரலாற்றை உன்னிப்பாகக் கவனித்து வந்தவர்களுக்கு யார் குற்றவாளிகள் என்பது புரியும். எம்மை முதலில் தாக்கியவர்கள் புலிகளே என்பதை யாவரும் அறிவர். எம்மை மட்டுமல்ல ஏனைய சக இயக்கங்களையுமே அவர்கள் தாக்கியிருந்தார்கள். ஆனாலும் அதன் பின்னால் கூட நாம் ஒற்றுமைக்கு முயற்சித்துப் பார்த்தோம். இந்திய இலங்கை ஒப்பந்தத்தின் பின்னால் முன்னர் நடந்தவற்றை மறந்துவிட்டு மக்களின் நலன்கருதி ஒன்றுபடுவோம் எனக் கேட்டுப்பார்த்தோம். பல்வேறு இடங்களிலும் அவர்களின் பிரதேசத்தலைவர்கள் மட்டத்தில் பேச்சுவார்த்தை நடத்தியும் பார்த்தோம். ஆனால் அவர்கள் திரும்பவும் எம்மீது தாக்குதல் நடத்தினர். இந்நிலையில் நாம் எம்மைத் தற்காத்துக் கொள்ள வேண்டியவர்களானோம். மாகாணசபை அரசை நிறுவிய பின்னர் கூட அதன் ஆட்சியை அவர்களுடன் பகிர்ந்துகொள்ள அழைப்பு விடுத்தோம். அவர்களோ அதை சீர்குலைக்கும் நடவடிக்கைகளில் இறங்கினர். எனவேதான் எம் உயிர்களையும் மாகாணசபை அரசையும் பாதுகாக்க நாம் அவர்களுடன் மோத வேண்டி ஏற்பட்டது. இது தற்காப்புக்காக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை. நாம் ஒருபோதும் அவர்களைத் தடை செய்யவில்லை. அவர்களின் கருத்துச் சுதந்திரத்தை மறுக்கவுமில்லை. இப்படிச் செய்தவர்கள் அவர்களே. இப்போதும் கூட நாம் ஒற்றுமைக்குத் தயார். வெவ்வேறு கொள்கைகளையும் பாதைகளையும் கொண்ட அமைப்புகளாக இருந்தாற் கூட அவை ஒற்றுமையாய்ச் செயற்பட முடியும் புளொட் வேறுபாதையில் டெலோ வேறுபாதையில் நாம் வேறு பாதையில் இயங்குகிறோம். அவர்கள் அரசாங்கத்துடன் சேர்ந்து செல்கிறார்கள். நாம் விலகி நின்று அரசாங்கத்துடன் சர்ச்சைப் பட்டுவருகிறோம். இருந்தும் அக்கட்சிகளுடன் ஒற்றுமையாகத்தானே செயற்படுகிறோம். இவ்வாறு ஏன் விடுதலைப்புலிகளும் செயற்பட முடியாது? மேலும் நாம் ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த காலத்திலும் தமிழர் விடுதலைக் கூட்டணி, தமிழ் காங்கிரஸ் போன்ற கட்சிகள் பாராளுமன்ற வழிமுறையில் நம்பிக்கை வைத்திருந்தன. அவற்றின் பாதையை நாம் ஏற்கவில்லை என்பதற்காக அவற்றுடன் நாம் மோதினோமா? தடைசெய்தோமா? அவர்கள் அவர்களது பாதையில்





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

முயற்சித்தார்கள். அதில் நம்பிக்கையில்லாத நாம் எமது பாதையில் முயற்சித்தோம். ஆனால் விடுதலைப் புலிகளோ தம்மைத்தவிர வேறு இயக்கங்களோ பாதைகளோ இருக்கக்கூடாதென் நினைக்கிறார்கள். அவர்கள் அப்படி நிற்கும் வரை நாம் எப்படி ஒற்றுமைப்பட முடியும்? விடுதலைப் புலிகள் மட்டும் 1985ல் ஏற்பட்ட இயக்கங்களிடையான ஒற்றுமையைக் குலைக்காதிருந்திருந்தால் இதுவரை எமது விடுதலைப் போராட்டம் எவ்வளவோ முன்னேறியிருக்கும்.

***கேள்வி:*** வடகிழக்கு மாகாணசபை என்பதே சுதந்திர இலங்கையில் வரலாற்றில் தமிழ்பேசும் மக்களுக்கு கிடைத்த முதலாவது ஆட்சியதிகாரம். உலகம் முழுவதும் இவ் வாட்சியை தமிழ் பேசும் மக்களின் ஆட்சி எப்படி இருக்கும் என்பதற்கு ஒரு முன்னுதாரணமாக எதிர்பார்த்து அவதானித்துக் கொண்டிருந்தது. இந்நிலையில் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற உங்களால் அக்காலத்தில் இழைக்கப்பட்டதாக குற்றம் சாட்டப்படும் தவறுகள் பற்றி என்ன கூறுகிறீர்கள்?

***சுரேஷ்*** எப்படியான தவறுகள்?

***கேள்வி:*** உதாரணத்திற்கு பலவந்த ஆட்சேர்ப்பு, பொதுமக்களை கண்ணியக் குறைவாய் நடத்திய சம்பவங்கள்...?

***சுரேஷ்*** இந்தக் கேள்வியை இதய சுத்தியுடன் யாரும் கேட்பார்களானால் நாம் இதயசுத்தியுடன் பதிலளிக்கத் தயார். இதயசுத்தியுடன் கேட்பவர்கள் தவறுகளை அவை இழைக்கப்பட்ட சூழ்நிலை நிர்ப்பந்தங்களோடு விளங்கிக் கொள்வார்கள். அத்துடன் அவர்களது கேள்வியின் நோக்கம் தவறுகளைத் திருத்தியமைப்பதற்கு உதவுவதாயிருக்கும். ஆனால் கபடநோக்கத்தோடு கேள்வி எழுப்புபவர்கள் மற்றவர்கள் விடும் தவறுகளை தமது அரசியற் பிழைப்புக்கு வியாபாரமாக்கும் நோக்குடன் கேட்பவர்கள். அவர்களுக்கு மற்றவர்கள் தவறிழைப்பது கவலையளிக்காது பதிலாக சந்தோஷமளிக்கும்.

நாம் பயணம் செய்ய வேண்டிய வண்டி பழுதாகிக் கிடக்கிறது. யாருமே திருத்துவதற்கு முன்வராமல் வேடிக்கை பார்த்துக் கொண்டு இருக்கிறார்கள். நாம் முன்வந்து திருத்த முற்பட்டோம் திருத்துபவனது கைகளில் அழுக்குப் படியத்தான் செய்யும். வேடிக்கை பார்ப்பவர்கள் எமது கைகளை அழுக்கென்று குற்றம் சாட்டுகிறார்கள். அதேவேளை நாம் திருத்தியபின் அவ்வண்டியில் தாம் பயணம் செய்யக் காத்துக் கொண்டு இருக்கிறார்கள். ஒரு ஸ்குருவைத் தன்னும் பூட்டாமல் வேடிக்கை பார்த்துக் கொண்டு இருந்துவிட்டு தமது கைகள் சுத்தம் என மட்டும் விளம்பிக் கொள்கிறார்கள்.

ஆனால் விடுதலைப் புலிகளோ தம்மைத்தவிர வேறு இயக்கங்களோ பாதைகளோ இருக்கக்கூடாதென நினைக் கிறார்கள். அவர்கள் அப்படி நிற்கும் வரை நாம் எப்படி ஒற்றுமைப்பட முடியும்? விடுதலைப் புலிகள் மட்டும் 1985ல் ஏற்பட்ட இயக்கங்களிடையான ஒற்றுமையைக் குலைக்காதிருந்திருந்தால் இதுவரை எமது விடுதலைப் போராட்டம் எவ்வளவோ முன்னேறியிருக்கும்.



திருகோணமலையில் இன்றும் மாகாணசபை செயலகம் உள்ளதென்றால் அங்கு அதை அமைப்பதற்கான அரசின் ஒப்புதலைப் பெறுவதற்கு நாம் எவ்வளவு தூரம் போராட வேண்டி இருந்தது என்பது யாருக்குத் தெரியும். முன்னர் தமிழர் விடுதலைக் கூட்டணியின் மேடைப் பிரச்சாரத்தில் மட்டும் திருகோணமலைதான் எமது தலைநகராய் அமையுமென்று கூறி வந்த வெறும் வார்த்தைகளை நாம் நடைமுறையில் சாதித்துக் காட்டியோம்.

மாகாணசபை அரசை நிறுவ முற்பட்ட போது யார் முன்வந்தார்கள்? மற்றய கட்சிகளெல்லாம் தேர்தல் நடத்த உகந்த சூழ்நிலை இல்லை என்று கூறி புலிகளுக்கு அஞ்சி பின்வாங்கிக் கொண்டன. நாம் துணிந்து முன்னெடுத்ததைத் தொடர்ந்து இன்னும் ஒருசில கட்சிகளே இதற்கு ஒத்துழைத்தன. வெளியில் நின்றவர்கள் குற்றம் மட்டும் பிடித்துக் கொண்டிருந்தார்கள். நாம் எவ்வளவு சிரமப்பட்டு இந்த ஆட்சியை நிறுவினோம் என்பதை இவர்கள் புரிந்துகொள்ளப் போவதில்லை. வரலாற்றில் முதலாவது தமிழ்மக்களுக்கான ஆட்சி என்று வெறுமனே சொல்லிக் கொள்ளலாம். ஆனால் அது ஒன்றும் சுமுகமான ஒரு அமைதிச் சூழ்நிலையில் நிதானமாக சகலவிதமான ஒத்துழைப்புகளுடனும் அமைக்கப்பட்ட ஒன்றல்ல. நாம் எல்லாப் பக்கங்களிலும் போராடிக் கொண்டுதான் இதை நிர்மாணித்தோம். ஒருபுறம் சிவில் நிர்வாகத்தை குலைக்க முற்பட்டுவந்த புலிகளுடன் போராட வேண்டியிருந்தது. மறுபுறம் மாகாணசபையை நிர்மாணிப்பதற்கான ஒவ்வொரு அற்பமான தேவைகள் தொட்டு நிதி மற்றும் அதிகாரங்கள் வரை நாம் அரசுடன் போராடிப் போராடிப் பெறவேண்டியதாய் இருந்தது. திருகோணமலையில் இன்றும் மாகாணசபை செயலகம் உள்ளதென்றால் அங்கு அதை அமைப்பதற்கான அரசின் ஒப்புதலைப் பெறுவதற்கு நாம் எவ்வளவு தூரம் போராட வேண்டி இருந்தது என்பது யாருக்குத் தெரியும். முன்னர் தமிழர் விடுதலைக் கூட்டணியின் மேடைப் பிரச்சாரத்தில் மட்டும் திருகோணமலைதான் எமது தலைநகராய் அமையுமென்று கூறிவந்த வெறும் வார்த்தைகளை நாம் நடைமுறையில் சாதித்துக் காட்டினோம். அதே வேளை இந்தக் குறுகிய காலத்துள் மற்றய மாகாணசபைகள் கூட மெச்சத்தக்க ஒரு சிறப்பான நிர்வாக செயலகத்தை நிறுவிக்காட்டினோம். ஆனால் நாம் எதிர்நோக்கிய பிரச்சனைகளை எமது பக்கத்திலிருந்து ஒருமுறை சிந்தித்துப் பார்க்க குற்றம் பிடிப்பவர்கள் எத்தனித்ததுண்டா? எமது உறுப்பினர்கள் கொல்லப் பட்டார்கள். அவர்களது குடும்பங்களும் அழிக்கப்பட்டன. எமது அரசாங்கத்தில் வேலை செய்ய முன்வருபவர்கள் எச்சரிக்கப் பட்டார்கள். இந்நிலையில் தான் நாம் எம் மாகாணசபையை பாதுகாக்க வேண்டிய படையை அமைக்க நிர்ப்பந்திக்கப் பட்டோம். இந்தச் சூழ் நிலையில் நிகழ்ந்த தவறுகள்தான் இவை. தவறுகளைத் தவறுகளென்று ஏற்றுக்கொள்ள நாம் ஒரு போதும் தயங்கப்போவதில்லை. ஆனால் அத்தவறுகள் இழைக்கப்பட்ட சூழ்நிலையையும் கருத்திற் கெடுப்பது அவசியமென்பதற்காக இவ்வளவற்றையும் சொன்னேனேயன்றி தவறுக்களை நியாயப்





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## ஒற்றுமையைக் குலைக்காதிருந்தால்....

படுத்தவல்ல. ஆட்சேர்ப்பில் பலவந்தம் பாவிக்கப்பட்டது தவறென்பதை உணர்கிறோம். ஆனால் பின்னர் இவ்வாறு திரட்டப்பட்டவர்களுக்கு எமது கொள்கைகளையும் நோக்கங்களையும் எடுத்துரைத்த பின் சேர்ந்து இயங்க விரும்பாதவர்களைத் திரும்பிப் போக அனுமதித்திருந்தோம். அப்படி எத்தனையோ பேர் திரும்பிப் போயுமுள்ளார்கள். இருப்பினும் இந்த நடைமுறை மக்களுக்கு ஏற்படுத்தி இருக்கக்கூடிய இன்னல்களை நாம் விளங்கிக் கொள்ளவும் அதற்காக வருந்தவும் செய்கிறோம். மக்களை கண்ணியமில்லாமல் நடத்தியமை என்பது எமது ஸ்தாபனத்தின் சகல உறுப்பினர் மீதும் சுமத்தக்கூடிய குற்றச்சாட்டு அல்ல. மிகவும் இக்கட்டான சூழ்நிலையில் தங்கள் உயிரையும் மதிக்காது சொந்த நலன்களைத் துறந்து பல உறுப்பினர்கள் அர்ப்பண உணர்வுடன் உழைத்தார்கள். எனினும் சிலர் தம் நற்பெயரினை துஷ்பிரயோகம் செய்துள்ளார்கள். அவர்கள் இழைத்த தவறுகள் ஏனைய உண்மையாக உழைத்தவர்களது உழைப்பையும் மாசுபடுத்தி விட்டது. இது தான் நடந்தது.

**கேள்வி:** இந்திய சார்பு நிலைப்பாட்டை நீங்கள் கொண்டுள்ளதாக கருதப்படுகிறது. இதுகுறித்து என்ன கூறுகிறீர்கள்?

**சுரேஷ்:** இதில் எந்த ஒழிவுமறைவுக்கும் இடமில்லையே. நாம் வெளிவாரியாக இந்தியா எமது நட்பு சக்தியென்று தயக்கமில்லாமல் சொல்லிவருகிறோம். அந்த நிலைப்பாடு சரியானது என நாம் நம்புவதுடன் அதற்காக வாதாடி வருகிறோம். இன்றைய உலகில் நாம் எந்த வெளிநாட்டு உதவியுமின்றி தன்னந்தனியே போராடி வெல்வது சாத்தியமென்று யாராவது சொல்வார்களா? அப்படியானால் நைஜீரியாவில் எவருக்குமே தெரியாமல் பயஃபிறா இயக்கம் அழிக்கப்பட்டது போல் அழிக்கப்படுவோம். இந்தியா எமது அண்டை நாடு. அதில் ஐந்து கோடி தமிழ்மக்கள் வாழ்கிறார்கள். அது ஒரு சோஷலிச நாடாக இல்லாதிருக்கலாம். ஆனால் காலணி ஆதிக்கத்தை எதிர்க்கிற ஒரு நாடு. அது உலகின் முற்போக்கு போராட்டங்களை ஆதரித்து வருகிறது. அத்துடன் தெற்காசியாவில் ஒரு வல்லமை பொருந்திய நாடு. உலகலாவிய நன் மதிப்பைப் பெற்ற ஒருநாடு. அப்படியான ஒரு நாட்டினது நட்பைப் பெறுவது எமது போராட்டத்திற்கு மிகுந்த பலம் சேர்க்கிற ஒன்று. இந்தியா ஈழப் பிரிவினையை ஆதரிக்காமல் இருக்கலாம். ஆனால் இலங்கையில் தமிழ்ப் பேசும் மக்களுக்கான உரிமைகள் வளங்கப்பட வேண்டுமென்பதில் அக்கறை காட்டுகிறது. இதற்காக குரலெழுப்பி வந்த ஒரு நாடு. ஏன் நாம் அதனுடன் நட்புறவு வைத்துக் கொள்ளக் கூடாது? தனித்துவம் என்று கூறிக் கொண்டு இந்தியாவை எதிர்த்தவர்கள் இறுதியில் சர்வதேச பிற்போக்கு சக்திகளின் கைக் கூலிகளாகத்தான் மாறிப் போனார்கள். இலங்கையின் வரலாறே ஒப்பந்தங்களை கிழித்துவந்த ஒரு நேர்மையற்ற வரலாறாகவே இதுவரை இருக்கிறது. அதனால் எமக்கான ஒரு உத்தரவாதியாக இந்தியாவை பங்காற்ற வைப்பது எமக்குப் பாதுகாப்பென நாம் கருதுகிறோம். இந்தியாவைக் கண்டு மிரளுபவர்கள் மிரளட்டும். நாம் இதில் தெளிவாகவே இருக்கிறோம்.

**கேள்வி:** தற்போது இலங்கை அரசும் தமிழீழ விடுதலைப் புலிகளும் புரிந்துவரும் யுத்தத்தில் உங்கள் நிலைப்பாடு என்ன?

**சுரேஷ்:** நாம் இரண்டு பக்கமும் சாராமல் விலகி நிற்கிறோம். விடுதலைப் புலிகள் எம்மை எதிரிகளாகக் கருதுகிறார்கள். அவர்கள் மக்களின் விடுதலை என்ற பெயரில் மனித உரிமைகளுக்கும், கருத்துச்சுதந்திரத்திற்கும், ஜனநாயகத்திற்கும் எமது சகோதர மக்களான முஸ்லிம் சமூகத்திற்கும் இழைக்கும் ஒடுக்கு முறைகளை நாம் அங்கீகரிக்கமுடியாது .நாம் சுதந் திரமென்று கருதியவையே இவை தான். இவற்றை ஒடுக்கிக்கொண்டு மேற்கொள்ளும் போராட்டம் சுதந்திரப் போராட்ட மென்று எப்படிக் கூற முடியும்? மறுபக்கம் அரசாங்கம். தமிழ்பேசும் மக்களுக்கு கடைசியாக கிடைத்திருந்த மாகாண சபையையும் கூட இந்தியா திரும்பிப் போன கையோடு கலைத்துவிட்டு நிற்பதைத்தவிர இதுவரை எந்தத் தீர்வையும் அது வழங்கவில்லை. மற்றய எல்லோரையும் தெரிவுக்குழுவுக்கு தங்கள் யோசனைகளை வழங்கும்படி கூறிவிட்டு அரசாங்கக்கட்சி எதையுமே முன்வைக்கவில்லை. அவர்கள் எமது மக்களுக்குச் செய்த அழிவுகளைக் கண்டோம். அவர் என்னத்தைத் தரப்போகிறார்கள் என்று சொல்லவுமில்லை. எப்படி நாம் அவர்களுடன் சேர்ந்து வேலை செய்வது? எனவே விலகியிருந்து அரசியற் தீர்வுக்காக தொடர்ந்து குரலெழுப்பி வருகிறோம். முஸ்லிம் தமிழ் ஒற்றுமைக்கான பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டு வருகிறோம். அத்துடன் ஜனநாயகத்திற்காக இதர கட்சிகளுடன் அவ்வப்போது இணைந்து போராடியும் வருகிறோம்.

**கேள்வி:** முஸ்லிம், தமிழ் கட்சிகளது பேச்சுவார்த்தை என்ன நிலையிலுள்ளது?

**சுரேஷ்:** தமிழ் கட்சிகள் முஸ்லிம் மக்களும் தமிழ் மக்களைப்போல் சகல உரிமைகளுடனும் பாதுகாப்புடனும் வாழ வேண்டும் என்று கருதுகின்றன. அதற்காக எவ்வளவு விட்டுக் கொடுத்தும் ஒரு உடன்பாடு காணவேண்டுமென்பதில் ஆர்வமாயுள்ளனர். ஆனால் அப்படியான உடன்பாடு நடைமுறையில் அமுல்படுத்தக் கூடிய வகையில் அமையவேண்டும் மென்பதே இங்குள்ள பிரச்சனை. அதை யிட்டுத்தான் இப்போது சிந்தித்து வருகிறோம். முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அஷ்ரஃப் ம் இதைத்தான் எண்ணுகிறார். இந்தப் பிரச்சனையை தீர்த்துக் கொண்டால் பேச்சுவார்த்தை வெற்றிகரமாக முடியும். □



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# வாடகை நட்பு

"**வா** சுசி, வெளயாடவாறயா?"

எட்டிப் பார்க்கறேன் எங்கள் 'குடி. சைக்குச் சற்றுத் தொலைவில் நின்று ஒருசிறுமி அழைக்கிறாள்.

"பிள்ளையை யாரோ கூப்பிடுகினம் இதார் இது புதுச்சினேகித மோ? சிரித்த படி கேட் கிறேன்.

"ஓ! காமாட்சியோ அவ என்னோட படிக்கிறவ அம்மா. நான் போறன் இந் தக்காசப் பத்திரமா வச்சிருந்து பிறகு தாங்கோ என்ன"

"இதேது பிள் ளைக்கு" என் கை யில் ஐம்பது சதத்தை வைக்கிறாள் "கப்ப லுக்கு வர முந்தி அனோமா தந்தவ அம்மா. "சீனி போல அறங் கண்ண" எண்டு சொன்னா. நான் தான் வா ங் கா ம வச்சிருக்கிறன்"

"இந்தக் காசில இங் கவாங் கவும் முடியாதும்மா என மனதினுள் மட்டும் சொல்லிக் கொள் கிறேன். அவள் பெறுவது இந்த ஐம்பது சதத்தை மட்டுமல்ல அனோ மாவுடனான நட்பை யுந்தான் என்பத னால் உரக்கவோ சொல்ல முடியவில்லை.

காசை உள்ளங்கையில் திணித்து விட்டு விளையாடும் மகிழ்ச்சியில் குதித்துக் கொண்டு ஓடுகிறாள். நிமிட சந்தோசத் தின் நிம்மதியிலேயே காலங்கழித்துவிடும் குழந்தைப் பருவம். இந்த வாசுகி வள ராமலேயே இருந்து விட்டால் ............ எவ்வளவு நிம்மதி. வா.....சுசி என அழைத்தால் மட்டும் போதுமா? அவள் சுகித்திருக்க என்ன வைத்திருக்கிறேன் இந்த முகாமில்? முகமும் இல்லாது முக வரியும் இல்லாது போயிருக்கும் என்னால் அவள் படித்து வாங்காமலேயே ஒரு பட் டத்தை மட்டும் வாங்கிக் கொடுக்க முடிந்தது அகதி..... இலங்கை அகதி.....

ஓலைத் தட்டியில் மாலை நிழலொன்று மடங்கி விழுகிறது.

"என்ன கெதியா வந்திட்டீங்க விளையாடி. முடிச்சிட்டீங்களோ?"




என் கேள்விக்கு விடையளிக்காது எங்கோ பார்த்துக்கொண்டிருக்கிறாள் வாசுகி. ஏதோவோர் கனத்த எண்ணத்தின் பாரத் தில் அமுங்கிப் போய் முகம் சிறுத்துப் போயிருக்கிறது.

"அம்மா காமாட்சியவையள் பாவமம்மா"

அவள் என்ன கூற வருகிறாள் என்பதைப் புரிந்துகொள்ள இயலாதவளாய்ப் புரு வத்தை நெரிக்கிறேன்.

"அவையளுக்கு லாம்பெண்ணை கிடைக்கேல்லயாம். எல்லாம் எங்களால தானாம் எங்களுக்குத் தாறதால தான் அவையளுக்கு எந்தச் சூப்பன் சாமானும் லேசில கிடைக்காதாம்"

என்றவள் என்னருகில் வந்து என் முக வாயை நிமிர்த்தி "அம்மா நாங்கள் திரும் பவும் கப்பல்ல ஏறிப் போவமோ? நாங்கள் போனா இவையளுக்கு எல்லாம் கிடைக்கு மல்லே. காமாட்சி நல்ல பிள்ளையம்மா.

"அதிருக்கட்டும், ஆறு மணியாச்சுது சாமி கும்பிட இல்லையோ? கையக் கால்க் கழுவு" என்றவாறு அவ்விடத்தை விட்டகலு கிறேன்.

" ஐந்து 'கரத்தனை ஆனை முகத்தனை" இந்தி ......

யாரு உள்ள? வாசுகி யின் மழலைக்குர லூடே அந்த ஆண் குரலும் கேட்கிறது.

வாசலருகில் ஓர் அதி காரி

"ஏம்மா, ஊருக்குப் போகணுமின்னு பத்திரத்தில கையெ ழுத்துப் போட்டீங் கல்ல. அடுத்த வாரம் கௌம்ப ஆயத்தமா இ ரு ங் க , ஒங் களயல் லாம் ஏரோப்பிளேனில அழைச்சிட்டுப் போ வாகளாம்" என்றவர் கொடுத்து வச்சவங்க என்று முணுமுணுத் துச் செல்கிறார்.

ஓ! அந்த நாட்கள் நெருங்கி விட்டன வா? நிச்சயமில்லா வாழ்க்கைக்கு ஒரு நிரந்தரப் பயணம்! இன்னும் ஏழே ஏழு நாட்களில்! வாசுகிக்கு இச் செய்தி மகிழ்ச்சி யைத் தரலாமோ?

திரும்பிப் பார்க்கிறேன் விழுந்து விழுந்து விநாயகரிடம் அப்படி என்ன வேண்டுதல் நெடு நேரமாய்?

"பிள்ளை இல்லடைக்குக் கன நேரம் கும்





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பிட்டியள் என்ன"?

"ஓமம்மா நான் அப்புசாமீட்ட என்ன கேட்டனான் தெரியுமே? அனோமா மாதிரி கொஞ்ச நாளைக்கு இல்லாம இந்தக் காமாட்சியாவது கனநாளுக்கு என்னோட விளையாடிற ஒரு ப்ரண்டா இருக்க வேணுமெண்டு"

நான் எதுவும் பேசவில்லை. ஆசை என்று எதையும் வளர்த்துக் கொள்ள லாயக்கில்லாத அகதிகளம்மா... விம்மல் மனதுக்குள்ளேயே அடங்கிவிடுகிறது.

அவளது முகத்தைப் பார்க்கிறேன். இந்த முகத்தில் இப்போது அரும்பியிருக்கும் மலர்ச்சி எத்தனை நாளைக்கு? எமது கையிலில்லாத வாழ்க்கை. நுட்பமான உணர்ச்சிகளையெல்லாம் அலட்சியமாக நசுக்கிக் கொண்டு நடந்து போகின்றது ஒரு சோடி இரும்புக் கால்கள். அவை தான் விதியின் கால்களோ?

"இந்தக் காசையும் வச்சிருந்து பிறகு தாருங்கோம்மா"

வியர்வையில் பிசுபிசுத்துப் போன என் உள்ளங்கையை விரித்து வைக்கிறாள்.

ஒரு இந்திய ஐந்து பைசா!

வியர்வையில் ஏற்கனவே நனைந்திருந்த ஐம்பது சதத்தோடு அது ஒட்டிக் கொள்கிறது.

இதேது பிள்ளைக்கு எனக் கேட்க முனைந்த நான் கேள்வியைக் கேட்க விரும்பாமலேயே கையை இறுக மூடிக் கொள்கிறேன்.

ஓர் அனுபவத்திற்கு ஏன்தான் இரண்டு பிரதிகளோ! □

இராஜி ஆறுமுகம்.

குறிப்பு: அண்மையில் உள்துறை அமைச்சர் ரனில் விக்கிரமசிங்க பத்திரிகையாளர் பாதுகாப்பு தொடர்பாக சில நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவை குறித்து பொலிஸ் நிலையங்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.



# பத்திரிகையாளரின் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம்

அண்மையில் கொழும்பில் பத்திரிகையாளருக்கு எதிரான அச்சுறுத்தல்களைக் கண்டித்து எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்று நடத்தப்பட்டது. இந்த ஆர்ப்பாட்டம் அதற்கு சில நாட்களுக்கு முன் 'அத்த' பத்திரிகையின் கேலிச்சித்திர ஓவியர் ஜிஃப்றி யூனுஸ் சில குண்டர்களால் வழி மறித்து கத்திக்குத்துக்கு உள்ளாக்கப்பட்ட சம்பவத்தை தொடர்ந்து மேற்கொள்ளப் பட்டது. இதற்கு முன்னரும் யூனுஸ் மூன்று முறை கேலிச்சித்திரம் வரைவதை நிறுத்தும்படி எச்சரித்து மிரட்டப்பட்டுள்ளார். ஒவ்வொருமுறையும் அவர் இதுகுறித்து பொலீசில் முறையிட்டு மிருந்தார். கடைசித் தடவை முறையீடு செய்துவிட்டு வீடு திரும்பிய போதே இவ்வாறு கத்திக்குத்துக்கு உள்ளாகினார்.

இவ்வகையில் சட்டத்துக்குப் புறம்பான வழிகளில் பத்திரிகையாளர்களை மிரட்டல்கள் கொலைகள் மூலம் கட்டுப் படுத்த முனையும் சம்பவங்கள் பல முன்னரும் நடந்துள்ளன. ஆனால் இந்நிலைத்தில் பத்திரிகையாளர் எதிர்நோக்கும் அபாயங்களை நீக்கக்கூடிய எந்த உருப்படியான நடவடிக்கைகளும் எவராலும் எடுக்கப்படவில்லை. குண்டர்கள் அச்சுறுத்தல் தவிர பத்திரிகையாளர்மீது இரகசியப் போலீஸ் விசாரணைகள், பத்திரிகைகள் மீது வழக்குத் தொடுத்தல் போன்ற இதர நெருக்கடிகளும் உள்ளன. பாராளுமன்ற கௌரவம் தொடர்பான ஒரு சட்டம் பாராளுமன்ற உறுப்பினர்களின் தவறுகளைச் சுட்டிக்காட்ட தடையாக இருக்கிறது. இதனால் மக்கள் தங்கள் பிரதிநிதிகள் எந்த அளவு தூய்மையான தெரிவு செய்யப்பட்ட நோக்கங்களுக்கு விசுவாசமாக நடந்து கொள்கிறார்கள் என்பதை அறிந்து கொள்வதற்கான உரிமை மறுக்கப்படுகிறது. பத்திரிகையாளர் மீது விழுகின்ற அடி மக்கள் மீது விழுகின்ற அடியாகும். ஏனெனில் அவர்கள் தான் மக்களுக்கு நாட்டில் என்ன நடக்கிறது என்பதை வெளிக் கொணர்பவர்கள். இவர்கள் நசுக்கப்படுவதன் மூலம் மக்கள் குருடர்களாக்கப் படுகிறார்கள். ஒரு நாட்டில் எவ்வளவு தூரம் ஜனநாயகம் நிலவுகிறது என்பதற்கு மிக இலகுவான அளவுகோல் அந் நாட்டில் பத்திரிகையாளர்கள் எவ்வளவு சுதந்திரமாக எழுதக்கூடியதாய் இருக்கிறது என்பதே. இலங்கையில் வானொலி, தொலைக்காட்சி ஆகிய மக்கள் தொடர்புச் சாதனங்கள் அரசாங்கத்தின் பூரண கட்டுப்பாட்டிலும் லேக்ஹவுஸ் பத்திரிகைகள் யாவும் அரசாங்கப் பத்திரிகைகளாகவும் இருக்கும் நிலையில் மற்றப் பக்கக் கருத்துக்கள் மக்களை எட்டுவதற்கான வாய்ப்புக்கள் குறைவே. அவ்வாறு இருக்கக் கூடிய ஒருசில தனிப்பட்ட பத்திரிகைகள் கூட செயற்படுவதற்கு இவ்வாறான அச்சுறுத்தல்கள் தடையாக உள்ளன. இதனால் இலங்கையில் துப்புத்துலக்கும் பத்திரிகைத்துறை (Investigative Journalism) என்பது அறவே இல்லை. இதன் காரணமாக பலவிதமான குற்றங்களும் மிக இலகுவாக மூடி மறைக்கப்பட்டுக் கொண்டு போய்விடக் கூடிய சூழ்நிலை நிலவுகிறது.

அண்மையில் கோட்டை ரெயில் நிலையத்தில் டி. யு. என். ஃப் நடத்திய கையெழுத்து வேட்டையைப் பார்க்கச் சென்ற பத்திரிகையாளர்கள் தாக்கப்பட்டமைக்கு, இத் தாக்குதல் தமக்கு இடைஞ்சல் தந்தமைக்காக அங்கிருந்த பிரயாணிகளான பொதுமக்களால் செய்யப் பட்டதாக விளக்கமளிக்கப்பட்டது. இது குறித்து, இலங்கை ஒரு நாட்டில்தான் கத்திகளோடும் பொல்லுகளோடும் பொதுமக்கள் வேலைக்குச் சென்று திரும்புகிறார்களென்று ஒரு பத்திரிகையாளர் விசனித்துக் கொண்டார். இவ்வகையான காரணங்களை கூறிவிடுவதுடன் அந்த விடயங்களுக்கு முற்றுப்புள்ளி போடப்பட்டு விடுகிறது. தொடர்ந்து உண்மையைத் தேடி ஆராய பத்திரிகையாளர்கள் அனுமதிக்கப்படுவதில்லை. பத்திரிகைத் துறையில் சுதந்திரம் இன்னும் பல படிகள் இறங்கி வர வேண்டியுள்ளது. □



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சிறுகதை

# அவசரத்தில் ஒரு கதைகேளு!

"ஓய் எழுத்தாளர் என்டிறவர் நீர்தானே"

"ஓமோம். என்ன விஷயம்."

"எனக்கு அவசரமாய் ஒரு கதை வேணும்."

"அவசரமாவோ?"

"ஓம், மினக்கெட நேரமில்லை. பஸ்சுக்குள்ள ஏறினால் பஸ்சால இறங்கிறதுக்குள்ள வாசிச்சு முடிச்சிடுறமாதிரி"

"நீர் யார்?"

"வாசகன்"

"அவசர வாசகனோ?"

"சரி. எப்பிடியும் வைச்சுக் கொள்ளும். எனக்கு இப்ப ஒரு உடன் கதை வேணும்."

"உடன் காபி, உடன் நூடுள்ஸ் மாதிரி..?"

"ஆ!. அப்பிடித்தான்"

"சரி. எப்பிடிப்பட்ட கதை?"

"அதாவது கதை ட்டூ ஹெவியாய் இருக்கக் கூடாது. லைட்டாயிருக்க வேணும். ஒரு பார்வையில ஒரு பந்திய அப்பிடியே பொஸுக்கெண்டு படிச்சிடுற மாதிரி. மற்றது கிளுகிளுப்பாய் இருக்கவேணும். சஸ்பென்ஸ் இருக்கவேணும்."

நல்லகாலம் இந்தக் கிளுகிளுப்பு, கலகலப்பு, குளுகுளுப்பு, சிலுசிலுப்பு சஸ்பென்ஸ், திறில், காதல், கூதல் எல்லாம் சின்னச் சின்ன டப்பாவில அடைச்சு கடையில விக்கேல்ல. வித்திருந்தால் இவன் இந்த பீடாக்காரன் செய்யுமாப் போல ஒவ்வொண்டிலேயும் ஒவ்வொரு கிள்ளுப் போட்டு மடிச்சு அப்பிடியே வாயில போட்டுச் சப்பிக் கொண்டு பஸ்சில நல்ல ஜாலியாய்ப் போவான் போல.

"என்ன யோசிக்கிறீர்?"

"பிள்ளையார் சுழி போட்டிட்டன்"

"எதுக்கு?"

"கதைக்கு"

"சரி சொல்லும்"

"கண்கள்........"

"கண்களா?"

"அழகான கண்கள்"

"யாருக்கு?"

"அந்தப் பெண்ணுக்கு"

"எந்தப் பெண்?"

"அந்த பஸ்சிலே போய்க் கொண்டிருக்கிற பெண்ணுக்கு"

"பஸ் எங்க போகுது?"

"ரோட்டிலே"

"ஓய், பஸ் ரோட்டில போகாமல் என்ன வானத்திலயா போகும்? கதை யொண்டு எழுதச் சொன்னால் கரடி விடுறீரா?

"இதுதான் கதை. கொஞ்சம் பொறுமையாய் கேளும்"

"நேரமில்லை ஐயா. கொஞ்சம் கெதியன விஷயத்துக்கு வாரும்"

"அவள் ஒரு அழகான பெண்"



"பொம்பிளையா? பொம்பிளையப் பற்றின கதையா....?"

"ஓம்"

"அப்ப சரி சொல்லும்"

"அவளது கண்கள் அழகானவை"

"முதலிலேயே சொல்லிட்டீரையா"

"தலை மயிர்....."

"கறுப்பெண்டு சொல்லப் போறீரா?"

"இல்லை, பறக்கிறது, காற்றிலே. யன்னலூடாக பாய்கின்ற அந்தி நேரச் சூரிய ஒளியில் அது தலையைச் சூழ ஒரு வெள்ளிப் படலம் போலப் பளபளக்கிறது.

"எங்கட மணிரத்தினத்தின்ர படங்களில பக்லைட் கொடுத்து எடுக்கிற ஷொட்ஸ் போல"

"ஓம். அவளது உதடுகள்....வெற்றிலை போடாமலே சிவந்த உதடுகள் அவளுக்கு."

"கெடுத்திட்டீரே! கொஞ்சம் கிளுகிளுப்பாய் கதை போகுதெண்டு பார்த்தா இப்பிடி எழுதிறீர். ஏனய்யா, வெறுமனே, சிவந்த உதடுகள் என்டு சொல்லியிருக்கலாமில்ல? அது என்ன வெத்தில போடாமலே சிவந்த உதடுகள்! நாகரீகமா எழுதுமையா."

"லிப்ஸ்டிக் பூசாமலே சிவந்த உதடுகள்! இப்படி வைச்சுக் கொள்ளுவமா?"

"ஆ. இது நாகரீகமா இருக்கு. சரி சொல்லும்"

"அந்த அந்திப் பொழுதில் பஸ் ஓட்டத்தின் ரம்மியமான ஓசைக்கு ஏற்றாற்போல அவள் குலுங்கிக் குலுங்கிப் போய்க் கொண்டிருக்கிறாள்"

"என்ன, எங்கட நாட்டு பஸ்சின்ட இரைச்சல் ரம்மியமான ஓசையா காது குத்திறீரா?"

"ஒரு அழகான பெண்ணுக்கு அருகே இருந்து பயணம் செய்யும் ஒரு இளைஞனுக்கு பஸ் போடும் எந்தப் பெரிய இரைச்சலும் ரம்மியமானதாகத்தான் தோன்றும்"

"பொறும். பொறும். அருகேயிருந்து பயணம் செய்யும் இளைஞனா?"

"ஓம். இருபத்தைந்து வயது இளைஞன். கட்டிளம்காளை. கன்னிப் பையன்"

"அவனது மூக்கு மிகவும் எடுப்பாயிருக்கிறது. தலைமயிர் அலட்சியமாய்ப் பறக்கிறது. மீசை அழகாகக் கிளிப் பண்ணப்பட்டிருக்கிறது. ஒரு ஸ்டைலாக காலின்மேல் கால் போட்டபடி அவன் சாய்ந்திருந்தான்"

"அட இது எங்கட ஹீரோ" வாசகன் உற்சாக முடில் கத்தினான். "எப்பிடி, எங்கட ரஜனிகாந்த் மாதிரி இருப்பானா?"

"இப்பதான், கலியாணமாகாத இருபத்தைந்து வயசு இளைஞனெண்டு சொன்னேனே. ரஜனிகாந் கலியாணமாகி பெண் சாதி பிள்ளைகளோட இருக்கிறார் வயது



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## ஐயோ என்ற பேர்ஸ்! அவள் வீறிட்டாள்

நாற்பதுக்கு மேலே."

"சரி நீர் கதையைச் சொல்லும்"

"அவனது கையிலே ஒரு புத்தகம், காலிலே ஷூ, கைவிரலிலே மோதிரம்."

"கால் விரலிலே?"

"நகம்! திரும்பவும் பழைய பிழையை விடுகிறீரே வாசகரே. காலிலே ஷூவென்டு சொன்னேனல்லோ. கால்விரலில என்னவென்டு ஷூவைக்கழட்டி உமக்குக் காட்டிறதா?"

"ஒரு இங்கியூசிட்டியில கேட்டிட்டன். சரி கதையைச் சொல்லும்"

"புத்தகத்தில் இருந்த பார்வையைச் சற்றுத்திருப்பி யன்னலூடாக இயற்கையை நோட்டம் விட்டான். எதிர்த்திசையில் வேகமாய் ஓடுகின்ற மர இலைகள் தீட்டிய பச்சை ஸ்கிறீனின் பின்னணியில் நெற்றி, மூக்கு, உதடு, நாடி என்று பக்கப் பார்வையில் வரையப்பட்ட அழகுப் பதுமையாய், இடையே அவள் பார்வையை மறைத்திருந்தாள். அந்தக் காட்சியில் பதித்த கண்ணை எடுக்க முடியாமல் அவன் லயித்திருந்த போது....

"போது.....?"

"ஒரு புகை மூட்டம்!"

"எங்கே....?"

"அவளுக்கு மறுபக்கத்தில் இருந்து"

"மறுபுறத்திலிருந்தா....?"

"ஓம். அவளுக்கு மறுபுறத்தில் இருந்து பயணம் செய்தவன் உறிஞ்சி இழுத்து ஊதித்தள்ளிய சிகரட் புகை பச்சைப் பின்புலத்தை மறைத்து அந்த அழகான காட்சியைக் குலைத்துவிடவே ரசனை கலைந்து இளைஞன் மீண்டும் புத்தகத்துள் மூழ்கினான்."

"இதுயார், இன்னொருவனா?"

"ஓம், புகை யன்னல்வரை சென்று பாதி வெளியே பறக்க மீதி உள்ளே திரும்பி காற்றோடுசேர்ந்து முகங்களில் அடித்தது"

"நிறுத்தும், நிறுத்தும்! எனக்கு புதுசாய் முளைச்சவன் யாரென்டே புரியேல்ல நீர் புகையைப் பற்றிச் சொல்லிக் கொண்டு போறீர். யார் இது மூன்றாவது ஆள்?"

"இவன் இன்னொருவன். ஒருபக்கம் அவன் மறுபக்கம் இவன்"

"ஒரு பெண்ணும் இரண்டு ஆண்களுமா"

"ஓம். ஆனால் இவன் கொஞ்சம் வித்தியாசமானவன்"

"எப்படி?"

"இவனது பார்வை சரியில்லை"

"ஏன்?"

"அட"

"அவன் நீண்ட திருஷ்டி விட்டிருந்தான். புட்டிப்பால் குடித்த குழந்தையின் கடைவாய் இருமருங்கிலும் பால் வடியுமே, அதைப்போல இவனுக்கு மீசை வழிந்தது. அது நாடியில் குத்திக் கொண்டு நிற்கின்ற தாடியோடு வந்து தொடுபட்டுக் கொண்டது"

"இவன் வில்லன்!" வாசகன் திறிலோடு முணு முணுத்தான். பின்னர் தொடர்ந்து கேட்டான் "ஒல்லியாய் நீண்டு இருப்பானோ?"

"ஓம்"

"வில்லனேதான்! வாசகன் வீரிட்டான்." மொடேர்ன் வில்லன் இப்படித்தான் இருப்பான். "அவனுக்கு ஒரு கூலிங் கிளாஸ் போடுமையா!"

"அறிவிருக்கா உமக்கு. திருட்டுமுழி யென்டு சொன்னேனல்லா? கூலிங் கிளாஸ் போட்டா திருட்டுமுழி எப்பிடித் தெரியும்?"

"அதுவும் சரிதான். அப்ப கூலிங்கிளாசை கழட்டிடும். கதை சூடு பிடிக்குமாப் போல இருக்குது. சொல்லும்"

"கொமரா இப்போது அவள் பக்கம் திரும்புகிறது"

"நீர் என்ன கதை எழுதிறீரா படமெடுக்

"அவள் பார்வை அவனது புத்தகத்தை நோட்டம் விடுகிறது"

""எவனது?"

"என்னப்பா! ஞானசூனியமாய் இருக்கிறீரே. ஒருத்தன் மட்டுந்தானே புத்தகம் வைச்சிருக்கிறான்"

"நீர் பொதுப்பட "அவன்" என்டு சொன்னால் இரண்டு பேரில் எவன் என்டு புரியாமல் போகுது."

"கொஞ்சம் யோசிச்சால் புரிஞ்சிடும். முழு இருக்கிறதே, புத்தகம்"

"இங்கபாரும், இந்த யோசிக்கிற பிஸ்னஸ் எல்லாம் எனக்கு வேண்டாம். வாசிக்கவே நேரமில்லை, யோசிக்க ஆருக்கு ஏலும்? யோசிக்காமல் வாசிக்கக் கூடின மாதிரி எழுதும்"

"ஒருத்தன் இளைஞன், மற்றவன் திருட்டுக் காரன். இப்ப சரிதானே? இனிக்கேளும்." அவளுக்கு அது என்ன புத்தகமாய் இருக்குமென்டு அறிவதில் ஏதோ ஒரு ஆர்வம் போலும்."

"புரியுது புரியுது. காதல்கணை இப்போது பெண்ணின் பக்கமிருந்து புறப்படுகிறது. அதுதான் சரி. இப்பத்தக் காலத்தில பெண்கள்தான் லைனடிக்கிறவை"

"அவள் ஆர்வத்துடன் புத்தகத்தின் பெயரை அறிய சற்று எட்டிப் பார்க்கிறாள்."



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

"கதாசிரியரே எனக்கும் கொஞ்சம் இடம் விடும். அடுத்த கட்டத்தை நானே சொல்ல வா? அவன் அவளைப் பார்த்துச் சிரிக்கிறான் சரியா. அவளும் சிரிக்கிறாள். சரி! பிறகு அவன் "பறவாயில்லை நீங்கள் வாசிச்சிட்டுத் தாங்கோ." எண்டு புத்தகத்தைக் கொடுக்க. அவள் "தாங்ஸ்" எண்டு கொண்டு வாங்க, இரண்டு பேரிண்ட விரல்களும் முட்டுப்பட, எப்பிடி? சரிதானே. இரண்டு பேரும் ஒருத்தரை ஒருத்தர் பார்க்கினம். அண்ணலும் நோக்கினான் அவளும் நோக்கினாள். எப்பிடி நான் பிடிச்சிட்டனல்லா விஷயத்தை?

"பொறும் இப்ப நீர் கதாசிரியரோ, நான் கதாசிரியரோ?"

"நீர்"

"அப்ப நீர் ஏன் குறுக்கால பாயிறீர்? என்னை எழுதி முடிக்க விடும்."

"நீர் இழுத்தடிக்கிறீர்"

"இல்லை, நான் இப்ப முடிக்கப்போறன்"

"சரி, உம்மட கதையைச் சொல்லும்"

"ஐயோ! என்ர பேர்ஸ்!"

"ஓய்! நான் வெறும் வாசகனய்யா, உம்மட பேர்சை நானா எடுத்தன்?"

"இல்லை, இது அவளுடையது. அவள் புத்தகத்தை நோட்டம் விட்டுக் கொண்டு இருந்தாளா, திடீரென்று ஞாபகம் வந்து போர்சைத் தேடினால் காணவில்லை. பதறிப்போய் விரிட்டாள். இளைஞன் புத்தகத்திலிருந்து பார்வையைத் திருப்பினான். கிருதாக்காரன் திருட்டு முழி முழித்தான்"

"சபாஷ் கதாசிரியரே! கதையை ஒரு திறில்லாவே கொண்டு போறீர். கமோன், கதாநாயகன் கமோன்! ஒரு இளம் பெண்ணை இப்பிடி பரிதவிக்க விடுவியா? எழும்பு. கிருதாக்காரனை ஒரு உலுக்கு உலுக்கு. இதுதான் சான்ஸ் விடாதே!" வாசகன் குஷியாய் கத்தினான்.

"கொஞ்சம் பொறும். நான்தான் கதாசிரியன், ஞாபகம் வைச்சுக் கொள்ளும். கிருதாக்காரன் திருட்டு முழி முழித்தானா, பிறகு தலைச் சொறிந்தான். பிறகு தடுமாறிக் கொண்டு அவளிடம் சொன்னான்."

"என்ன சொன்னான்?"

"நீ வீட்டால வெளிக்கிடக்க என்ர கையிலதான் பேர்சைத் தந்தநீ. நான்தான் தலையிழுக்கக்க மறந்துபோய் கண்ணாடி மேசையில விட்டிட்டு வந்திட்டன்" என்றான். "நான் ஏங்கியெல்லோ போயிட்டன். அதுக்குள்ள என்ர தாலியிருக்கு" என்றாள் அவள். "பயப்பிடாதே, அது வீட்டில பத்திரமாய் இருக்கும்" என்று சமாதானம் சொன்னான் அவன்.

"பொறும் பொறும் பொறும்! கிருதாக்காரன் என்ன சொன்னான் திருப்பிச் சொல்லும்"

"மேலே சொன்ன வரிகளைத் திருப்பிப் படிச்சுப் பாரும்; அதைபோதான் சொன்னான்"

"எனக்கு ஒண்டுமே புரியேல்லையே?"

"புரியேல்லையா? அந்தப் பெண்ணின்ட புருஷன்தான் கிருதாக்காரன். அவன்தான் மறந்துபோய் பேர்சை வீட்டில விட்டிட்டு வந்திட்டான்."

"ஓய்! நீர் இப்ப என்னட்ட உதை வாங்கப் போறீர். கிருதாக்காரன்தான் அவளின்ட புருஷனா? அவன் திருட்டு முழியன் எண்டெல்லா சொன்னனீர்?"

"திருட்டு முழியனெல்லாம் உலகத்தில கலியாணமே கட்டிறதில்லையா? என்ன கதையைய்யா இது?"

"அப்போ அந்த இளைஞன்......?"

"ஓம், இளைஞன். அவனுக்கென்ன? அவன் தன்ர பாட்டில புத்தகத்தை வாசிச்சுக் கொண்டு பயணம் செய்யிறான். ஒரு பெண்ணுக்குப் பக்கத்தில ஒரு இளைஞன் இருந்து பயணம் செய்தால் இரண்டு பேரும் காதலிக்கத்தான் வேணுமெண்டு என்ன சட்டமா?"

வாசகன் சிலகணம் பேசவில்லை. என்னை ஏற இறங்கப் பார்த்தான். பின்னர் சொன்னான் "நீயெல்லாம் ஒரு கதாசிரியன் உனக்கெல்லாம் ஒரு புத்தகம். எங்கேயெண்டாலும் போய்க் குப்பையைக் கொட்டய்யா. நான் வாறன்."

அவன் போய்விட்டான். நான் பேனையை மூடிவைத்து விடுகிறேன். எனக்கு அவசரக்கதை சரிப்பட்டு வராது. □

— மனுதர்மன் —



**அறிமுகம்: நான்காவது பரிமாணம்**

**கனடாவிலிருந்து வெளிவரும் கலை இலக்கிய மாசிகையான நான்காவது பரிமாணத்தின் ஆசிரியர் க. நவம். பெயரைப் போலவே புதிய ஒரு கோணத்தில் பார்க்க வேண்டுமென்ற நோக்கத்தோடு வெளிவருகிறது. அதன் பார்வைகள் எப்படியானவை என்பது வாசகர்களின் கணிப்பீட்டுக்குரியது. அது தேர்ந்தெடுத்துப் பிரசுரித்த கதையொன்றை இங்கே தருகிறோம்.**

உங்களுக்கு குறிப்பான திட்டங்கள் ஏதும் இல்லை. நீங்கள் சொந்த ஊரை விட்டு வெகு தொலைவில் சுற்றித் திரிகிறீர்கள். உங்களிடம் பணம் கிடையாது. அங்குள்ள மக்களின் மொழியும் தெரியாது. உங்களுக்கு ஆங்கிலமும் ஹிந்துஸ்தானியும் பேசத் தெரியும் ஆனால் அப்பகுதியில் உள்ள மிகச் சிலருக்கே அந்த இரு மொழிகளும் தெரியும். அப்பொழுது நீங்கள் பல சிக்கல்களுக்கு ஆளாக நேரிடும். பல சம்பவங்கள் உங்களுக்கு நிகழும்.

நீங்கள் ஒரு ஆபத்தான சூழ்நிலையில் மாட்டிக் கொள்கிறீர்கள். முற்றிலும் அன்னியனான ஒருவன் உங்களைக் காப்பாற்றுகிறான். ஆண்டுகள் பல உருண்டோடிய பின்னும் சில நேரங்களில் அவனை நீங்கள் நினைவு கொள்கிறீர்கள். அவன் ஏன் அவ்வாறு செய்தான்?

அந்த மனிதனை நினைவுகூர்வது நீங்களல்ல நான்தான். எனக்கு ஏற்பட்ட ஒரு அனுபவத்தை விவரிக்கிறேன். என்னையும் உள்ளிட்ட மனித இனத்தைப் பற்றி சில அடிப்படையான கருத்துகள் எனக்கு உண்டு. என்னைச் சுற்றி நல்ல மனிதர்களும், திருடர்களும் பல வகையான தொற்று நோய் பீடித்தவர்களும், பைத்தியங்களும் இருக்கும் பொழுது ஒருவர் மிகுந்த கவனத்துடன் வாழ வேண்டும். இந்த உலகில் நல்லதை விட தீயதே அதிகம் இருக்கிறது. நாம் காயப்பட்ட பின்தான் இதை உணருகிறோம்.

நான் அந்த நிகழ்ச்சியை இங்கு பதிவு செய்கிறேன். ஒரு வேளை அது முக்கியத்துவமற்றதாகக் கூட இருக்கலாம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# “ஒரு மனிதன்”

## மலையாளச் சிறுகதை

சொந்த ஊரைவிட்டு சுமார் 1500 மைல்களுக்கு அப்பால் உள்ள ஒரு பெரிய நகரம். அங்கு வசிப்பவர்கள் கருணை என்ற குணத்திற்கு அப்பாற்பட்டவர்கள். அவர்கள் குரூரம்நிறைந்தவர்கள். கொலை, கொள்ளை, திருட்டு இவை அன்றாட நிகழ்ச்சிகள். பாரம்பரியமாக அந்த மக்கள் போர்வீரர்கள். அவர்களில் சிலர் தொலைவான இடங்களுக்குச் சென்று வட்டிக்குப் பணம் கொடுத்துப் பிழைப்பவர்கள். மேலும் பலர் பெரு நகரங்களில் உள்ள வங்கிகள், ஆலைகள், வர்த்தக நிறுவனங்கள் ஆகியவற்றில் காவலாளிகளாகப் பணியாற்றுபவர்கள். பணம் மிகவும் உயர்ந்ததாக அவர்களால் மதிக்கப்பட்டது. பணத்திற்காக அவர்கள் எதையும் செய்வார்கள். கொலையும் கூட.

அந்த நகரத்தின் அசுத்தமான ஒரு வீதியில் இருந்த இடுக்குப் பிடித்த ஒரு அறையில் தங்கியிருந்தேன். நான் அங்கிருக்கும் சில தொழிலாளர்களுக்கு இரவு ஒன்பதரை மணியிலிருந்து பதினோரு மணிவரை ஆங்கிலம் கற்றுக் கொடுத்தேன். அவர்களுக்கு ஆங்கிலத்தில் முகவரிகள் எழுத சொல்லிக் கொடுத்தேன். ஆங்கிலத்தில் முகவரி எழுதக் கற்றுக் கொள்வதே அங்கு பெரிய படிப்பாக கருதப்பட்டது. அஞ்சலகத்தில் முகவரிகள் எழுதித் தருபவர்களை நீங்கள் பார்த்திருக்க வேண்டும். ஒரு முகவரி எழுத ஒரு அணாவிலிருந்து நாலணாவரை அவர்களுக்குக் கட்டணமாக தரப்பட்டது.

அத்தகைய தலைவிதியிலிருந்து தப்பிக்க எண்ணியே நான் மற்றவர்களுக்கு முகவரி எழுதக் கற்றுக் கொடுத்தேன். அதன் மூலம் சிறிது சேமிக்கவும் கருதினேன்.

அந்த நாட்களில் நான் பகல் முழுவதும் தூங்கிவிட்டு மாலை நான்கு மணிக்கு விழிப்பேன். இது காலை, தேநீர் மற்றும் பிற்பகல் உணவுக்கான செலவை குறைப்பதற்காகத்தான்.

ஒரு நாள் வழக்கம் போல் நாலு மணிக்கு எழுந்தேன். அன்றாட கடன்களை முடித்துவிட்டு உணவருந்தச் சென்றேன். நான் கோட் அணிந்திருந்தேன். பையில் ஒரு பேர்ஸ் இருந்தது. அதில் பதினாலு ரூபா என் வாழ்நாளைய சேமிப்பு இருந்தது.

நான் கூட்டம் நிறைந்த ஒரு உணவு விடுதியினுள் நுழைந்தேன். சப்பாத்தியும் இறைச்சியும் கொண்ட முழு உணவு உண்டேன். அதற்கு மேல் தேநீர் அருந்தினேன் பதினோரு அணாவிற்கு பில் வந்தது.

பில் கொடுப்பதற்காக கோட்பையில் கையை விட்டேன். ஒரு கணத்தில் நான் சாப்பிட்ட உணவு ஜீரணித்து, உடல் முழுவதும் வியர்வை பெருக்கெடுக்கத் தொடங்கியது. காரணம் எனது பேர்ஸ் அதில் இல்லை.

நான் கூறினேன், "என்னோட பேர்ஸை யாரோ திருடிட்டாங்க"

அது ஜனசந்தடி நிறைந்த ஒரு உணவு விடுதி. சுற்றியிருந்தவர்கள் அதிர்ந்து போகும்படி விடுதி முதலாளி ஒரு பலத்த சிரிப்பு சிரித்தான். அவன் எனது கோட்டைப் பற்றி இழுத்து, "இந்த வேலயெல்லாம் இங்க நடக்காது. காசை வச்சிட்டுப் போ. இல்ல உன் கண்ண நோண்டிருவேன்"

என்னைச் சுற்றியிருந்த ஆட்களைப் பார்த்தேன். ஒரு கனிவான முகம் கூட தென்படவில்லை. அனைத்தும் பசித்த ஓநாய்களின் பார்வையைக் கொண்டிருந்தன.

அவன் என் கண்களைத் தோண்டி விடுவேன் என்று சொன்னதைப் போலவே செய்து விடுவான்.

"என்னோட கோட் இங்க இருக்கட்டும் நான் போய் பணம் கொண்டு வந்துர்றேன்"

அந்த விடுதி முதலாளி மீண்டும் சிரித்தான். அவன் என்னுடைய கோட்டை கழட்டும்படி கூறினான்

நான் என்னுடைய கோட்டை கழட்டினேன் அவன் என்னுடைய சட்டையை கழட்டும்படி கூறினான்.

நான் என்னுடைய சட்டையைக் கழட்டினேன்.

அவன் என்னுடைய பூட்ஸை கழட்டும்படி கூறினான்.

நான் என்னுடைய பூட்ஸை கழட்டினேன். இறுதியில் அவன் என் கால்சராயை கழட்டும்படி கூறினான்.

என்னை நிர்வாணப்படுத்தி, என் கண்களைத் தோண்டி அம்மணமாக வெளியே அனுப்பத் தீர்மானித்து விட்டான் போலும். நான் சொன்னேன், "உள்ள ஒண்ணும் போடலையே"

எல்லோரும் சிரித்தார்கள்.

விடுதி முதலாளி கூறினான், எனக்கு சந்தேகமா இருக்கு நீ உள்ள ஏதாவது போட்டிருப்பே.

சுமார் ஐம்பது ஆட்கள் கூறினார்கள், உள்ள ஏதாவது போட்டிருக்கனும்.

எனது கரங்கள் நகர மறுத்தன. ஒரு கூட்டத்தின் நடுவே நிர்வாணமான கண்கள் இல்லாத மனிதனொருவன் நின்றிருப்பதை கற்பனை செய்து பார்த்தேன். வாழ்க்கை இவ்வாறு முடியப் போகிறது. அது முடியட்டும். இது எல்லாவற்றிற்கும் நான் பரவாயில்லை கடவுளே எனக்கு சொல்வதற்கு எதுவுமில்லை. எல்லாமே திருப்தியடைவது போல் முடியும்.

நான் கழட்ட ஆரம்பித்தேன், ஒன்றன் பின் ஒன்றாக,என் கால் சராயின் பொத்தான்களை. அப்பொழுது ஒரு குரல் கேட்டது 'நிறுத்து. அந்தப் பணத்த நான் தர்றேன்'.

குரல் வந்த திசையில் எல்லோரும் திரும்பினார்கள். வெள்ளை கால்சராயும், சிவப்பு தலைப்பாகையும் அணிந்த ஆறடி உயரமான அழகிய தோற்றமுடைய மனிதன் வளைந்த மீசை, நீல விழிகள் கொண்டிருந்தான்.

அப்பகுதியில் நீலநிற விழிகள் சாதாரணமானது. அவன் முன்னே வந்து விடுதி முதலாளியைக் கேட்டான், "எவ்வளவுன்னு சென்னே?"

"பதினோரு அணா"

அவன் பணத்தைக் கொடுத்தான். என்னிடம் திரும்பி கூறினான், 'உன் துணியெல்லாம் மாட்டிக்கோ'

நான் அவற்றை எடுத்து உடுத்திக் கொண்டேன்.

'வா' என்றான். நான் அவனுடன்

www.tamilarangam.net



சென்றேன். என் நன்றியை தெரிவிக்க என்னிடம் வார்த்தைகள் இருக்கிறதா? நான் சொன்னேன், 'நீங்க பெரிய உதவி பண்ணியிருக்கீங்க. உங்கள மாதிரி அற்புதமான மனிசன பாத்ததே இல்ல'

அவன் சிரித்தான்.

'உன் பேர் என்ன' என்று கேட்டான்.

நான் என் பெயரையும் நான் இருக்கும் இடத்தையும் சொன்னேன்.

நான் அவனுடைய பெயரைக் கேட்டேன்.

'எனக்குப் பேரில்ல' என்றான்.

'அப்ப "கருணை", அதுதான் உங்க பேரா இருக்கணும்'

அவன் சிரிக்கவில்லை. மேலும் நடந்தான்.

நாங்கள் ஒரு ஆள் நடமாட்டமற்ற ஒரு பாலத்தை அடைந்தோம்.

அவன் சுற்றும் முற்றும் பார்த்தான். அங்கு யாரும் இல்லை. 'இங்க பார் நீ இங்க இருந்து போகையில திரும்பிப் பாக்காம போகணும். யாராவது என்னைய பாத்தியான்னு கேட்டா, இல்லேன்னு சொல்லணும்!

நான் புரிந்து கொண்டேன்

அவன் தன் வெவ் வேறு பாக்கெட்டுகளிலிருந்து நான்கைந்து பேர்ஸ்களை எடுத்தான். அதில் ஒன்று என்னுடையது.

'உன்னோடது எது?'

நான் என்னுடைய பர்ஸைச் சுட்டிக் காட்டினேன்.

'அதத் திறந்து பார்'

அதைத் திறந்தேன். அதில் என்னுடைய பணம் பத்திரமாக இருந்தது. நான் அதை என்னுடைய பையில் வைத்துக் கொண்டேன்.

அவன் சொன்னான், 'போ கடவுள் உன்னைக் காப்பாத்துவார்'

நானும் திரும்பிக் கூறினேன், 'உங்களையும் கடவுள் காப்பாத்துவார்.'

**வைக்கம் முகம்மது பஷீர்**
*ஆங்கிலம் வழி தமிழில்*
**ரவி இளங்கோவன்** □



## தமிழ், முஸ்லீம் பேச்சுவார்த்தைகள்

# இணக்கம் காணுமா?

தமிழ் அரசில் கட்சிகள் இரண்டாவது தடவையாக முஸ்லிம் கட்சியான சிறீலங்கா முஸ்லீம் காங்கிரசுடன் பேச்சுவார்த்தை நடாத்தி வருகின்றன. முன்னர் சர்வகட்சி மகாநாட்டின் போதும் இவர்களுக்கிடையில் பேச்சு வார்த்தை நடந்து, இரண்டு இனவாரியான கவுன்சில் (Ethinic Council) அமைக்கும் யோசனை வெளியிட்டார்கள். ஆனால் இறுதியில் அது வெற்றி பெறவில்லை.

இனப்பிரச்சனையை தீர்க்க பாராளுமன்றத் தெரிவுக்குழு ஒன்று அமைத்து செயற்பட்டு வரும் இத்தருணத்தில் மீண்டும் தமிழ்கட்சிகளும் சிறீலங்கா முஸ்லீம் காங்கிரசும் (எஸ். எல். எம். சி) பேச்சு வார்த்தை நடாத்தி வருகின்றனர்.

தமிழ்கட்சிகள் அனைத்தும் வடகிழக்கு இணைந்த மாகாணசபையொன்றே தமிழ் மக்களின் பிரச்சனைகளுக்கு குறைந்த பட்ச தீர்வாக இருக்க முடியும் என்று உறுதியாக கூறிவருகின்றன. இதனடிப்படையில் தமது கோரிக்கையை வென்றெடுக்க எஸ். எல். எம். சியையும் தம்முடன் இணைத்துக் கொள்வதே இவர்களது நோக்கமாக உள்ளது. ஏற்கனவே தமிழ் கட்சிகள் 4அம்சக் கோரிக்கையின் அடிப்படையில் ஈ. பி. ஆர். எல். எவ் (?) ... சி. ஐயும் தம்முடன் இணைத்துக் கொண்டுள்ளன. இதனடிப்படையில் எஸ். எல். எம். சியை இணைத்துக் கொண்டால் தமது கோரிக்கைகளை இன்னும் உறுதியாக வலியுறுத்த முடியும் என்றுஎதிர்பார்க்கின்றார்கள்.

எஸ். எல். எம். சி மாத்திரமே நிபந்தனையுடன் வடகிழக்கு இணைப்பை ஆதரிக்கின்றது. ஏனைய சகல முஸ்லீம் கட்சிகளும், முஸ்லீம் அமைச்சர்களும் வடக்கு கிழக்கு இணைப்பை எதிர்ப்பதுடன், கிழக்கு மாகாணத்துக்கு தனிக்கவுன்சில் வேண்டுமென்று கோரிவருகின்றார்கள். இந்நிலையில் குறைந்தபட்சம் நிபந்தனையுடன் வட கிழக்கு இணைப்பை ஏற்றுக் கொண்டுள்ள எஸ். எல். எம். சியுடன் பேசுவதைத் தவிர தமிழ் கட்சிகள் வேறு வழியில்லாத நிலையில் உள்ளன. வட கிழக்கை பொறுத்த வரை எஸ். எல். எம். சி மாத்திரமே முஸ்லீம் மக்களை பிரதிநிதித்துவப் படுத்தும் அமைப்பாயுள்ளதும் இப் பேச்சுவார்த்தை நடக்கக் காரணமாகும்.

மறுபுறத்தில், முஸ்லீம் மக்களுக்கு தனிமாகாணசபை பெற்றுத் தருவதாக வாக்குறுதி அளித்த எஸ். எல். எம். சிக்கும் தமிழ்கட்சிகளை கைவிட்டு தனது கோரிக்கையை வெல்ல முடியாதென்பது தெரியும். அதேவேளை முஸ்லீம் மக்களை திருப்திப் படுத்தும் ஏதாவது விடயங்களை சாதிக்காவிட்டால் தனது அரசியல் எதிர்காலமும் கேள்விக்குறியாகி விடுமென்று அதன் தலைவர் அஷ்ரப் நம்புகின்றார். இதனால் அவரும் தமிழ் கட்சிகளுடன் பேச வேண்டிய சூழ்நிலைக்குத் தள்ளப் பட்டுள்ளார்.

அதேசமயம் தமிழ் கட்சிகள் - எல். எம். எம். சி க்கிடையிலான பேச்சு வார்த்தையும் ஓர் தொடர்கதையாகவே இருந்து வருகின்றது. இரண்டு பகுதியினரும் நெருங்கி வருவதற்குப் பதிலாக முரண்பாடுகள் அதிகரிப்பதாகவே தோன்றுகின்றது. பல சுற்றுக்கள் பேச்சு வார்த்தை நடாத்தியும், அடிப்படைவிடயங்களிலேயே இவர்கள் இன்னும் தீர்வுக்கு வரவில்லை.

முக்கியமாக முஸ்லீம் மக்களுக்கான தீர்வாக தமிழ் கட்சிகள் வட கிழக்கு மாகாணசபைக்குள் அம்பாறை மாவட்டத்தை ஓர் சுயாட்சி அலகு ஆக அங்கீகரித்து அதற்கு அதிகளவு அதிகாரங்கள் கொடுக்க சம்மதித்தார்கள். வட கிழக்கில் இருக்கும் ஏனைய முஸ்லீம் பிரதேச சபைகள் வட கிழக்கு மாகாண சபைக்குள் வருமென்றும், அவர்களுடைய பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையில் சட்ட பூர்வமான ஏற்பாடுகளைச் செய்ய முடியும் என்றும் தமிழ் கட்சிகள் வலியுறுத்தின. பாதுகாப்பை பொறுத்தவரை சுயாட்சி அலகிற்குள் சட்டம் ஒழுங்கை அவர்களே கவனித்துக் கொள்வார்களென்றும், மாகாணசபைக்குள் வரும் முஸ்லீம் பிரதேச சபைகளை பொறுத்தவரை.

1. அங்கு பெரும்பான்மையான



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

பொலிசார் முஸ்லீம் பொலிசாராக இருப்பரென்றும்.

2. முஸ்லீம் பெரும்பான்மை இடங்களில் சட்டமொழுங்கிற்கு பொறுப்பாக முஸ்லீம் ஒருவர் இருப்பாரென்றும்.

3. மாகாணசபையில் ஓர் பாதுகாப்புச் சபை இருக்குமென்றும் இதில் முதலமைச்சர், சுயாட்சிக் கவுன்சில் தலைவர், முஸ்லீம், தமிழ் டி. ஐ. ஜி போன்றோர் இருப்பார்களென்றும் கலவரங்கள் போன்றவை தோன்றுமிடத்து இவர்களே கூட்டு முடிவுகளை எடுப்பர்களென்றும், இவை போதாவிடில்.

4. சட்டம் ஒழுங்கிற்கு பொறுப்பாக மாகாணசபையில் ஓர் முஸ்லீம் அமைச்சரை நியமிக்கலாம் என்றும் தமிழ் கட்சிகள் கூறின. ஆரம்பத்தில் எஸ். எல். எம். சி இதனை ஏற்பதாகக் கூறியதாகவும், ஆனால் இறுதியில் அம்பாறை மாவட்டத்தில் அம்பாறை தேர்தல் தொகுதி தவிர்ந்த பொத்துவில் சம்மாந்துறை, கல்முனை இணைந்த நிலப்பரப்பை அடித்தளமாக கொண்டு வடகிழக்கில் உள்ள சகல முஸ்லீம் பெரும்பான்மை பிரதேசசபைகளும் இதனுடன் இணைக்கப்பட வேண்டும் என எஸ். எல். எம். சி கோரி வருகின்றது. உதாரணத்திற்கு எருக்கலம் பிட்டி, கிண்ணியா, மூதூர், காத்தான் குடி போன்றபகுதிகள்.

ஏற்கனவே தமிழ் கட்சிகள் 4அம்சக் கோரிக்கையின் அடிப்படையில் சி. டபிள்யு. சி. ஐயும் தம்முடன் இணைத்துக் கொண்டுள்ளன. இதனடிப்படையில் எஸ். எல். எம். சியை இணைத்துக் கொண்டால் தமது கோரிக்கைகளை இன்னும் உறுதியாக வலியுறுத்த முடியும் என்றுஎதிர் பார்க்கின்றார்கள்.



அதேவேளை முஸ்லீம் மக்களை திருப்திப் படுத்தும் ஏதாவது விடயங்களை சாதிக்காவிடில் தனது அரசியல் எதிர்காலமும் கேள்விக்குறியாகி விடுமென்று அதன் தலைவர் அஷ்ரப் நம்புகின்றார். இதனால் அவரும் தமிழ் கட்சிகளுடன் பேச வேண்டிய சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார்.

ஆனால் இது நடைமுறைச் சாத்தியமில்லாத ஓர் கோரிக்கை என தமிழ் கட்சிகள் கூறி வருகின்றன. நிலத்தொடர்ச்சி இல்லாத பல் வேறுபட்ட சிறு சிறு பிரதேச சபைகளைஒன்றிணைத்து நிர்வாகத்தை நடாத்துவது சாத்தியமில்லையென தமிழ் கட்சிகள் கூறுகின்றன. கிழக்கைப் பொறுத்தவரை ஒன்று விட்ட ஒரு கிராமம் மாகாணசபையின் நிர்வாகத்துக்குள்ளும் முஸ்லீம் கவுன்சிலின் நிர்வாகத்துக்குள்ளும் வரவேண்டி ஏற்படும். இது இரு கவுன்சிலுக்குமே நிர்வாகச் சிக்கலை ஏற்படுத்தும் என்பதுடன் இப்படிப் பிரிப்பது, தமிழ், முஸ்லீம் மக்களை நிரந்தரமாகவே பிரிப்பதற்கே வழிவகுக்கும் என்று கூறுகின்றார்கள்.

மொத்தத்தில் பிரச்சனையின் மையப்புள்ளியாக உள்ள அம்பாறை தேர்தல் தொகுதி தவிர்ந்த அம்பாறை மாவட்டமா அல்லது எஸ். எல். எம். சி சொல்வதைப் போல் ஏனைய முஸ்லீம் பிரதேச சபைகளையும் உள்ளடக்கியதா, இந்த அலகு என்பதற்கு தீர்வு ஏற்பட்டால், ஏனைய பிரச்சனைகளுக்கு சுலபமாக தீர்வுகண்டுவிடலாம் என இரு தரப்பாரும் கூறுகின்றார்கள்.

மொத்தத்தில் பிரச்சனையின் மையப்புள்ளியாக உள்ள அம்பாறை தேர்தல் தொகுதி தவிர்ந்த அம்பாறை மாவட்டமா அல்லது எஸ். எல். எம். சி சொல்வதைப் போல் ஏனைய முஸ்லீம் பிரதேச சபைகளையும் உள்ளடக்கியதா, இந்த அலகு என்பதற்கு தீர்வு ஏற்பட்டால், ஏனைய பிரச்சனைகளுக்கு சுலபமாக தீர்வுகண்டு விடலாம் என இரு தரப்பாரும் கூறுகின்றார்கள்.

எஸ். எல். எம். சியைப் பொறுத்த வரை, ஏனைய சகல முஸ்லீம் அமைப்புகளும் எஸ். எல். எம். சியை நிராகரிக்கின்றன. எல். எம். எம். சியை முஸ்லீம் மக்களின் பிரதிநிதிகளாக ஏற்றுக்கொள்ள இம்முஸ்லீம் அமைப்புக்கள் தயாராக இல்லை. எஸ். எல். எம். சியின் வளர்ச்சி தம்மை பாதிக்கும் என இவர்கள் அஞ்சுகின்றார்கள். எனவே இதனை முளையிலேயே கிள்ளிவிட அவர்கள் முயற்சித்து வருகின்றார்கள். அஷ்ரப்பை பொறுத்தவரை சகல முஸ்லீம் மக்களுக்காகவே தாம் போராடி வருவதாக காட்ட முயற்சிக்கின்றார். இதனால் நடைமுறைச் சாத்தியமற்ற, யதார்த்தத்துக்கொவ்வாத கோரிக்கைகளை எஸ். எல். எம்.சி வைப்பதாக தமிழ் கட்சிகள் குற்றம் சாட்டுகின்றன. அத்துடன் முஸ்லீம் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளார்கள் என்பதை ஏற்றுக் கொள்வதுடன், நடைமுறைச் சாத்தியமான எந்தக் கோரிக்கையையும் தாம் ஏற்றுக் கொள்ளத் தயார் எனவும் தமிழ் கட்சிகள் கூறுகின்றன.

அடுத்து வரும் தமிழ், முஸ்லீம், கட்சிகளின் கூட்டங்கள், தீர்வுகளை எட்டு வதற்கான முக்கியமான கூட்டங்களாக அமையலாம். தமிழ் முஸ்லீம் கட்சிகள் சில சமயங்களில் ஓர் தீர்வுக்கு வந்தாலும், அதனை பாராளுமன்றத் தெரிவுக்குழுவோ அல்லது ஜனாதிபதியோ, அல்லது யூ. என்பி, எஸ் எல் எஃப்பி கட்சிகளோ ஏற்றுக் கொள்ளுமா என்பதும் இன்னும், கேள்விக் குறியாகவும் சந்தேகமாகவுமே உள்ளது. அதேவேளை முஸ்லிம் தமிழ் ஒற்றுமையை நிலைநாட்டுவதென்பது வடக்கு கிழக்கு மாகாணத்தில் இன்று ஒரு தலையாய அரசியற் பணியாகவுள்ளது.

www.tamilarangam.net






'ஆப்கானிஸ்தானின் எதிர்காலம்' கட்டுரையில் ....... 'சுனி' முஸ்லிம்கள் Sunni - சுன்னி - இது அரபுப் பதம் இவ்வாறு 'சுன்னி' என்றழைக்கப்படும் பிரிவை அஹ்லுஸ்ஸுன்னா "வல் - ஜமா அத்" என்ற முழுப்பதம் கொண்டழைப்பர். அதாவது, இவர்கள் முஹம்மத் நபியையும் அவருக்குப் பின் வந்த இஸ்லாமிய சமூகத்தலைவர்களையும் (Caliphs) மற்றும் ஏனைய நபித் தோழர்களையும் மதித்துப் பின்பற்றுபவர்கள்.

சீயட் முஸ்லிம்கள் ('ஷீஆ') என்போர் முஹம்மத் நபியை ஏற்பதோடு அவருக்குப் பின் வந்த முதல் மூன்று இஸ்லாமிய ராஜ்யத் தலைவர்களை மறுத்து நான்காவதவ ரான அலியை மிகை விசுவாசம் கொண்டு அவரைத் தலைவராகவும், அவரது சந்ததியினரை மாத்திரமே தலைவராகவும் கொள்ளக் கூடிய வர்களாகும்.

இவ்வாறான வேறுபாட்டைப் பின்னணியாகக் கொண்டவர்களை வெறுமனே அந்தச் சொற்களின் மூலம் குறிப்பிட்டு இதுபற்றித் தெரியாத வாசகர்களுக்கு ஓர் அதிருப்தி நிலையை இந்தக் கட்டுரை ஏற்படுத்துகிறது. வெறுமனே பிரிவுகள் என்றும், முரண்பாடுகள் என்றும் (எவ்வாறான முரண்பாடுகள் , எதற்கான பிரிவுகள் என்பதை சிலவேளை கட்டுரையாசிரியர் கூட அறியாதிருக்கலாம். இஸ்லாத்துடன் எப்போதும் முரண்பட்டுக் கொண்டிருக்கிற மேற்கத்தேயே செய்தி ஸ்தாபனங்களின் தகவல்களைப் பெற்று-இன்னுமொரு மேலோட்டமான தகவலாகவே இக் கட்டுரையை ஆசிரியர் எழுதியிருந்தால் பிரிவுகள், கொள்கை வேறுபாடுகள் பற்றி அறிந்து சரியான தகவல்களை எழுதுவது தேவையற்ற ஒன்றாயிருக்கலாம்.) எழுதுவது ஆசிரியரது மேலோட்டமான பார்வையையும், வாசகர்களது ஏளனப் பார்வையையும் இனங்காட்டும்.

ஆப்கானிஸ்தான் என்பது வெறுமனே ஒரு நாடாக, அரசாக,பார்க்கப்படுவதுடன் மதரீதியாகவும் நோக்கப்படுவது அவசியம். தற்போது அது சம்பந்தமாகவே கொந்தளிப்பு நிகழ்கின்றதென்பது அறியப்பட வேண்டும்.

மேலும் அந்தக் கட்டுரையில் 'தோஸ்தும்' போராளிக்குழுக்களில் ஒரு தலைவராக இனங்காணப்பட்டிருக்கிறார். ஆனால் உண்மையில் அவர் முன்னைய நஜீபின் சகாவும் 'மிலிஷியா' என்ற படைப்பிரிவொன்றின் தலைவருமாவார் என்பதே உண்மையான வெளிப்படுத்தப்பட்ட தகவலாகும்.

இனக்குழுவை வைத்து அரசியல் தலைமை பற்றியுள்ள கண்ணோட்டம் குறுகியதாகவே உள்ளது. இஸ்லாம் என்ற கொள்கையின் முன்னால் அது எள்ளளவும் எடுபடாது. அந்தக் கொள்கைக்காய் 12, 13 வருடங்கள் ஒன்றிணைந்து போராடியவர்கள், இனக்குழுவை வைத்து பாரிய பிளவடைவார்கள் என்று கூற முடியாது. அப்படியே ஏற்பட்டால் அது அந்நிய சக்திகளின் சதி முயற்சியாகத்தான் இருக்குமென்பதில் சந்தேகமில்லை.

"தற்போதுள்ள அச்சம் என்னவென்றால் யுத்தங்களின் முடிவில் அது ஒரு அடிப்படைவாத நாடாக மாறிவிடலாம்"

அடிப்படை வாதிகளை - மதக்கோட்பாடுகளை தீவிரமாகக் கடைப்பிடிக்க வற்புறுத்துபவர்கள் - என்று எழுதத் தெரிந்தவருக்கு, அந்த மதம்பற்றி பூரண அறிவுத் தெளிவிருந்தால் 'தற்போதுள்ள அச்சம்' வர நியாயமே இல்லை.

'அடிப்படைவாதம்' சம்பந்தமாக 'இஸ்லாமிய சிந்தனை' எனும் இதழின் ஆசிரிய தலையங்கத்தில் கலாநிதி M.A.M சுக்ரி எழுதுகிறார் (பார்க்க - இஸ்லாமிய சிந்தனை ஜன - மார்ச் 1992)

அதில் " முஸ்லிம்கள் மேற்குலகின் கலாசார அடிமைத்தனத்திலிருந்து விடுதலை பெற்றுத் தங்களது மண்ணில் காலூன்றி வாழமுற்படும் முயற்சியே 'அடிப்படைவாதம்' என அறிமுகப் படுத்தப்படுகின்றது. தங்களது நூற்றாண்டு கால பாரம்பரியத்தினை நோக்கி- தங்களது இஸ்லாமிய ஆளுமையை உருவாக்கிய குர்ஆனையும், ஸுன்னாவையும்(இறைத்தூதர்முஹம்மத் நபியினது வாழ்க்கைப் போதனைகள்) நோக்கி மீள்வதற்காக மேற்கொள்ளப் படும் முயற்சியே 'பிற்போக்குவாதம்' என வர்ணிக்கப்படுகின்றது"

ஆக 'அடிப்படைவாதம்' 'அடிப்படைவாதிகள்' என்ற பதங்கள் இஸ்லாத்திற்கெதிரான அன்னிய சக்திகளின் குழப்பச் சொற்கள் என்பதில் பொதுத் தெளிவு வேண்டும்.

-எம். கே. எம். ஷகீப்-

மேற்கண்ட நீண்ட கடிதத்தை சுருக்கி தருகிறோம். இக் கடிதத்தின் மையம் முஸ்லீம் அடிப்படைவாதம் கொச்சைப்படுத்தப்படுவது பற்றியதே. ஆரோக்கியமான சம்பாஷணையாக இதை அமைக்கும்படி இக் கடிதத்துக்குரியவர் கேட்டுள்ளார். கருத்துக்கள் வரவேற்கப் படுகின்றன.

யாழ்ப்பாணத்திலிருந்து த. தேவராஜா நீங்கள் என்ன கட்சியெனக் கேட்டிருந்தார். எல்லாவற்றையும் கட்சிக் கண்களுடனோ இயக்கக் கண்களுடனோ பார்த்துப் பழகிவிட்டவர்களுக்கு வாய்ப்பாடான உள் மனதிலெழும் கேள்வியொன்றை அவர் வெளிப்படையாகக் கேட்டுள்ளார். எம் முதலாவது சஞ்சிகையில் அரசியலில் நடுநிலை வகிப்பதன் சிரமங்களைச் சுட்டிக் காட்டியிருந்தோம். நாம் சரிகளின் ஆதரவாளர்கள் பிழைகளின் எதிராளிகள். எல்லாக் கருத்தும் வெளிப்படவேண்டுமென்று விரும்புபவர்கள். பத்திரிகை தர்மத்தைக் கடைப்பிடித்து நிற்பவர்கள், நாம் ஒருமுறை திரு. தொண்டமானின் பேட்டியை வெளியிட்டோம். அதனால் நாம் சி. டபிள்யூ சியுமல்ல. இன்னொருமுறை திரு. அஷ்ரஃப்பின் பேட்டியை வெளியிட்டோம். அதனால் நாம் எஸ். எல். எம். சியுமல்ல. ஒருமுறை எல். ரீ. ரீ. யுடன் அரசு பேச வேண்டும் என்று வலியுறுத்தினோம். அதற்காக புலிகளின் ஆதரவாளர்களுமல்ல. ஏன் இம்முறை திரு சுரேஷ் பிரேமச்சந்திரனின் பேட்டியை போடுவதால் ஈ. பி. ஆர் எல்எவ் ஆதரவாளருமல்ல. அதேவேளை வேறொருதடவை ஐ. பி. கே. எவ் காலத்து நடவடிக்கைகளை விமர்சித்தமையால் அவர்களின் எதிராளிகளுமல்ல. எதிர்காலத்தில் இன்னும் பல கட்சிகளதும் பிரமுகர்களதும் பேட்டிகளையும் கருத்துக்களையும் வெளியிடுவோம். அதனால் நாம் அவரவர் ஆதரவாளர்களாக அவ்வப்போது மாறிவிடுவதாகிவிடுமா? கட்சி வர்ணம் பூசிய கண்ணாடிகளுக்கூடாகப் பார்க்காமல் சொல்லப்பட்டவை சரியாவென ஆராய்கின்ற மனபக்குவம்தான் நடுநிலைப் பார்வையைத் தரும். என்ன கட்சியென்று கேட்டீர்களல்லவா? உண்மையின் கட்சி என்று வைத்துக் கொள்ளுங்கள். அது நாட்டில் இல்லையா, அப்போ நாம் இல்லாத கட்சி. ■





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# படம் : தளபதி.



டைரக்ஷன்: மணிரத்தினம்
பிரபல நடிகர்கள்: ரஜனிகாந், மம்முட்டி.
படத்துக்கான தயாரிப்புச் செலவு கிட்டத் தட்ட இரண்டரைக்கோடி இந்திய ரூபாய்கள். படம் வென்றதா?

மணிரத்தினம் தரமான டைரக்டர் என்ற மதிப்பீட்டில், அவரின் படைப்புக்கு ரசிகன் ஒரு தரத்தை எதிர்பார்ப்பது நியாயம். வெற்றியை வசூலைக் கொண்டும் ஓடிய நாட்களைக் கொண்டும் யாரும் கணிப்பிடலாம். ஆனால் அதன் தரம்...? அதுதான் கேள்வி.

மகாபாரதத்துக் கர்ணனின் கதையம்சத்தைக் கையாண்டு தளபதியைப் படைத்தார் மணிரத்தினம். ஆனால் மகாபாரதம் ஒரு காவியம். அதன் ஒவ்வொரு பாத்திரமும் நுட்பத்துடன் ஆழமான வடிவமைப்பைக் கொண்டவை அவற்றின் குணாதிசயங்களும் நடத்தைகளும் தர்க்கரீதியான காரண காரியங்களால் விளக்கப் பெற்றவை. இந்தப் பாத்திர வார்ப்புகளின் இறுக்கம் பாரதத்திலிருந்து தளபதிக்கு வரும்போது வெகுவாகத் தளர்வுண்டு போய்விட்டது.

தளபதி படத்தின் ஆதாரகருதியாக அமைக்கப்பட்ட விடயம் – நட்பு. பாரதத்தில் துரியோதனன் மீதான கர்ணனின் நட்புக்கு உளவியல் ரீதியாக நியாயப்படுத்தப்பட்ட வலுவான காரணங்கள் இருந்தன. தேரோட்டி மகனென இகழப்பட்டு, திறமைகள் புறக்கணிக்கப்பட்ட கர்ணனுக்கு மகுடம் சூட்டி ராஜ்ஜியம் அளித்து அரசவம்சத்தவர்க்குச் சமமாக இருத்திவைத்தவன் துரியோதனன் என்ற நன்றியுணர்வின் வலுவான அடிப்படை அந்த நட்புக்கு இருந்தது.

இங்கோ, தளபதியில் பசப்புத் தனமாக காரணங்களால் இந்த நட்பு ஒட்டப் படுகிறது. சூரியாவுக்கு (ரஜனி) தேவராஜ் மீது (மம்முட்டி) உயிரையும் கொடுக்கும் நட்பு ஏற்படுவதற்கு என்ன அத்தனை வலுவான காரணமிருக்கிறது? கதையில் இனி நட்பு புகுத்தப்படவேண்டும் என்ற கட்டம் வந்துவிட்டதால் அதை உருவாக்குவதற்காக சப்பைக் காரணம் கொண்டு கட்டிய கதை இது. தான் கொலையாளியாகி பொலீசில் அகப்பட மூல காரணமான ஒருத்தன் பின்னால் மனம்மாறி தன்னை விடுவிக்க உதவினான் என்றால் அவனுக்காக உயிரையும் தருவேனென்று எவனாவது சொல்வானா?

தர்க்க நியாயங்கள் சரியான வகையில் பொருத்தப்படாத இன்னொரு விடயம் சூரியாவின் தாயின் கதை. பாரதத்தில் குந்திதேவி திருமணத்தின் முன்னர் கர்ணனைக் கருவுற்றது எப்படி யென்பதற்கு ஒரு கதை கொடுக்கப்பட்டிருந்தது. முனிவர் கொடுத்த மந்திரத்தை திருமணத்தின் முன்னரே உச்சரித்த விளைவால் சூரிய தேவனின் அனுக்கிரகத்துடன் கர்ணனைப் பெற்றாள் என்பதுதான் அது. இதன் நம்பகத் தன்மை எவ்வாறானாலும் பாரதம் பல்வேறு தெய்வீக விளக்கங்களால் உருவாக்கப்பட்ட காவியமென்பதால் அவற்றை எடுகோல்களாகக் கொண்டு கேள்விக்குட்படுத்தாமல் யாவரும் இயல்பாகவே ரசிப்பர். ஆனால் இதையே தற்கால நடைமுறையில் ஒரு கதையாக்கப் போனால் இதற்கான கேள்விகள் சரமாரியாக விழும். இதை மணிரத்தினம் மறந்துவிட்டார். பேச்சு மூச்சில்லாமல் அத்தனை பாத்திரங்களும் இங்கே சொல்லிவைத்தாற் போல் இந்த விடயத்தை எந்த விசனமுமின்றி ஏற்றுக் கொள்கிறது. இது எப்படா எங்கள் சமுதாயத்தில் இப்படி யொரு முன்னேற்றம் வந்ததென்று நாமோ மூக்கில் விரலை வைக்கிறோம். தாய் திருமணத்திற்கு முன் தனக்குப் பிறந்த குழந்தையென்று சூரியாவைப் பகிரங்கமாக ஏற்றுக் கொள்ள, கணவனும், மகனும், சமுதாயத்தின் எல்லோருமே மகிழ்ச்சியோடு அதை உள்வாங்கிக் கொள்கிறார்களென்றால் அப்படியொரு கற்பனையை யதார்த்தமென்று படைத்ததன் மூலம் மணிரத்தினம் இன்றைய இந்திய மண்ணிலிருந்து இரண்டு, மூன்று தலைமுறைகளாவது உயரத்தில் நிற்கிறார்.

தாயால் தூக்கி வீசப்பட்டவன் என்ற மனத்தாக்கத்தோடு கூடிய சூரியாவின் (ரஜினி) மூர்க்கத்தை வடிவமைத்தது போல தேவராஜ் (மம்முட்டி) பாத்திரத்தை வடிவமைப்பதில் அக்கறை செலுத்தவில்லை. பாத்திரத்தை ஒழுங்காக வடிவமைக்காமல் சில சில கட்டங்களில் உணர்ச்சி வசப்பட்ட வசனங்களை அவரைக் கொண்டு பேசுவிக்கும் போது அது ஒவ்வாமற் போய் மிகை நடிப்பாகத் (ஓவர் ஆக்டிங்காக) தோன்றுகிறது.

இது நிற்க மணிரத்தினம் தனது பழைய, நாயகன் படத்திலிருந்து பலவற்றை இங்கே எடுத்தாண்டிருப்பதாகத் தெரிகிறது. அதனால் ஒரே விடயத்தைத் திரும்பத் திரும்பப் பார்ப்பது போல் (றிப்பிடேஷன்) இருக்கிறது. வசனங்கள் கூட அதே பாணியானதாக இருக்கிறது. வித்தியாசம் என்னவென்றால் அங்கே நாயகன் படத்திற்காக ஒரு கமலஹாசனை நடிக்க வைத்திருக்கிறார். இங்கே ரஜனிகாந்துக்காக ஒரு தளபதிப் படத்தை எடுத்திருக்கிறார். அதனால் நாயகன் மணிரத்தினத்தினுடைய படம். தளபதி ரஜனிகாந்தினுடைய படம். இரண்டிலும் சொல்லப்படும் பொதுவான தத்துவம் ஒன்றுதான். சாதாரண மக்களுக்கு சமூக அமைப்பு நீதி வளங்காத பட்சத்தில் வன்முறைகள் நியாயாதிக்கம் பெறும்! உண்மைதான். ஆனால் இது சர்ச்சைக்குரிய விடயம். □



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அந்தி மழை பொழிகிறது!
ஒவ்வொரு துளியிலும்
உன் முகம் தெரிகிறது!

இது வைரமுத்துவின் பிரபல்யமான பாடல் அடி. இதைப் படிக்கின்ற போது எவ்வளவு அழகான கற்பனை, ஒவ்வொரு துளியிலுமல்லவா கவிஞன் தன் காதலியை காணுகிறான் என்று வியக்கிறோமல்லவா? ஆனால் மேலோட்டமாக இதைப் படித்துவிட்டு போகும் வரைதான் இந்த வியப்பு. சற்று ஆழமாகப் பார்த்தால்.....?

மழையில் முகம் தெரியும் பளிங்குத்தோற்றத்தை மத்தியான வேளையில் தூறிக்கும் தூறல் மழையில் நாம் அனுபவித் திருக்கிறோம். ஆனால் சூரியன் மறையும் அந்தி வேளையியல்ல. அதுதான்போக இங்கே இந்த அந்திமழை தூறிக்க வில்லை. பொழிகிறது. அடித்து ஊற்றுகிறது. கொட்டும் மழையில் எப்படித்தான் துளிகளைப் பிரித்து முகத்தைக் கண்டாரோ? ஆனால் எழுதி இசையமைத்து பாடலாகி விட்டதால் ரசிகன் கருத்தைப் பாராது ரசித்துவிட்டுப் போய்விடவேண்டும். இப்படித்தான் இன்றைய பல கவிதைகள். இங்கு மேலோட்டமான பார்வைக்கு கருத்துடையது போல் தெரிவது ஆழமாகப் பார்க்கையில் கருத்திழந்து போகிறது.

அதேவேளை மேலோட்டமான பார்வைக்கு கருத்தில்லாதது போல் தெரிகின்ற; ஆழமான பார்வையில் கருத்தொன்றைத் தருகின்ற அன்றைய கவிதையொன்றை இங்கே பார்க்கலாம்.

**தகரவர்க்கக் கவிதை**

தாதிதூ தோதீது
தத்தைதூ தோதாது
தூதிதூ தொத்தித்த தூதோது
தாதொத்த
துத்தி தத்தாதே
துதித்துத் தேத்தொத்த
தீதோதித் திதி

காளமேகப்புலவர்.

இது என்ன நாட்டியத்திற்குப் போடும் தாளச் சொற்கள் போல இருக்கிறதே எனப் பார்க்கிறீர்களா? உன்னிப்பாக கவனியுங்கள். உண்மையில் இது காதலி காதலனிடம் தூது செல்லும்படி கேட்கின்ற ஒரு கவிதை. இதன் விளக்கத்தைப் பாருங்கள்.

தாதி (தோழி) தூதோ தீது.
- தோழியை தூது அனுப்புவது தீது (அவள் என்காதலனை தன் வசப் படுத்திவிடக் கூடும்)
தத்தை (-கிளி) தூது ஓதாது
- கிளி தூது சொல்லமாட்டாது (காதலன் கூறிய பதிலை கேட்டுவந்து சொல்லாது)
தூதி, (-செவிலித்தாய்) தூது ஒத்து இதத்தூது ஓது
செவிலித்தா யாளவளே! நீ தூதை ஏற்று இதமான தூதாக சென்று ஓது
தாதொத்த (தாது - பொன்)
துத்தி (-தேமல்) தத்தாதே (தொற்றாது)
துதித்து + தேற்றி + ஒத்து + ஈது + ஓதித் + திதி (காப்பாற்று)
(காதலனைக் காணாத ஏக்கத்தினால்) பொன்னை ஒத்த தேமலானது என்னைப் படராத வாறு வேண்டி, என்னைத் தேற்றி இதனை ஏற்று, தூது சென்று என்னைக் காப்பாற்றுவாயாக!

**விளக்கம்:** சில்லையூர் செல்வ ராஜன்.

## உப்பிட்டார்க்குள்ளம்!

வெண்பா

★ சங்கு, முத்து, ஓர்க்கோலையுடன்
சாரபவளம் ஈவதனாற்
பொங்கு கடலே! உன்னைப் போற்றேன் நான்!-
பங்குமுறும்
நாழி உணவாளிகட்கும்
நல்குமிற உப்புக்காய்
வாழி என வாரிதி,
என் வாழ்த்து!

– சில்லையூர் செல்வராசன் –

★ (கடல்படுதிரவியங்கள் ஐந்து - சங்கு, முத்து, ஓர்க்கோலை, பவளம், உப்பு.)

**I SUBMIT MY HEART TO THE SALT - GIVER!**

*Hark, deep Sea!*
*O! Benevolent Mother!*
*Chronicles of yore*
*Proudly declare,*
*Five rare treasures,*
*to man you spare!*
*I care not for your conches,*
*I care not for those shells,*
*Your rich coral stones*
*And your valueless pearls , I scorn!*
*But I submit my humble Heart*
*and venerate you great Goddess,*
*for the pinch of salt you grant*
*for the sparse gruel of the*
*poorest man!*

- SILLAIYOOR SELVARAJAN -

Transcreated by the author
(Courtsey - The Penguin
New writing in Sri Lanka)

உப்பிட்டார்குள்ளம்! எனும் சில்லையூர் செல்வராஜனின் கவிதை பெங்குயின் வெளியீட்டின் New Writing in Sri Lanka எனும் புத்தகத்தில் I submit my heart to the Solt-giver என்ற ஆங்கிலக் கவிதையாக வெளிவந்தது. கடலே! சங்கு, முத்து, ஓர்கோலை, பவளம் போன்ற திரவியங்களை நீ உலக்கு அளித்தாய் என்பதற்காக உனை நான் போற்றேன். ஆனால் அன்றாடம் காச்சிகளான ஏழை மக்களுக்காக உப்பைக் கொடுத்தாயே பார்! அதற்காக நான் உனை வாழ்த்துகிறேன். வாழி!





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## சிவனே!

'சிவனே என்று நாங்கள் இருந்த
காலங்கள் போயினவா?'
இது அப்பாவின் அங்கலாய்ப்பு
'தென்னாடுடைய சிவனே போற்றி'
இது அம்மாவின் ஆராதிப்பு
சிவனே!
இங்கே
உன் நாட்டவர் படும்பாடு அறியாயா?

நேற்றிரவும் உனக்காய் விழிப்பிருந்தோம்
சிவனே!
இந்த ஒரு இரவு மட்டுமா?
நாங்கள் உறங்கி எத்தனை நாள் ஐயா!

மறுபிறப்பில்
பேரின்பம் காணும் பேராசை இன்றில்லை
வினைகளைச் செய்வதற்கும்
யாக்கைகள் வேண்டுமே!
இங்கு
உன்னுடைய புராணமும்
உன் மகனின் கவசமும்
உச்சரிக்காத பொழுதே இல்லை, ஐயா!

அதர்மம் அழிக்கும் உன் அற்புதத் தாண்டவம்
நிகழும் நிகழும் என்று
நீளத் தவங்கிடந்தோம்...
இன்று
நாங்களே ஆடவும் தொடங்கி விட்டோம்!
எங்கள் ஆட்டம் கண்டு
நீயும்
'சிவனே'
என்று இருந்து விட்டாயா?

என். சண்முகலிங்கன் –



## நகர் தனிமை

ஊரில் இல்லாத
கொடிய தனிமையினை
இப்போது நான் உணருகிறேன்.
நண்பர்களுக்காக

அல்லது ஒருவருக்காகவேனும்
அவர்களைக் காணுவேன் என்று
பயணம் செய்தேன்.

மாலை வெய்யிலில் நடந்து திரிந்தேன்

ஒருவரையும் காணாது
அந்த வெய்யிலும் போனபிறகு
தனித்த துயரோடு
இன்றைய ரொட்டியையும்
பிளேன்ரீயையும் விழுங்கினேன்.
காலில் வியர்த்தது.
ரைளசரோடு நடக்க கஸ்ரமாயிருந்தது
கடற்கரை ஒழுங்கைக்குள் தள்ளாடித் தள்ளாடி
அறைக்குப் போனேன்.

நட்சத்திரன்செவ்விந்தியன்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net






## சுவையான செய்திகள்

'ஷோலே' திரைப்படத்தின் கதாநாயகர்களை விட குழந்தைகளின் அபிமானத்துக்குரியவராக விளங்கியவர் - வில்லன் 'கப்பர் சிங்' - அதாவது ஹிந்தி நடிகர் அம்ஜத்கான். 'பிஸ்கற்' விளம்பரமொன்றில் தோன்றியதும் ஒரு காரணமே. 'விக்ரம்' படத்தில் 'ஏஞ்ஜோடி மஞ்சக் குருவி' பாட்டுக் காட்சியில் தோன்றிய மகாராஜாவும் இவரே. இவர் அண்மையில் பம்பாயில் காலமாகிவிட்டார், மாரடைப்பினால்.

"நான் மழைக்குத்தான் பள்ளிக்கூடம் ஒதுங்கினேன். ஒதுங்கியவன் பள்ளிக்கூடத்தைப் பார்க்காமல் மழையையே பார்த்துக் கொண்டிருந்து விட்டேன் என்று கூறும் 'கரிசல் தமிழ்' எழுத்தாளர், 40 வயதிற்குப்பின் எழுதத்தொடங்கி தமிழ் இலக்கியத்திற்கு பெரிய பங்களிப்பை செய்துவருகிறார். புதுவைப் பல்கலைக்கழகம் பேராசிரியராக்கி பெருமை பெற்ற கி. ராஜநாராயணன். இவரது 'கோபல்ல கிராமம்' நாவல் அமெரிக்காவில் குடியேறிய ஐரோப்பியர்கள் தங்கள் புதுவாழ்வை அமைத்துக் கொண்ட வரலாற்றுக்கு ஒப்பான ஒரு சுவையான கிராமத்தின் கதை.




கர்நாடக இசையை, பாமரர்களும் கேட்டு ரசிக்கவேண்டும் என்ற உணர்வில், சிம்மாசனத்தை விட்டு இறங்கி கீழ் மட்டத்தாரையும் ரசனையில் தூக்கிவிடும் பணியில் முயன்றவர், அண்மையில் காலமான மகாராஜபுரம் சந்தானம். இதற்கு சாட்சியாக திரைப்பட இசை அமைப்பாளர் எம். எஸ். விஸ்வநாதனுடன் இவர் இணைந்து வழங்கிய கர்நாடக -மேற்கத்தைய வாத்தியக்கலப்பு இசை நிகழ்ச்சியை குறிப்பிடலாம். இவர் இந்தியாவில் சேவாஸ்டேஜின் 'தேரோட்டி மகனுக்கும்', இலங்கையில் ஏ. ரகுநாதன் மேடையேற்றிய தேரோட்டிமகனுக்கும் இசையமைத்துக் கொடுத்தவர். இறுவில், மருதனாமடத்தில் இசைக்கல்லூரியில் அதிப




ராக சந்தானம் அவர்கள் கடமையாற்றிய பொழுது, பின்னைய சம்பவம் நிகழ்ந்தது.

ரசிகர்கள் இதைத்தான் விரும்புகிறார்கள் என்று மாமூல் திரைப்படத்தயாரிப்பாளர்கள் கூறிக் கொண்டு படங்களை உற்பத்தி செய்து பணம் சம்பாதிப்பதும், அதற்கு ரசிகர்கள் துணைபோவதும், தமிழ், ஹிந்தி சினிமாத்துறைக்கு உரித்தான நிகழ்வுகள். யாரிடம் குறை இருக்கிறது? இதற்கு என்ன செய்யலாம்? சினிமா கோட்பாடு என்ற நூலில் பேலபேலாஸ் என்ற ஹங்கேரிய சினிமாத்துறை ஆய்வாளர் பின்வருமாறு கூறுகிறார். "கலை மற்றும் கலாச்சார வரலாற்றில் நாம் எப்போதும் பார்ப்பது என்னவெனில் இரசனை மற்றும் வளர்ச்சி இரண்டும் இயங்கியல் ரீதியில் ஒன்றுக்கொன்று காரணமாக விளங்குகிறது. மக்களின் ரசனையைக் கலை வளர்க்கிறது. வளர்ந்துவிட்ட மக்களின் ரசனையோ கலையின் வளர்ச்சியைக் கோருகிறது. கோருவதோடு மட்டுமல்லாமல் உயர் அளவிலான கலை வளர்ச்சியை சாத்தியப் படவும் வைக்கிறது"

கே. எஸ். பி

பென்குவின் பதிப்பகம் சர்வதேசப்புகழ் பெற்ற நிறுவனம். அதன் வெளியீடுகளுக்கு தனிமதிப்பு உண்டு. பென்குவினின் ஸ்ரீலங்கா புதிய எழுத்துத்துறை என்ற இதன் வெளியீட்டிலே, தமிழ், சிங்களம், ஆங்கில மொழிகளில் நம்நாட்டு எழுத்தாளர்களின் சிறுகதைகளும், கவிதைகளும் டி. சி. ஆர். ஏ. குணதிலக என்பவரால் தொகுக்கப்பட்டுள்ளது. சில்லையூர் செல்வராஜனின் 'உப்பு' பற்றிய அற்புத கருத்தாழம் மிக்க கவிதையும் பி. தம்பிராஜாவின் 'சிதை' என்ற சிறுகதையும் தனியிடம் பெறுகின்றன.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


# PERFORMANCE PRINT

We Specialize in

- Desktop Publishing
- Computer Typesetting in English, Sinhala & Tamil
- Paper plate Making
- Offset and Letterpress Printing

Fast, Efficient, Friendly Service Assured

***Contact :***

**65, College Street,**
**Kotahena,**
**Colombo 13**
**Tel : 434290**


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


இப்பொழுது கொழும்பில் காண்பிக்கப்படுகிறது

வெகுவிரைவில் ஏனைய மாகாணங்களில்

K. பாலாஜி அளிக்கும்

# திராவிடன்



R. கிருஷ்ணமூர்த்தி

M. S. விஸ்வநாதன்

தயாரிப்பு சுரேஷ் பாலாஜி


Published by "Aruvi Publisher", 196 New Moor Street, Colombo 12. and
Printed by C.R.C Press, 119 University Road, Rattanapitiya, Boralesgamuwa.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்